விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 கார்த்திகை 23 புதன்கிழமை (09.12.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 355

உலகெங்குமுள்ள உறவு
களுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப
நாட வேண்டிய ஒரே இடம்
ஸ்ரீமுருகன்
தொலைத்தொடர்பகம்
303.கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம்
T.P.No : 021 222 5392
(C-2909)

# படையினரின் அனுசரணையில் வடக்குக்கு போதைப் பொருட்கள்

## எடுத்துவரப்படுவதாக விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கிலுள்ள ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இராணுவம் மற்றும் பொலிஸாரின் கண்க ளில் மண்ணைத் தூவிவிட்டு போதைப் பொரு ட்கள் வட மாகாணத்துக்குள் எவ்வாறு கடத் தப்படுகின்றன என கேள்வியெழுப்பியுள்ள முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், இவர் களின் அனுசரணையுடன்தான் போதைப் பொருட்கள் இங்கு எடுத்து வரப்படுவதாக தாம் சந்தேகிப்பதாக தெரிவித்துள்ளார்.

யாழ்.சமூக செயற்பாட்டு மையம நடத்தும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு நிகழ்வு நேற்று காலை பத்து மணியளவில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மிக முக்கியமான ஒரு கருத்தை

23ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவத்திடம் ஒப்படைத்த எம் உறவுகளை காணவில்லை!



(யாழ்ப்பாணம்) யுத்தத்தின் முடிவில் பலர் பார்த்திருக்க இராணுவத் திடம் ஒப்படைத்த எமது பிள்ளைகள், கணவன்மாரை 23ஆம் பக்...

## யாழில் எச்.ஐ.வி பரிசோதனை

(வவுனியா)

யாழ்ப்பாணத்தில் எச்.ஐ.வி. பரிசோதனை நிலையத்தை அமை க்க நடவடிக்கை மேற்கொண்டுள் ளதாக வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரி வித்தார்.

வவுனியா வைத்தியசாலையில நேற்று இடம்பெற்ற எயிட்ஸ் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து

23ஆம் பக்கம் பார்க்க....

## இல.அகதிகளுக்கு உணவுத் தட்டுப்பாடு

(சென்னை)

கடந்த சில தினங்களாக சென் னையில் பெரும் பேரவலத்தினை ஏற்படுத்திய, மழை மற்றும் வெள் ளம் காரணமாக புழல் இலங்கை அகதிகள் முகாமில் உணவிற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

புழலை ஒட்டிய காவாங்கரையில அமைந்துள்ள குறித்த அகதிகள்

24ஆம் பக்கம் பார்க்க....

## மாகாண சபைக்கு அதிகாரங்களை வழங்குங்கள்

(யாழ்ப்பாணம்)

மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்கி மாகாண சபைகளை அரசு பலப்படுத்த வேண டும் என தமிழ்க் கூட்டமைப்பின் நாடா

டும் என தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பெருநகர மற்

24ஆம் பக்கம்.பார்க்க....

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக

23ஆம் பக்கம் பார்க்க....

திடம் ஒப்படைத்த எமது பிள்ளைகள், கணவன்மாரை

23ஆம் பக்...

# தொலைபேசிகளை இனாமாக வழங்கி பெண்களை துஷ்பிரயோகிக்கும் அவலம்

## விழிப்படைந்திருக்குமாறு முதலமைச்சர் எச்சரிக்கை

(கிளிநொச்சி)


வன்னியில் வலோத்காரமாக இளம் விதவைப் பெண்களிடம் கையடக்கத் தொலைபேசிகள் இனாமாகக் கொடுக்கப்பட்டு அப்பெண்கள் சிலரின் சந்திப்புக்காக அழைக்கப்படும் அவலம் நடைபெறுவதாக வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தகவல் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறையிட முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.சமூக செயற்பாட்டு மையம நடத்தும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு நிகழ்வு நேற்று காலை பத்து மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பல கைத்தொலைபேசிகள் வன்

24ஆம் பக்கம் பார்க்க....



## அதிகாரத்தை பகிர சிங்களவர்கள் விருப்பம்

(கொழும்பு)

அதிகாரத்தைப் பகிர வேண்டுமென 68 வீதமான சிங்களவர்கள் விரும்புகின்றார்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நிறுவனமொன்றின் ஊடாக நடத்தப்பட்ட ஆய்வின் மூலம இந்த தகவல்கள் கிடைக்கப் பெற்றன என அவர் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் எதிர்ப்புப் பேரணி

(கொழும்பு)

சர்வதேச ஊழல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் தேசிய நிகழ்வு மறறும் பேரணியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையில இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சர்வதேச ஊழல் எதிர்ப்பு பேரணி மாலை 3 மணியளவில் விஹாரமஹாதேவி பூங்காவிற்கு அருகில் ஆர

23ஆம் பக்கம் பார்க்க....

## கிளிநொச்சியில் மீண்டும் வெள்ளம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக நேற்று முன்தினம் நள்ளிரவு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

இரவிரவாக பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் வீடுக

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜெயக்குமாரி உட்பட 11 பேரின் வழக்கு

(கொழும்பு)

பாலேந்திரன் ஜெயக்குமாரி உள்ளிட்ட 11 பேரிடமும் இருந்து கைப்பற்றப்பட்ட, விசாரணைக்கு தேவைப்படாத சான்றுப் பொருட்களை அவர்களிடம் மீளக் கையளிக்குமாறு கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்றம் நேற்றையதினம் உத்தரவிட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின கீழ் மீள் உருவாக்கத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கடுமையான நிப

23ஆம் பக்கம் பார்க்க....

# நாடு முழுவதும் கடும் மழை வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த சில நாட்களாக நாடு முழுவதும் பெய்த கடும் மழை காரணமாக 60 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுமார் 2ஆயிரத்து 300 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களிலேயே அதிகமான வீடுகள் மற்றும் அதிக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, நேற்றைய தினம், சுமார் 15 மாவட்டங்களில் மழை பெய்ததுடன் கடற்பிரதேசங்களில்,

23ஆம் பக்கம் பார்க்க....

# திருடப்பட்ட தேர்ச் சிற்பங்கள் மீட்பு

## 4 பேர் கைது



(யாழ்ப்பாணம்)

ஏழாலை பகுதியில் ஆலய தேர்ச் சிற்பங்கள் மற்றும் சிலைகளை திருடி சென்ற நால்வரை கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து முச்சக்கர வண்டியும் களவாடிய பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸ்மந்த தெரிவித்துள்ளார்.

மல்லாகத்தை சேர்ந்த குறித்த நால்வரும் முச்சக்கர வண்டியொன்றில் இந்து ஆலய தேரில் காணப்படும் யாழி, 16 பாவை, 4 நநதி, 1 யாழி உருவ சிலைகள் போன்றவற்றை களவாடிக்கொண்டு செல்லும் போதே ஏழாலை பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த பொருட்கள் எந்த ஆலயத்திற்குரியவை என்பது தொடர்பாக முழுமையான விபரம் கிடைக்காத நிலையில் ஆலயங்களில் பொருட்கள் ஏதாவது காணாமல் போயிருந்தால் அவ் ஆலய நிர்வாகத்தினர் உடனடியாக சுன்னாகம் பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறும் பொறுப்பதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்த சுன்னாகம் பொலிஸார், குறித்த நால்வரையும் மல்லாகம் நீதிமன்றில் விரைவில ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்தனர். (செ-4)

---

# Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna, Sri Lanka

# (திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)

**கலைமாணி பட்டப்படிப்பு 2013/2014 (வெளிவாரி) (புதிய பாடத்திட்டம்)**

Bachelor of Arts Degree Programme-2013/2014 (External) (New Syllabus)
(Semester Based Course Unit system and Grade Point Average Evaluation)

## புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை-2013

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த கலைமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**

- க.பொ.த. (உ/த) பரீட்சை -2013 அல்லது அதற்கு முன்னர் அங்கீரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருப்பதுடன்
- பொது அறிவுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 30% மான புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

அல்லது

- தேசிய கல்வியல் கல்லூரியில் கற்பித்தலில் டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றவர்கள்

அல்லது

- ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்றப்பட்ட அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள்

அல்லது

- பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய மேற்குறித்த தகைமைகளுக்கு தொடர்புடைய அல்லது சமமானது என கருதப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள்.

**மாணவர் தெரிவு:**

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:**

1.விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 ஐ செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டை சமர்ப்பித்து யாழ்.பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட, ரூபா 500க்கான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25 X 20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ள முடியும்.

2.விண்ணப்பப்படிவத்தினை www.jfn.ac.lk/codl எனும் இணைய முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும் உதவிப்பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "கலைமாணி பட்டப்படிப்புக்கான விண்ணப்பம்- 2013/2014" என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 01.02.2016 (திங்கட்கிழமை). (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
08.12.2015

(சி-2713)

---

## சீருடை வழங்கலுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

கிளிநொச்சி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளின் கூப்பன் அடிப்படையிலான சீருடைத்துணிக்காக இதுவரை பதிவு செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விபரம் கீழ் இணைக்கப்பட்டுள்ளது. இவ்வழங்குநர்களிடம் மட்டும் கொள்வனவு செய்யமுடியும் என பாடசாலை அதிபர்களுக்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் அறிவுறுத்தப்படுகின்றது. மேலதிக விபரங்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வித்தியா புடவையகம்-இல.05, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
சிந்து புடவையகம்-இல.05, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
லக்சுமி புடவையகம்-இல.30 பொதுச்சந்தை, கிளிநொச்சி
சாரதாஸ் புடவையகம்-இல.48 பொதுச்சந்தை, கிளிநொச்சி
முத்தப்பிள்ளையார் வண்ணச்சோலை- A9 வீதி, கிளிநொச்சி
யது புடவையகம்-சந்தையடி, வட்டக்கச்சி
நியூ புவனேஸ்வரி புடவையகம்-இல.05 கனகபுரம் வீதி, கிளிநொச்சி
கமீஸ் தையலகம்-முல்லை வீதி, பரந்தன்
காயத்திரி புடவையகம்- A9வீதி, நீதிமன்றம் முன்பாக, கிளிநொச்சி
தேஜா புடவையகம்-பொதுச்சந்தை, ஸ்கந்தபுரம்
எழில் ரெஸ்ரைல்ஸ்-முல்லை வீதி, புன்னைநீராவி
கஜனி புடவையகம்-462/10 முல்லை வீதி, தர்மபுரம்
குமரன் புடவையகம்- A9 வீதி, கிளிநொச்சி
தும்பிக்கையான் அழகுசாதன புடவையகம்-நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்
பிள்ளையார் அருள் வண்ணச்சோலை- A9 வீதி, கிளிநொச்சி
பிள்ளையார் புடவையகம்- A9 வீதி, பளை
குமார் புடவையகம்-ஜெயபுரம் தெற்கு, பல்லவராயன் கட்டு
பரந்தாமன் புடவையகம்-கனகபுரம், கிளிநொச்சி
நியு அரபாஸ்-இல.05, கனகபுரம், கிளிநொச்சி
கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்-கனகபுரம் வீதி, கிளிநொச்சி
சிறிகுமரன் பட்டு மாளிகை- A9 வீதி, கந்தசாமி கோவில் அருகாமை
மகாலட்சுமி புடவையகம்-வாடியடி பூநகரி
கைலாயநாதன் புடவை வாணிபம்-பொதுச் சந்தை, கிளிநொச்சி
ராதா டெக்ஸ் ரைல்- A9வீதி, கிளிநொச்சி
ராதா டெக்ஸ் ரைல்- பொதுச் சந்தை, கிளிநொச்சி
வனமாறன் புடவை வாணிபம்- 42 பொதுச்சந்தை , கிளிநொச்சி
சிட்டி சொய்ஸ்- இல.05, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
யு.கே.புடவையகம்- 114/2 முல்லை வீதி, தர்மபுரம்
சிறிசாரதாஸ் புடவையகம்- 56/3 ஆனந்தபுரம் A9 வீதி, கிளிநொச்சி
கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் இராமநாதபுரம் மத்தி, இராமநாதபுரம்.
கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம் பரந்தன்
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம் பளை
அக்கராயன் ப.நோ.கூ.சங்கம் அக்கராயன்
பூநகரி ப.நோ.கூ.சங்கம் பூநகரி
அம்மன் புடவை வாணிபம் மன்னார் வீதி, நாச்சிக்குடா

**வலயக் கல்வி பணிப்பாளர்**
**வலயக் கல்வி அலுவலகம்**
**கிளிநொச்சி.**

(C-2911)

---

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

---

## வீடு தேவை

நல்லூர் பிரதேசத்தில் வாடகைக்கு வீடு தேவை.

**தொடர்புகளுக்கு:-**
**0773314262**

(2722)

---

## காணி விற்பனைக்கு

A9 வீதி நுணாவில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பருத்தித் துறை வீதியில் துர்க்கை அம்மன் கோவில் பாதை ஆரம்பத்தில் 27 பரப்பு காணியும், உடைந்த வீடு கிணற்றுடனும் 7 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்களுக்கு:-0778730129**

(2724)

---

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

### வரவு செலவு திட்டம்-2016

1987ம் ஆண்டு மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் (252), (212) பி பிரிவின் பிரகாரம் 2016ஆம் ஆண்டிற்கு கிடைக்கக் கூடிய வருமான மதிப்பீட்டினையும் உத்தேச செலவின் விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்.மாநகராட்சி மன்றத்தின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம். 09.12.2015 தொடக்கம் 15.12.2015 வரை மாநகர சபை அலுவலம், பிரதான பொது நூலகத்திலும் அலுவலக நேரத்தின் போது பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

**திரு.பொ.வாகீசன்**
**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

(சி-2914)

# யாழில் விவசாய உற்பத்தி வலயம் ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை

## அரச அதிபர் வேதநாயகன் தகவல்

யாழ்.மாவட்டத்தில் விவசாய உற்பத்தி வலயம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித் துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் சந்தைவாய்ப்பை ஏற்படுத்துதல் தொடர்பாக ஆரம்ப கைத்தொழில் அமைச்சர் தயா கமகே தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடல் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்திலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய உற்பத்திப் பொருட்களை இனம் கண்டு அவற்றின் உற்பத்தியை அதிகரித்தும் அதனூடாக சந்தை வாய்ப்பை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எமது மாவட்டத்தில் பல விவசாயிகள் தாம் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்ய முடியாமல் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.



எனவே அவர்களுக்கென நிலையான ஒரு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதற்காக அமைச்சர் தலைமையில் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக எமது மாவட்டத்திலிருந்து திராட்சை, பப்பாசி, வாழை, இஞ்சி போன்றவற்றின் உற்பத்தியை அதிகரித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்ப கைத்தொழில் அமைச்சினூடாக மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ்.மாவட்டத்தில் விவசாய உற்பத்தி வலயத்தினை ஆரம்பிப்பதற்குரிய தேவைகளை இனம் கண்டு அவற்றுக்கான உதவிகளை பெற்றுக் கொள்வதுடன் உற்பத்திகள், சந்தைவாய்ப்புக்களுக்கான மாற்று நடவடிக்கைகள் மற்றும் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும் அமைச்சருடன் இத் துறை சார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## நீதிபதிகளுக்கு இடமாற்றம்

நாட்டிலுள்ள நீதிமன்றங்கள் பலவற்றில் கடமையாற்றும் நீதிபதிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## தீப்பெட்டிக்கு தட்டுப்பாடு

சீரற்ற காலநிலை காரணமாக நாடளாவிய ரீதியில் தீப்பெட்டிக்கு பாரியளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. கொழும்பில் கடந்தவாரம் இடம்பெற்ற வர்த்தக மன்ற கலந்துரையாடலின் போது இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தீப்பெட்டி தயாரிப்பிற்கான மூலப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்டுள்ள தடைகள், உற்பத்தியில் ஏற்பட்டுள்ள இடர்பாடுகள் இதற்கு பிரதான காரணமாகவுள்ளது என தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதி கைதர் அலி தெரிவித்தார். (இ

## ஜனாதிபதி ஆணைக்குழு

# காணாமற் போனோர் குறித்த விசாரணைகளை யாழில் முன்னெடுக்க இனி அனுதிக்கமாட்டோம்

## பாழாய்ப்போன பரணகம ஆணைக்குழு எமக்கு வேண்டாம்







**(யாழ்ப்பாணம்)**

**காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் யாழ்.மாவட்டத்தில் மீண்டும் இடம்பெறுமாகயிருந்தால் அந்த ஆணைக்குழுவின் விசாரணைகளை புறக்கணித்து எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் பாழாய்ப்போன பரணகம ஆணைக்குழு எமக்கு வேண்டாம் எனவும் காணாமற் போனவர்களின் உறவினர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதியில் இருந்து 16 ஆம் திகதி வரை காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துவரும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகள் நடைபெறவுள்ள நிலையில் அந்த விசாரணைகளை புறக்கணிப்பு செய்யப் போவதாக நேற்றையதினம் வட. கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 8 மாவட்டங்களிலும் இருந்து காணாமற் போனவர்களின் உறவினர்கள் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இக் கலந்துரையாடலில் காணாமற் போனவர்களின் உறவினர்கள், சிவில் சமூக அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட உறவுகளின் கருத்துக்கள் பரிமாற்றப்பட்டன.

இதன் பின்னர் வட.கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவுகளால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

குறித்த அறிக்கையை வெளியிட்ட பின்னர் யாழ்.வீரசிங்கம் மண்டப முன்றலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். (இ-9)

## புதையல் தோண்டியவர்களுக்கு 17-ம் திகதிவரை விளக்கமறியல்

### நடிகை, பொலிஸ்,சட்டத்தரணி அழைப்பாணை

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் கடந்த மாதம் 20 ஆம் திகதி தங்க நகை புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட நான்கு நபர்களையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட வேண்டியிருந்த கே.கே.எஸ்.கலியாணரத்ன என்ற நடிகைக்கும் கெமுனு தர்மதாச என்ற சட்டத்தரணிக்கும் நிமால் ரட்ணாயக்க என்ற பொலிஸ் அதிகாரிக்கும் நீதிமன்றின் மூலம் மன்றுக்கு வருமாறு அழைப்புக் கட்டளை அனுப்பியும் மன்றுக்கு சமூகம் தராத காரணத்தினால் அம் மூவரையும் உடனடியாக கைது செய்யுமாறும் இதன்போது உத்தரவிடப்பட்டது.

வடமராட்சிக்கிழக்கு மணற்காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் காலத்தில் தங்க நகைப் புதையல் புதைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு அதனை தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட ஒரு குழுவினரை நெல்லியடி பொலிஸார் கடந்த மாதம் 20 ஆம் திகதி கைது செய்திருந்தனர். இது தொடர்பான வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் தொடரப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் குறித்த வழக்கு விசாரணை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது பொலிஸாரினால் மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் சமர்ப்பணங்களுக்கு அமைவாகவே மேற்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. (இ-5-60)

## 790 வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத்தாக்கல்

கடந்த 15 ஆம் திகதிக்குள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சட்டத்துக்கு முரணாக செயற்பட்ட 790 வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை அறிவித்துள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருட்களின் விலை குறைப்பின் நன்மையை நுகர்வோரை அடைய விடாமல் செயற்படும் வியாபாரிகளுக்கு எதிராகவே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

இதற்கு மாற்றமாக தரம் குறைந்த, விற்பனைக்குதவாத பொருட்களை வைத்திருந்த வியாபாரிகளும் இந்த சுற்றிவளைப்பின் போது இனம் காணப்பட்டுள்ளதாகவும் அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## ஊழல் மோசடிகளை விசாரிக்கும்

# ஆணைக்குழுவின் விசாரணைகளில் தலையிட்டவர்களிடமும் விசாரணை

பாரிய மோசடிகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளில் தலையீடு செய்த நபர்கள் குறித்து விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாரிய மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு உதவும் வகையில் பொலிஸ் பரிசோதகர் பிரதீப் மெண்டிஸ் அபேசேகர என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு தொலைபேசி அழைப்புகளை எடுத்துள்ள சிலர் தங்களை மெண்டிஸ் அபேசேகரவாக இனம் காட்டிக்கொண்டு ஆணைக்குழு விசாரணைகள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ள முயற்சித்துள்ளனர்.

இவ்வாறான ஒன்பது நபர்களின் தொலைபேசி இலக்கங்கள் தற்போது பொலிஸாரிடம் சிக்கியுள்ளது. இது குறித்து நீதிமன்றத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த தொலைபேசிகளின் உரிமையாளர்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டு தகவல்களைத் திரட்டுமாறு பணிப்புரை விடுத்துள்ள கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலபிட்டிய, இது தொடர்பான வழக்கை எதிர்வரும் ஜனவரி 20ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (இ-7)

# ஆஸியை வீழ்த்திக் காட்டுவோம் மே.தீவுகளின் அம்புரோஸ் எச்சரிக்கை




அவுஸ்திரேலியாவுக்கு எதிராக வெற்றி பெறும்போது எங்களை பற்றி விமர்சனம் செய்தவர்கள் வெட்கி தலைகுனிவார்கள் என மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் வீரர் அம்புரோஸ் எச்சரித்துள்ளார்.

மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக மேற்கிந்திய தீவுகள் அணி அவுஸ்திரேலியா சென்றுள்ளது.

இவ்விரு அணிகளுக்கு இடையிலான பயிற்சி ஆட்டத்தில் 10 விக்கெட் வித்தியா சத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி தோல்வி அடைந்தது.

இதனையடுத்து அந்த அணியை மீடியாக்கள் விமர்சனம் செய்து வருகின்றன.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அந்த அணியின் பந்து வீச்சு ஆலோசகரும், முன்னாள் அதிவேக பந்து வீச்சாளருமான அம்புரோஸ் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் கூறுகையில், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் நாங்கள் வெற்றி பெறும் போது எங்களை பற்றி விமர்சனம் செய்தவர்கள் வெட்கி தலைகுனிவார்கள்.

நிச்சயம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம், நாங்கள் இங்கு விளையாடவே வந்துள்ளோம்.

நீங்கள் நினைப்பதைவிட அதிகமாக செய்து காட்டுவோம், தெரிவிக்கப்படும் கருத்துக்கள் ஆக்கபூர்வமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (க)

# இந்திய டெஸ்ட் வீரர்களுக்கு 2 கோடி ரூபாய் அன்பளிப்பு




இந்திய- தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரை இந்தியா 3-0 என கைப்பற்றியது. இதனால் டெஸ்ட் தரவரிசையில் 2-வது இடத்திற்கு முன்னேறியது.

இந்திய வீரர்களின் செயல்பாட்டை பாராட்டும் வகையில் இந்திய அணிக்கு பி.சி.சி.ஐ ரூ.2 கோடி அன்பளிப்பு அளித்து கௌரவித்துள்ளது.

டில்லியில் நேற்றுமுன்தினம் முடிந்த 4-வது மற்றும் கடைசி போட்டியில் இந்தியா 337 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மொகாலியில் நடைபெற்ற முதல் டெஸ்டில் 108 ஓட்டங்களிலும், நாக்பூரில் நடைபெற்ற 3-வது போட்டியில் 124 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் இந்திய அணி அபார வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

பெங்களூருவில் நடைபெற்ற 2-வது டெஸ்ட் மழை காரணமாக சமநிலை ஆனது. (க)

# டெஸ்ட் தரவரிசை ஜடேஜா முன்னேற்றம்





இந்திய- தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 3-0 எனத் தொடரை கைப்பற்றியது. இந்த தொடரில் இந்தியாவின் சுழற்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தினர். சமனிலையான பெங்களூர் டெஸ்டையும சேர்த்து தென்னாபிரிக்காவின் 70 விக்கெட்டுக்களில் அஸ்வின்-ஜடேஜா ஜோடி 54 விக்கெட்டுக்களை அள்ளியது.

23 விக்கெட்டுக்கள் வீழ்த்திய ஜடேஜா டெஸ்ட தரவரிசையில் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளார். கடைசி டெஸ்டில் 7 விக்கெட்டுக்கள் வீழ்த்திய அவர் 11-வது இடத்தில் இருந்து நான்கு இடங்கள் முன்னேறி 7-வது இடத்தை பிடித்துள்ளார். 31 விக்கெட் எடுத்த அஸ்வின் 871 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் உள்ளார். ஸ்ரெயின் 4 புள்ளிகள் கூடுதல் பெற்று 875 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். ஆல் ரவுண்டர் தரவரிசையில் அஸ்வின் முதல் இடத்தில் உள்ளார்.

டில்லி டெஸ்டில் இரண்டு இன்னிங்சிலும் சதம் அடித்த ரஹானே 14 இடங்கள் முன்னேறி 12-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். 5 விக்கெட்டுக்கள் வீழ்த்திய உமேஷ் யாதவ் 13 இடங்கள் முன்னேறி 32-வது இடத்தை பிடித்துள்ளார்.

விராட் ஹோலி 2 இடங்கள் முன்னேறி 14-வது இடத்தை பிடித்துள்ளார். முரளி விஜய் நான்கு இடங்கள் பின்தங்கி 16-வது இடத்திலும், புஜாரா 2 இடங்கள் பின்தங்கி 17-வது இடத்திலும் உள்ளனர். (க)

# சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு பதிலாக புனே, ராஜ்கோட் அணிகள் தேர்வு




இந்திய கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் ஐ.பி.எல். இருபது-20 லீக் தொடருக்கு அமோக வரவேற்பு உள்ளது. கடந்த 2013-ம் ஆண்டு நடைபெற்ற லீக் தொடரின்போது மேட்ச் பிக்சிங் முறைகேடு நடைபெற்றதாக சென்னை, ராஜஸ்தான் அணிகள் இரண்டு ஆண்டுகள் போட்டிகளில் பங்கேற்க தடைவிதிக்கப்பட்டது.

இதனால் இந்த இரண்டு அணிகளுக்குப் பதிலாக மாற்று இரண்டு அணிகளை தேர்ந்தெடுக்க டெண்டர் விடப்பட்டது. இந்த டெண்டர் நேற்று திறக்கப்பட்டது.

இதில் அடுத்த வருடம் (2016 சீசன்) புனே என்ற பெயரில் ஒரு அணியை நடத்துவதற்கான உரிமையை தொழிலதிபர் சஞ்சீவ் கோயன்காவின் நியூ ரைசிங் நிறுவனம் பெற்றுள்ளது. அதேபோல் இன்டெக்ஸ் என்ற செல்போன் தயாரிப்பு நிறுவனம் ராஜ்கோட் அணியை வாங்கியுள்ளது.

புனே அணிக்கான உரிமத்தை வாங்குவதற்காக நியூ ரைசிங் நிறுவனம் மைனஸ் 16 கோடி ரூபாய்க்கு ஏலம் கேட்டதால், பிசிசிஐ-க்கு 16 கோடி ரூபாய் கொடுக்கவேண்டும். இதேபோல் ராஜ்கோட் அணிக்காக மைனஸ் 10 கோடி ரூபாய்க்கு ஏலம் கேட்டு தேர்வான இன்டெக்ஸ், பிசிசிஐ-க்கு 10 கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (க)



# பிறிமியர் பட்மிண்டன் லீக்; சென்னை அணியை வாங்கினார் விஜயகாந்த் மகன் விஜய பிரபாகரன்

பிறிமியர் பட்மிண்டன் லீக் அணிகளுக்கான ஏலம் நேற்றுமுன்தினம் டில்லியில் நடைபெற்றது. இதில் சென்னை அணியை நடிகரும் தே.மு.தி.க. தலைவருமான விஜய காந்தின் மூத்த மகன் விஜய பிரபாகரன் வாங்கியுள்ளார். இதற்கு சென்னை ஷ்மாஷர்ஸ் என்று பெயர் சூட்டியுள்ளார்.

சென்னை அணியில் விளையாட பி.வி. சிந்து, சிக்கிரெட்டி, ஜெர்ரி சோப்ரா, கிருஷ்ண பிரியா ஆகிய இந்திய வீரர்களும், சோனி, சைமன்சன்டோசோ, பியா ஆகிய இந்தோனேஷிய வீரர்களும், மேலும் இங்கிலாந்தை சேர்ந்த கிரிஷ் ஆட்காக், பிரான்ஸை சேர்ந்த பிரிஷ், கனடாவை சேர்ந்த டோபி ஆகியோர் தேர்வாகியுள்ளனர்.

இந்த பிறிமியர் லீக் பட்மிண்டன் போட்டி தொடக்க விழா நிகழ்ச்சியோடு வரும் ஜனவரி 2-ம் திகதி மும்பையில் ஆரம்பமாகிறது. இப்போட்டி மும்பையில் தொடங்கி சென்னை, ஐதராபாத், பெங்களூரு ஆகிய இடங்களில் நடைபெறுகிறது, 'இதன் இறுதி போட்டி டில்லியில் நடைபெறுகிறது.

சென்னை அணியின் பயிற்சியாளர் உள்ளிட்ட பொறுப்புகளில் இன்னும் யார் யார் இடம்பெறுவார்கள் என்பதனை விரைவில் பத்திரிகையாளர் சந்திப்பில் அறிவிப்பேன் என்றும், சென்னை ஷ்மாஷர்ஸ் அணி இந்த தொடரின் இறுதி போட்டியில் வெற்றி பெற்றால் அதில் 50% தமிழகத்திற்கு வெள்ள நிவாரண நிதியாக அளிப்பேன் என்றும் அணியின் உரிமையாளர் விஜய பிரபாகரன் தெரிவித்துள்ளார். (க)



# கடற்றொழிலாளர்கள் போராட்டம்



(கரணவாய்)

கூட்டுறவு உதவி ஆணையாளரின் வாகனத்தை முற்றுகையிட்டு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் போராட்டம் ஒன்றினை நேற்று முன்தினம் நடத்தியிருந்தனர்.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவரை மாற்றியமையை கண்டித்தே கடற்றொழிலாளர்களால் மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த பிரதேசத்திலிருந்து கடல் நீரை சுத்தி கரித்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் வழங்கும் திட்டத்தினை வடமாகாண சபை முன்னெடுத்துள்ளது. இதன்மூலம் யாழ்ப்பாணத்திற்கான குடிநீரினை பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டது.

குறித்த கடல் நீரை சுத்திகரிக்கும் திட்டத்திற்கு ஏற்கனவே இருந்த சமாச நிர்வாகம் எதிர்ப்பு தெரிவித்து வந்தது. குறித்த நிர்வாகத்தினை மாற்றம் செய்து ஒப்புதல் பெற்று கொள்வதற்காகவே, தலைவர் உள்ளிட்டவர்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.


புதிதாக தலைமைப் பொறுப்பினை கூட்டுறவு அமைச்சினால் வழங்கப்பட்டவர்களுக்கும் கடற்றொழிலுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது எனவும், குறித்த மூன்று பேரும் அரச உத்தியோகத்தர்கள் எனவும் பிரதேச மக்கள் குற்றம் சாட்டினர்.

15 சங்கங்கள் ஒன்றிணைந்து சமாசத்தினை தெரிவு செய்ததாகவும், குறித்த சமாசத்தின் புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமை தமக்கு தெரியாது எனவும் போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனா.

எது எவ்வாறு இருப்பினும், நீர் எடுத்து செல்வதற்காகவே தலைமைப் பதவி பிரிதொருவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தாம் சந்தேகிப்பதாகவும், அவ்வாறு ஒப்புதல் ஒப்பம் பெறப்படின் தாம் அதை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் தெரிவிக்கும் மக்கள், இனி வரும் காலங்களில் அதற்கெதிராக போராட்டங்களை முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மக்கள் தொடர்ந்தும் குறித்த வாகனத்தினை கூட்டுறவு அலுவலகத்திற்கு செல்ல அனுமதிக்காமையால், உதவி ஆணையாளர் திரும்பி சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இது தொடர்பில் யாழ். உயர் நீதிமன்றத்திலும் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிலும் வழக்குத் தொடரப்படும் என கடற்றொழிலாளர்களால் தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5-15-60)



# மரண அறிவித்தல்

சாவகச்சேரி கோவில் குடியிருப்பை பிறப்பிடமாகவும்,
மீசாலை கிழக்கை (சித்திரவேலாயுதர் கோவிலடி) வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

## செல்லர் இராசமணி அவர்கள்

*கடந்த **06.12.2015** ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - தெய்வானை தம்பதியரின் அன்புப் புதல்வனும், கணபதி - பார்வதி தமபதியரின் மருமகனும மற்றும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இலட்சுமி, சுப்பிரமணியம மற்றும் சரஸ்வதி, இராசம்மா (பிரான்ஸ்), மகேஸ்வரி, பூபதி, இரத்தினம் (பிரான்ஸ்), மகேந்திரன் (கட்டட ஒப்பந்தகாரர்), காலஞ்சென்ற கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரனும், இரவிக்குமார் (முகுந்தன்- பிரான்ஸ்), சிவாஜினி (தாதிய உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை), இராஜினி (திவிநெகும அபிவிருத்தி உத்தி யோகத்தர் பிரதேச செயலகம்- சாவகச்சேரி), சதீஸ்குமார் (அப்பன் - கட்டட ஒப்பந்தகாரர் அச்சுவேலி), சுதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகேஸ்வரி (பேபி - பிரானஸ்), அமலதாஸ் (பிரான்ஸ்), கெங்கேஸ்வரன் (முன்னாள கூட்டுறவுச்சங்க உத்தியோகததர்), அகிலா (அச்சுவேலி), றொபின்சன அமலதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌசல்யா, கெல்வின், கவிசயன், மதுசங்கர், மதுராங்கி, மேதவன், கபூசன், தக்சாயினி, தக்சிகன், றொனிசாந், டெனிசியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.*

*அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (**09.12.2015**) புதன்கிழமை முற்பகல் **10.00** மணிக்கு அவரது இலலத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.*

மீசாலை கிழக்கு,
மீசாலை.

077 558 0647,
077 316 1389

குடும்பத்தினர்

(C-2715)

# ராசி பலன்

**09.12.2015**

(கார்த்திகை 23, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.10மணிக்கு,
திரயோதசி பிற்பகல் 2.38 மணிவரை
விசாகம் முன்னிரவு 11.42 மணிவரை
இராகுகாலம் 12.18-1.48 மணிவரை
சுபநேரம் 4.48-6.18 மணிவரை
சித்தாமிர்தம் வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் ரேவதி, அச்சுவினி மாலை 5.03 இற்கு விருச்-சந் | | |
| | | | குரு |
| புத | சூரி சனி | சுக் சந் | ராகு செவ் |

**மீனம்** எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், பொருட் சேர்க்கைக்கு அத்திபாரமிடுவீர்கள், உடல் நலன் சீராகும், வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்** தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம், வீண் பழிகள் அகலும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கடகம்** தொலை தூரத்திலிருந்து சுபதகவல்கள் வந்து சேரலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், மனதில் நீண்ட நாட்களாக இருந்து வந்த பாரம் குறையும், பயணங்கள் நன்மை தரும்.

**மகரம்** தேகநலனில் அக்கறை காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**சிம்மம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், ஆதாயம் அதிகரிக்கும் நாள், குடுபத்தில் நல்ல காரியங்கள் நடை பெறுவதற்கான வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** பிரச்சினைக்ளிலிருந்து விடுபடுவீர்கள், தூர தேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** தெய்விக சிந்தனை மேலோங்கும் நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயன சுகக் குறைவான நாள், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம் பெறலாம்.

**துலாம்** பக்கபலமாக நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பிள்ளைகளுக்காக செலவு செய்து மகிழ்வீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**கன்னி** விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வருமானத்தை அதிகரிக்க அதிக பிரயாசை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

# அரசாங்கத்தின் நல்ல திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் கஜந்த அறிவிப்பு

(கொழும்பு)

**எந்த அரசாங்கத்தினதும் நல்ல திட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என ஊடக அமைச்சர் கஜந்த கருணாதிலகக தெரிவித்துள்ளார்.**

ஜே.ஆர்.ஜயவர்தன அரசாங்கம் இலவசமாக பாடநூல்களை வழங்கியிருந்தது. அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அதனை தொடர்ச்சியாக முன்னெடுத்தன.

ரணசிங்க பிரேமதாச அரசாங்கம் இலவசமாக பாடசாலை சீருடை வழங்கியது. அந்த திட்டத்தையும் ஏனைய அரசாங்கங்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்தன.

நாம் சற்றே முன்னோக்கி நகர்ந்து வவுச்சர் முறையில் மாணவ மாணவியருக்கு சீருடைகளை வழங்குகின்றோம்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மகிந்தோதய ஆய்வு கூடங்களை அமைத்தது.

நாம் அரசாங்கம் என்ற ரீதியில் இந்த திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்போம்.

நல்லவற்றை மாணவ மாணவியருக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என அண்மையில் ஹினிதும பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

# உள்நாட்டு விமான போக்குவரத்துக்கு புதிதாக மூன்று விமான நிலையங்கள்

## அமைச்சர் நிமால் அறிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு விமானப் போக்குவரத்தை விரிவுபடுத்தும் வகையில் எதிர்வரும் ஆண்டு மூன்று புதிய விமானநிலையங்களை அமைக்கவுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அறிவித்துள்ளார்.

புத்தளம், பாலாவியில் அமைந்துள்ள விமானப் படை விமான நிலையத்துக்கு கண்காணிப்பு விஜயமொன்றை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் திங்கட்கிழமை மேற்கொண்டிருந்தார்.



இதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர், புத்தளம், பதுளை மற்றும் திகணையில் அடுத்த வருடத்துக்குள் உள்நாட்டுப் போக்குவரத்துக்கான சிறிய விமான நிலையங்கள் மூன்று அமைக்கப்படும்.

அத்துடன் கற்பிட்டி மற்றும் வில்பத்து பிரதேசங்களின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக பாலாவி விமானப்படை விமான நிலையமும் அபிவிருத்தி செய்யப்படும் என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (இ-7)

# சர்வ மதத்தலங்களில் கையெழுத்து வேட்டை

யாழ்ப்பாணம் சர்வமத குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கையெழுத்துப்போராட்டம் ஒன்று நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள சர்வமத வழிபாட்டுத் தலங்களில் காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம் பெற ஏற்பாடாகியுள்ளது. மனிதவுரிமைகள் தினமானதையதினம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கையெழுத்துப் போராட்டமானது யாழ்ப்பாணத்திலுள்ள இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம், பௌத்த சமய பிரதான மத்திய நிலையங்களில் இடம்பெறவுள்ளது.


இதற்கமைய நல்லூர் திருஞான சம்பந்தர் மண்டப முன்றலில், குருநகர் தூய யாகப்பர் ஆலய முன்றலில், ஆரியகுளம் ஸ்ரீ நாக விகாரை முன்றலில், யாழ்ப்பாணம் கேகேஎஸ் வீதியிலுள்ள இஸ்லாமிய பள்ளிவாசல் மற்றும் யாழ்.பிரதான பேருந்து தரிப்பிடம் போன்ற இடங்களில் இடம்பெறும்.

எனவே இக்கையெழுத்துப் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கு அழுத்தம் கொடுக்குமாறு சர்வமதக் குழுவினர் கேட்டுக் கொள்கின்றனர். மேலும் ஒவ்வொரு மக்களும் தங்களுக்கு வசதியான இடத்தில் தங்களது கையொப்பங்களை இடமுடியும்.

இந்நிகழ்வில் நல்லூர் ஆதீன சுவாமிகள், யாழ்.பேராயர் நாக விகாராதிபதி, ஜம் இய்யத்துல் உலமா சபைத் தலைவர் ஆகியோர் தமது கையொப்பங்களை இட்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைப்பார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## நோய் தீர்க்கும் நட்சத்திர மூலிகைகள்




துலாம் இராசிக்குரிய நட்சத்திரங்கள் சித்திரை, சுவாதி, விசாகம். நட்சத்திரங்களுக்குரிய மரங்கள் வில்வம், மருது , விளா. இவர்களுக்குப் பொதுவாக சிறுநீரகப் பாதிப்பு, வயிற்றுவலி, தோல்நோய், மூட்டுவலி, யானைக்கால், வலிப்பு, வாய்வுத் தொந்தரவு என்பன ஏற்படலாம்.

**மருதின் மருத்துவப் பயன்கள்**

இலைப் பொடியை ஆறாத ரணங்களின் மேல் தூவ ஆறும்.

பட்டைக் குடிநீரால் ஒற்றடம் கொடுத்துவர மூலநோயின் வேதனை குறையும்.

மருதம்வேர், ஊமத்தை வேர், பூவரசம் பட்டை மூன்றையும் எண்ணெயில் கலந்து காய்ச்சிப் பூசிவர சொறி, சிரங்கு, படை, தேமல், நமைச்சல் தீரும்.

பட்டையுடன் திப்பிலி சேர்த்துக் குடிநீர் செய்து கொடுக்க சுரம், இருமல், வாய்வு தீரும்.

**விளாவின் மருத்துவப் பயன்கள்**

விளாம்பழத்தின் சதையுடன் தேங்காய்ப்பாலும் பனங்கற்கண்டும் சேர்த்துக் கொடுக்க தொண்டைப்புண் தீரும்.

விளாம்பழத்தையும் வில்வம்பழத்தையும் கலந்து கஞ்சி போல் காய்ச்சி உண்டால் மூலநோயின் துன்பம் குறையும்.

பழச்சதையை தேனில் ஊறவைத்துச் சாப்பிட புளித்தேப்பம், வாய்நீர் ஊறல், பல் ஈறுகளில் உண்டாகும் புண் தீரும்.

விளா இலை, எலுமிச்சம் இலையை உலர்த்திப் பொடித்து தேய்த்துக் குளிக்கக் கற்றாழை நாற்றம் தீரும்.

விருச்சிக ராசிக்குரிய நட்சத்திரங்கள் விசாகம், அனுசம், கேட்டை. விளா, மகிழ், பிராய் நட்சத்திரங்களுக்குரிய மரங்கள். இவர்களுக்கு இரத்தச்சோகை, சிறுநீரக பாதிப்பு, கர்ப்பப்பை பாதிப்பு, மாதவிலக்கு பிரச்சினைகள், புண் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.

**மகிழின் மருத்துவப் பயன்கள்**

மகிழம்பட்டை, ஆலம்பட்டை, கருவேலம்பட்டை மூன்றையும் குடிநீர் செய்து கழுவிவர ஆறாத புண்கள் ஆறும். மகிழம்பட்டையை குடிநீர் செய்து வாய் கொப்பளிக்க வாய்ப்புண் ஆறும்.

விதையை சூரணித்து நெய் சேர்த்து உண்ண உடல் வன்மை பெருகும்.

**பிராயின் மருத்துவப் பயன்கள்**

சாதிக்காய், வாழைப்பூ இரண்டும் ஓரளவாய் எடுத்த பிராயின் இலைச்சாறு விட்டரைத்து மோரில் கொடுக்க வயிற்றுவலி, சீதக்கழிச்சல் தீரும்.

பிராய் மரப்பாலை மூல முளைகளில் பூசிவர மூல முளைகள் சுருங்கும். பிராயன் பாலால் பல்வலி, பித்த வெடிப்பு நீங்கும்.

தனுசு ராசிக்குரிய நட்சத்திரங்கள் மூலம், பூராடம், உத்தராடம். நட்சத்திர மூலிகைகள் மா, சீந்தில், பலா. இவர்களுக்குப் பொதுவாக செரியாமை, இடுப்புவலி, மூட்டு நோய்கள், காது நோய்கள், வாயுத் தொந்தரவு, நீரிழிவு போன்ற நோய்கள் ஏற்படலாம்.

**மாவின் மருத்துவப் பயன்கள்**

மாம்பழம் சிறுநீர்க்கட்டை நீக்கும். வியர்வையைப் பெருக்கும். உடலுக்கு வலுவைத் தரும். மாலைக்கண் பாதிப்பு தீரும். மாம்பட்டை/ இலைப்பால் பாதவெடிப்பை போக்கும்.

பூவை குடிநீரிட்டுக் கொடுக்க நாட்பட்ட சீதக்கழிச்சல் தீரும்.

இலையை தேன்விட்டு வதக்கி குடிநீரிட்டுக் கொடுக்க குரற்கம்மல் தீரும்.

**சீந்திலின் மருத்துவப் பயன்கள்**

சீந்தில் கொடியைக் குடிநீரிட்டுக் கொடுக்க இருமல், மூர்ச்சை வாந்தி தீரும்.

சீந்தில், சர்க்கரை, பெருஞ்சீரகம் இவற்றை சூரணித்து கலந்து தர உடல் எரிச்சலும் சுரங்களும் தீரும்.

சீந்தில், திப்பிலி, தூதுவளை மூன்றையும் குடிநீரிட்டுத் தரக் கசம் தீரும்.

**பலாவின் மருத்துவப் பயன்கள்**

இலைக்கொழுந்தை அரைத்துப் பூசச் சிரங்கு குணமாகும். வேரை அரைத்து பூச தோல் நோய்கள் தீரும். பலாப்பழச் சுளைகளை நெய்யில் தோய்த்துச் சாப்பிட உடல் வலுக்கும். வேரைக்குடிநீர் செய்து தர வயிற்றோட்டம் தீரும்.

மகரராசிக்குரிய நட்சத்திரங்கள் உத்தராடம், திருவோணம், அவிட்டம். இதற்குரிய மூலிகைத் தாவரங்கள் பலா, எருக்கு, வன்னி மரம்.

**எருக்கின் மருத்துவப் பயன்கள்**

முதிர்ந்த வேர்ப்பட்டையைச் சூரணம்நெல்லிளயவு கற்பமாய்உண்ண வாதம் நீங்கும்.

வெள்ளெருக்கன் வேர்ப்பட்டைச் சூரணம் இரண்டு குன்றிமணியளவு கொடுக்க சீதக்கழிச்சல் , வயிற்றுவலி தீரும்.

எருக்கம் பாலையும் வண்டல் மண்ணையும் கலந்து தண்ணீர் விட்டு குழைத்து பூச கீல்வாதம் தீரும்.

**வன்னி மரத்தின் மருத்துவப் பயன்கள்**

பட்டையைப் பொடி செய்து கொடுக்க உடலுக்கு வலுவைத் தரும்.

பட்டையை சூரணித்து வட்டத்துத்தி இலைச்சாறு விட்டு அரைத்து மேலுக்குப்பூச வெண்குட்டம் தீரும். இலைச்சாறுவாதநோய்களைநீக்கும்.

கும்பராசிக்குரிய நட்சத்திரங்கள் அவிட்டம், சதயம், பூரட்டாதி. நட்சத்திர மரங்கள் வன்னி, கடம்பு, தேவதாரு. இவர்களுக்கு பொதுவாக தசைப்பிடிப்பு, தோலில் எரிச்சல், இதயம் சம்பந்தமான நோய்கள், முடக்குவாதம் போன்றன ஏற்படலாம்.

**கடம்பின் மருத்துவப் பயன்கள்**

இலைச்சாறு உள்ளுக்கு கொடுக்க பேதியை நிறுத்தும். விதையையும் துளசி இலையையும் குடிநீரிட்டுத் தர தலைப்பாரம், தலைவலி, தும்மல், இருமல் தீரும். பழச்சாற்றோடு சர்க்கரையை கலந்து கொடுக்க சுரம் தீரும்.

**தேவதாரின் மருத்துவப் பயன்**

கட்டையை குடிநீர் செய்து கொடுக்க விக்கல், சுரம், தீரும். பட்டையை பொடித்து புண்கள் மீது தூவ ஆறும். இதிலிருந்து எடுக்கும் தைலம் சிரங்கு, புண்களுக்கு போட மாறும்.

மீன ராசிக்குரிய நட்சத்திரங்கள் பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி. இதற்குரிய நட்சத்திர மரங்கள் தேவதாரு, வேம்பு, இலுப்பை. இவர்களுக்கு பொதுவாக தலைவலி, செரியாமை, தோல் நோய்கள், சிறுநீரக நோய்கள், சுவாசப்பை சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம்.

**வேம்பின் மருத்துவப் பயன்கள்**

பூவின் ஊறல் குடிநீர் உடலுக்கு வலுவைத் தரும். வயிற்றுப் புண்ணை நீக்கும். வேப்பம் பட்டையை இடித்து சாறெடுத்து ஆறாத புண்களில் பூச மாறும். தேமல், படை, தீரும்.

வேப்பம் இலையையும் வசம்பையும் குடிநீர் செய்து தர பேதியை நிறுத்தும். பிசினை எடுத்து தண்ணீரில் கலந்து கொடுத்துவர குட்டம் தீரும்.

**இலுப்பையின் மருத்துவப் பயன்கள்**

பூக்குடிநீரால் இருமல், சுரம் தீரும். இலுப்பம்பட்டை-சூரணம் புண்ணை ஆற்றும். இலுப்பம் விதையை மேலுக்கு பூச பூச்சிக்கடி விசம் தீரும். பட்டையையும் கசகசாவையும் அரைத்து தேய்த்துக் குளிக்க சொறி, சிரங்கு மாறும். (முற்றும்)

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

### கடந்த அரசின் முக்கியஸ்தர்கள்

# விமானப்படைக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் குறித்து விசாரணை

கடந்த அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் விமானப் படைக்கு செலுத்த வேண்டிய நிலுவைக் கொடுப்பனவுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாரிய நிதி மோசடிகள் தொடர்பிலானஜனாதிபதிஆணைக்குழுவினால் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, சுசில் பிரேம ஜயந்த, முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதியின் மகன் யோசித ராஜபக்ஷ ஆகியோர் தொடர்பில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் குறித்த நபர்கள் விமானப்படைக்கு சொந்தமான ஹெலிகொப்டர்களை பயன்படுத்தி பயணங்களை மேற் கொண்டுள்ளனர்.

இவ்வாறு மேற்கொண்ட பல பயணங்களுக்கு இலங்கை விமானப் படையினருக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் செலுத்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக ஜனாதிபதி தேர்தல்காலத்தில்அதிகளவில்ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டதாகக்குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு ஜனவரி வரையிலான காலப் பகுதியில் இந்த விமானப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விமானப் பயணங்கள் தொடர்பிலான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் ஊடாக விமானப்படைத் தளபதிக்கு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பொதுமக்கள் முறைப்பாடு ஒன்றுக்கு அமைய இந்த விமானப் பயணங்களுக்கான கட்டணங்கள்செலுத்தப்பட்டுள்ளனவா என்பது குறித்து விசாரணை செய்யப்படுகின்றது. (இ-7)

# விவசாயிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்த முஸ்தீபு

### ஜே.வி.பி.ஏற்பாடு

விவசாயிகளையும், விவசாயத் துறையையும் அழிப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளைக் கண்டித்து எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் விவசாயிகள் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவிருப்பதாக ஜே.வி.பி.தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐ.தேகவும், சுதந்திரக் கட்சியும் இணைந்து முன்வைத்திருக்கும் வரவுசெலவுத்திட்டத்தில் விவசாயத் துறையை அழிவுக்கு இட்டுச் செல்லும் வகையிலான யோசனைகளே முன்மொழியப்பட்டிருப்பதாக அவர் குற்றஞ் சாட்டினார். ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

உணவுப் பாதுகாப்பை முழுமையாக கைவிட்டு, வெளிநாடுகளில் உள்ள பல்தேசிய கம்பனிகள் சிலவற்றுடன் இணைந்து நாட்டின் பொருளாதாரத்தை முன்கொண்டு செல்ல முடியும் என்ற பிழையான நிலைப்பாட்டில் அரசு இருக்கிறது. பல வருடங்களாக தோல்வியடைந்த பொருளாதாரக் கொளகையை மீண்டும் பின்பற்றுவதற்கு அரசாங்கம் முடிவெடுத்திருப்பதும் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பாதிப்படையச் செய்யும் என்றும் அவர் தெரிவித்தார். விவசாயிகளுக்கு வழங்கிய பசளை மானியம் குறைக்கப்பட்டிருப்பதுடன், நெல், தேயிலை மற்றும் இறப்பர் உள்ளிட்ட உற்பத்திப் பொருட்களுக்கான நிர்ணய விலையை உறுதிப்படுத்த அரசாங்கம் தவறியுள்ளது. இவ்வாறான திட்டங்களால் விவசாயிகள் பாரிய பாதிப்புக்களை சந்தித்துள்ளனர்.

இதனால் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்கு விவசாயிகள் தயாராகி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மேல் நீதிமன்றம் யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

யாழ். மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்குரிய (2016) கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனத்திடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

01. யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகம்.
02. மல்லாகம் நீதிமன்ற வளாகம்.
03. சாவகச்சேரி நீதிமன்ற வளாகம்.
04. ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகம்.
05. பருத்தித்துறை நீதிமன்ற வளாகம்.
06. யாழ்ப்பாணம் சிறுவர் நீதவான் நீதிமன்றம்.

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற கணக்காளரிடம் மீளளிக்க முடியாத வைப்பாக ரூ.100/= ஐயும், மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூ. 25,000/= ஐயும் செலுத்தி 11.01.2016 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 11.01.2016 பிற்பகல் 1.30 மணிவரை ஏற்றுக் கொள்வதுடன் பிற்பகல் 2.00 மணிக்கு விலை மனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

மா.இளஞ்செழியன்
மேல்நீதிமன்ற நீதிபதி/ தவிசாளர்,
மேல் நீதிமன்ற பெறுகைக்குழு,
மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(சி-2908)

# மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ள பணிப்பெண்ணை நாம் கைவிட முடியுமா?

### ஜே.வி.பி.கேள்வி

சவுதியில் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ள இலங்கைப் பெண் தவறை ஒப்புக்கொண்டார் என்பதற்காக நாம் அப்படியே விட்டு விட முடியுமா? எனக் கேள்வி எழுப்பியுள்ள ஜே.வி.பியின் எம்.பி. விஜித ஹேரத்,

கல்லெறிந்து கொலை செய்ய வேண்டியது அந்தப் பெண்ணையல்ல. அவரை இந்த நிலைக்குக் கொண்டு வந்துள்ள நாட்டின் பொருளாதாரக் கொள்கையைத்தான் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

52 சதவீத பெண்கள் நாட்டில் இருக்கின்றனர். ஆனால், பெண்களைப் பாதுகாக்க இதுவரை ஆட்சியிலிருந்த அரசுகள் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆசையின் காரணமாக பெண்கள் வெளிநாடு செல்வதில்லை. பொருளாதார பாதிப்பே இதற்குப் பிரதான காரணமாகும்.

இன்று எமது நாட்டுப் பெண் ஒருவர் சவுதியில் கல்லெறிந்து கொலைசெய்யப்பட தீர்மானிக்கப்பட்டதற்கு காரணம் என்ன? கல்லெறிந்து கொலை செய்யப்படவுள்ள அந்தப் பெண் சட்ட விரோத தொடர்புவைத்திருந்தார் எனக் கூறப்படுகின்றது.

உண்மையில் கல்லெறிந்து கொலைசெய்யப்பட வேணடிவர் அந்தப் பெண்ணல்ல. அந்தப் பெண்ணை இவ்வாறானதொரு நிலைக்குத் தள்ளியுள்ள இந்தப் பொருளாதாரக் கொள்கையை. இந்தக் கொள்கையை மாற்ற அரசு எடுக்கும் தீர்வு என்ன?

ஏனெனில், இன்னும் 10 பேர் மரண தண்டனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். இதற்குத் தீர்வு காணாவிட்டால் இந்நிலை நீடித்துக் கொண்டே இருக்கும். அந்தப் பெண் தனது தவறை ஒப்புக் கொண்டார் என்பதற்காக நாம் அப்படியே விட்டுவிட முடியாது. 2011இல் 99 ஆயிரம் பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்றனர். 2013இல் இந்தத் தொகை ஒரு இலட்சத்து 58 ஆயிரமாக் அதிகரித்தது.

2014, 2015 இல் இந்தத் தொகை மேலும் அதிகரித்துள்ளது. பொருளாதாரப் பாதிப்பின் காரணமாகவே இவர்கள் வெளிநாடு செல்கின்றனர். இதைத் தடுக்க அரசிடம் என்ன நடவடிக்கை இருக்கிறது?

வரவு - செலவுத்திட்டத்தில் என்ன முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன? கடவுச்சீட்டுக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. சர்வதேச தொலைபேசிக் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. இதைத்தான் அரசு செய்துள்ளது. இந்த நிலைமையை மாற்ற வேண்டும். பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்வதைத் தடுக்க நாட்டில் பெண்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சரியான கொள்கை உருவாக்கப்பட்டு அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:29செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/2056 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 32<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்:BSC/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/3406 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 62செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/2067 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 61செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BSC, BIT/ தனியார் தொழில்<br>தொ.இ: G/3412 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 87 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L பிரான்ஸ்<br>தொ.இ: B/2099 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 80 செவ் 1 இல்<br>உயரம்: 5'4'<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/3429 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 4 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/2100 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 9<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:QS<br>தொ.இ: G/3437 |

## கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

## வழங்கப்பட்ட நிதி ஊடாக வீடுகள் கட்டி முடிக்கப்படாமையால் தொடரும் மழையினால் மக்கள் அவதி

வவுனியா வடக்கில் அனர்த்த முகாமைத்துவ பிரிவால் வழங்கப்பட்ட வீடுகள் பல கட்டி முடிக்காத நிலையில் உள்ளதால் தொடரும் மழை காரணமாக மக்கள் அவலநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் பெய்த மழை காரணமாக முழுமையாக பாதிப்படைந்த வீடுகளை அமைப்பதற்கும், பகுதியளவு பாதிப்படைந்த வீடுகளை புனரமைப்பதற்கும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவால் வவுனியா வடக்கு பிரதேச செயலகம் ஊடாக நிதி வழங்கப்பட்டிருந்தது.

அந் நிதியை மக்களிடம் வழங்காது, மக்களின் வங்கிக் கணக்கின் ஊடாக வழங்கப்பட்ட நிதியை வவுனியா வடக்கு பிரதேச செயலகம் அப்பகுதி கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாக நிதியை மீளப்பெற்று தாமே வீடுகளை அமைத்து வந்தனர்.

இந்நிலையில் சில வீடுகள் அத்திபாரம் மட்டும் இடப்பட்ட நிலையிலும் உள்ளன. இதனால் பல குடும்பங்கள் தொடரும் மழை காரணமாக மீண்டும் அவலநிலைக்கு உள்ளாகியுள்ளதுடன் சில குடும்பங்கள் இடம் பெயரக் கூடிய அவலநிலை கூட ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-250)

# இரணைமடு குளத்தின் அபிவிருத்தி பணியினால் சிறுபோக நெற்செய்கை அடுத்தாண்டு நிறுத்தம்

## விவசாயிகள் பூரண சம்மதம் தெரிவிப்பு

(மல்லாவி)

இரணைமடுக்குளத்தில் மேற்கொள்ளப்படடு வருகின்ற அபிவிருத்திப் பணிகளை கருத்தில் கொண்டு அதனை விரைவுபடுத்தும் வகையிலும் இரணைமடுகுளத்தின் கீழான 2016 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கையை கைவிடுவதற்கு விவசாயிகள் தங்களது பூரண சம்மதத்தை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இவ்விடயம் தொடர்பில் விவசாயிகளுடன் ஆராயப்பட்டது.

மேற்படி விடயத்தில் தீர்மானம் எடுக்கும் கூட்டத்தின் போதே இரணைமடு குளத்தின் கீழான விவசாயிகள் தங்களது சம்மதத்தை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குளத்தின் நீர் குள புனரமைப்பு காரணமாக 24 அடி வரை திறந்து விடப்படவுள்ளதால் சிறுபோகத்தை மேற்கொள்ள முடியாது போகும் சூழ்நிலை ஏற்படும்.

இந்த நிலையில் அதற்காக இரணைமடு குளத்தின் கீழான விவசாயிகளின் பூரண சம்மதத்தை பெறவேண்டும் என ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியமைக்கு அமைவாக இரணைமடுக் குளத்தின் கீழ் கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகளை அழைத்து நேற்று முன்தினம் கலந்துரையாடப்பட்டது. குறித்த கலந்துரை யாடலில் தமது சம்மதத்தினை விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேவேளை விவசாயிகள் குறித்த இரணைமடு அபிவிருத்தி திட்டம் தீர்மானிக்கப்பட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் எனவும் அபிவிருத்தி பணிகளின் முன்னேற்றம் தொடர்பில் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும், 2015 ஆம் ஆண்டுக்கான தற்போதைய காலபோக பயிர்ச் செய்கை எவ்வித காலநிலை மாற்றத்தினாலும் பாதிப்புக்குள்ளாகாமல் அறுவடை செய்யும் பட்சத்தில் விவசாயிகளுக்கு பொருளாதார ரீதியாக பெரும் பாதிப்புகள் ஏற்படாது என குறிப்பிட்டதுடன், சிலவேளைகளில் காலநிலை மாற்றத்தினால் பெரும் நெற்கை செய்கையின் அறுவடையில் பாதிப்பு ஏற்படுமானால் விவசாயிகள் பெரும்போக பாதிப்பை சந்திப்பார்கள் எனவும் விவசாயிகள் குறிப்பிட்டனர்.

அவ்வாறு முழுமையாக பாதிக்கப்படுகின்ற விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்றும் விவசாயிகள் கலந்துரையாடலில் வலியுறுத்தினர்.

மேலும் குளத்தின் அபிவிருத்திப் பணிகளின் தரத்தை நீர்ப்பாசனத் திணைக்களம் விவசாயிகளுக்கு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் விவசாயிகள் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

இரணைமடு சந்தியில் பாரிய நிதியில் புனரமைப்பு செய்யப்பட்ட கனகாம்பிகை குளத்தின் வானகட்டில் கசிவு ஏற்பட்டுள்ளமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இக் கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சத்தியசீலன், கிளிநொச்சி பிராந்திய நீர்ப்பாசன பிரதி பணிப்பாளர் எஸ்.சுதாகரன், கமக்கார அமைப்புகளின் பரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-15)

# அடிப்படை வசதியின்றி பூநகரி பொதுச்சந்தை

## பொதுமக்கள், வர்த்தகர்கள் சுட்டிக்காட்டு



கிளிநொச்சி, பூநகரி பொதுச் சந்தை அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பூநகரி பொதுச் சந்தை, பேருந்து நிலையம் என்பன ஒருங்கே அமைந்துள்ள நிலையில் தற்போது பெய்து வரும் பருவமழை காரணமாக இவற்றுக்கான பிரதான பாதைகள் சேறும் சகதியுமாக காணப்படுகின்றது.

இதனுடன் பொதுமக்கள், வர்த்தகர்களின் பாவனைக்கென இரண்டு குடிநீர் கொள்கலன்கள் வைக்கப்பட்டுள்ள போதும் அவற்றிற்கு குடிநீர் நிரப்படுவது இல்லை எனவும் பொதுச் சந்தைக்கான பொது மலசலகூடம் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை தம்மிடம் அதிகமான வாடகைப் பணம் அறவிடப்படுகின்ற போதும் பொதுச் சந்தை வளாகம் சீரான வகையில் பேணப்படுவதில்லை. இதனால் பல வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள வர்த்தக நிலையங்களும் தமது வியாபார நடவடிக்கைகளை கைவிடப்படவுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

ஏ-32 பிரதான வீதிக்கு (யாழ்ப்பாணம்-மன்னார்) அருகாமையில் மத்திய பேருந்து நிலையம் அமைந்துள்ள போதிலும் இவ் வழித்தடத்தின் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் எவையும் இப் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்வதில்லையென பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும் அமைக்கப்பட்ட பொதுச்சந்தை மற்றும் மத்திய பேருந்து நிலையம் என்பன பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உட்படாதவொரு நிலை ஏற்பட்டு வருகின்றது.

ஆகவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து சிறந்த மக்கள் சேவையினை வழங்கக்கூடிய வகையில் பொதுச் சந்தை மற்றும் பேருந்து நிலைய சூழலை மாற்றியமைக்க முன்வர வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-272)




# கிளிநொச்சியில் வீதி ஒழுங்குகளை மீறும் வாகனங்களினால் விபத்து

கிளிநொச்சி நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வாகனங்கள் வீதி ஒழுங்கு நடைமுறைகளை பின்பற்றாது செலுத்தப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வாகனங்கள் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளை பின்பற்றாது செலுத்தப்படுவதுடன் வாகனத்தின் சமிக்ஞை வாகனங்கள் பயன்படுத்தப்படாதும் செலுத்தப்படுகின்றது.

இதேவேளை வாகனங்கள் அதி வேகத்திலும் பயணிப்பதால் பாதசாரிகள் மிகுந்த அச்சத்துடன் பயணிக்க வேண்டியுள்ளது.

சிலரது வாகனங்களின் இலக்கத்தகடுகள் சிங்களத்தில் காணப்படுவதால் விபத்தின் போது இவற்றை அடையாளப்படுத்துவதிலும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது விடயத்தில் வீதிபோக்குவரத்து பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு உயிராபத்தற்ற நிலையில் பயணத்தை மேற்கொள்ள வழியேற்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-272)



# பயணிகள் பேருந்து தரிப்பிடங்களில் நின்றே பயணத்தை தொடர வேண்டும்

## தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலில் வலியுறுத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறைகள் மற்றும் விபத்துக்களைத் தவிர்ப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று அண்மையில் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட போக்குவரத்துப் பரீட்சை சார்ந்த அதிகாரி வி. ஏ. எல். எஸ். டசாநாயக்க, கிளிநொச்சிப் பொலிஸ் போக்குவரத்து பிரிவின் அதிகாரி, கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் மக்கள் தொடர்பாடல் அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டு வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகளை பேருந்து உரிமையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டுமெனவலியுறுத்தியுள்ளார்.

இக் கலந்துரையாடல் முக்கியமாக பயணிகளை ஏற்றும் போது பேருந்து தரிப்பிடங்களில் மட்டுமே பயணிகளை ஏற்ற வேண்டுமெனவும் ஏனைய இடங்களில் பயணிகளை ஏற்றுவது வீதிப் போக்குவரத்து முறைகளுக்கு தவறானது எனவும் சுட்டிக்காட்டினார்.

இதற்கு பயணிகள் பேருந்து தரிப்பிடங்களில் நின்றே தமது பயணத்தை தொடர வேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

குறிப்பாக பரந்தன், முறிகண்டி குறுந்தூர பயணிகள் மேற்படி வீதி ஒழுங்கு முறைகளை பின்பற்றுவது இல்லை எனவும் கூறினார்.

அத்துடன் பரந்தன்- முறிகண்டி குறுந் தூர சேவைக்கான பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதனால் நெடுந்தூர பயணிகளை ஏற்றுவதனை முற்றாக தவிர்க்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு பயணிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (2-277)



கிளிநொச்சி நாறோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வு ஊர்வலமும் திறனாளிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றது. (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)





உலகளாவிய ரீதியில் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி எச்.ஐ.வி விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்று வரும் நிலையில் நேற்றைய தினம் வவுனியா வைத்தியசாலையில் இடம்பெற்றது. இதன்போது எச்.ஐ.வி தொற்று தொடர்பாகவும், அதனை கண்டறிவது தொடர்பாகவும் விழிப்புணர்வு ஊட்டப்பட்டதுடன் பேரணி ஒன்றும் இடம்பெற்றது. இதில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் கு.அகிலேந்திரன், பொலிஸ் அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், தாதியர்கள், இளைஞர் சேவைகள் மன்றத்தைச் சேர்ந்தவர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.
(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# வட்டுவாகல் பாலம் புனரமைக்க 1200 மில்லியன் ரூபா நிதி தேவை



## முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

**முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தை மீளஅமைப்பதற்கு 1200 மில்லியன் ரூபாய் நிதி தேவையென கணக்கிடப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்ட மீள்குடியேற்ற மீளாய்வுக் கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. இதன்போதே மாவட்டச் செயலர் இதனை தெரிவித்தார். இது தொடர்பில் தொடர்ந்தும் தெரிவித்த அவர், "1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைக்கப்பட்ட சுமார் 200 மீற்றர் நீளமான இந்தப்பாலம், பலத்த சேதங்களைச் சந்தித்துள்ளது.

யுத்தத்தில் சேதமடைந்த குறித்த பாலத்தில் சிறு சிறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்கள் பிரயாணம் செய்யக் கூடிய அளவுக்கு மாற்றப்பட்டது. ஆனால், கடந்த மாதம் பெய்த கடும் மழை காரணமாக வான் வெள்ளம் இந்தப் பாலத்தினூடாக பாய்ந்தமையையடுத்து பாலம் முற்றாகச் சேதமடைந்துள்ளது. இதனால் பாலத்தை உடனடியாகத் திருத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள இந்தப் பாலத்தை மீள அமைப்பதற்கு 1200 மில்லியன் ரூபாய் தேவையென அதிகார சபை மதிப்பீடு செய்து எங்களுக்கு கூறியுள்ளது. நிதி கிடைக்கப் பெற்றால் பாலம் அமைக்கும் பணி ஆரம்பமாகும்" என்றார். (2-281)

# சர்வதேச மனிதவுரிமைகள் தினம் கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்படும்

வடக்கு, கிழக்கு ஜனநாயகத்திற்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச மனிதவுரிமைகள் தினம் இன்று காலை 9 மணிக்கு அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் அருணாசலம் சத்தியானந்தம் தலைமையில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட குடிசார் எந்திரவியல் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.எஸ்.சிவகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் மனித உரிமையும் வாழ்வியல் எனும் தொனிப் பொருளில் அருட் தந்தை எஸ்.பி.செல்வன், மனித உரிமையும் மக்கள் அரசியல் எனும் தொனிப்பொருளில் தமிழ் சீர் சமூகத்தின் இணைச் செயலாளர் பி.என்.சிங்கம், கருத்துரைகளை வழங்கவுள்ளனர். அதைத் தொடர்ந்து பங்குபற்றுநர்களின் கருத்துப் பகிர்வு, உரிமை கீதங்கள் என்பன இடம்பெறும்.

இந்நிகழ்வில் மனிதவுரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஆர்வலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலதரப்பினர் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-277)

# தமிழ் மக்களுக்கான காணிகள் அபகரிக்கப்பட்டு பகிர்ந்தளிப்பு

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, மாவட்டத்தின் மணலாறு (வெலிஓயா) பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள், மகாவலி எல்லை வலயத்தின் மூலம் அபகரிக்கப்பட்டு, சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு மாவட்ட மீள் குடியேற்ற மீளாய்வுக் கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "1983ஆம் ஆண்டுக்கு முன்னர், மணலாறு, எரிந்தகாடு, ஆண்டான்குளம்உள்ளிட்ட 20 குளங்களின் கீழான பிரதேசத்தில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தமிழர்கள் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர். தொடர்ந்து இடம்பெற்றயுத்தம் காரணமாக அங்கிருந்து தமிழர்கள் இடம் பெயர்ந்ததையடுத்து, தமிழர்களின் காணிகளுக்கு மகாவலி வலயத்தின்கீழ் உறுதிப்பத்திரங்கள் பெறப்பட்டு, சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதனால் அங்கு விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட பல விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர் என்றார். இந்த மீளாய்வுக் கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, முல்லைத்தீவு மாவட்டச்செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், ஆறு பிரதேச செயலகங்களின் செயலர்கள், திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-281)

# சிறுபோக நெற்செய்கை நிறுத்தம்; 2500 மில்லியன் ரூபா நிதி நட்டம்

## இரணைமடு விவசாயிகள் சம்மேளன செயலாளர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு குளத்து நீரை நம்பி விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கான சிறுபோக நெற்செய்கை அடுத்த வருடம் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் விவசாய சமூகத்துக்கு 2500 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அத்துடன் பொருளாதார வீழ்ச்சி ஏற்படும் எனவும் இரணைமடு விவசாயிகள் சம்மேளன செயலாளர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

எனினும் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தாம் அதற்கு சம்மதிப்பதாகவும் வாழ்வாதாரம் தொடர்பான மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். அடுத்த வருடத்துக்கான சிறுபோக செய்கையை நிறுத்துவது தொடர்பான கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கருத்து தெரிவிக்கையில், "இரணைமடு குளத்தின் புனரமைப்பு வேலைகளை விரைவாக நிறைவு செய்வதற்காகவே, அடுத்த வருட சிறுபோகத்தை நிறுத்த வேண்டியுள்ளது. அத்தோடு பயிர்ச்செய்கை நிறுத்தப்படுகின்ற போது, பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்றார். அத்துடன் வாழ்வாதாரம் தொடர்பான மாற்று ஏற்பாடுகளை தமது திட்டத்தில் உள்ளடக்கியிருப்பதாக பிரதம நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்துள்ளார். (2-281)











உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை மற்றும் மாவட்ட பாலியல் நோய் தடுப்புப் பிரிவினர் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட ஸ்ரீலங்கா குடும்பத்திட்ட சங்கத்தின் அனுசரணையில் ஏற்பாடு செய்த எச்.ஐ.வி நோய் விழிப்புணர்வு ஊர்வலமொன்று நேற்றுக் காலை இடம்பெற்றது. இன்றே பரிசோதனை செய்து மகிழ்ச்சியாக வாழ்வோம் எனும் தொனிப்பொருளில் முல்லைத்தீவில் எச்.ஐ.வி.நோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது. இந்த ஊர்வலத்தில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், முல்லைத்தீவு மாவட்ட ஸ்ரீலங்கா குடும்பத்திட்ட சங்கத்தின் அலுவலக ஊழியர்கள், பிராந்திய சுகாதார பணிமனையின் ஊழியர்கள், பொதுசுகாதார பரிசோதகர்கள், முள்ளியவளை மற்றும் முல்லைத்தீவு பொலிஸார், முச்சக்கரவண்டி சாரதிகள், உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பதாதைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் வீதியில் ஊர்வலமாகச் சென்று எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வுகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# முள்ளியான் காட்டுப்பகுதியில் யாழ்ப்பாண இராசதானி கால குடிமனையின் அழிபாடுகள் கண்டுபிடிப்பு











கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட இயக்கச்சிக் கோட்டையில் இருந்து தென்கிழக்கே ஏழு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நித்தியவெட்டை முள்ளியான் என அழைக்கப்படும் காட்டுப்பகுதியில் அழிவடைந்த புராதன வீடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் களவாய்வில் ஈடுபட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியற் சிறப்புக்கலை மாணவர்களுக்கு அவ்வூர் மக்கள் அங்குள்ள காட்டுப் பகுதியில் அழிவடைந்த அரண்மனை ஒன்று இருப்பதாகக் கூறப்பட்ட தகவலை அடுத்து அவ்விடத்திற்குச் சென்று தொல்லியல் ஆய்வினை மேற்கொண்டோம்.

இக்கட்டட அழிபாடுகளை அவ்வூர் மக்களில் பலர் அரண்மனை எனவும், வேறுசிலர் இயக்கச்சி கோட்டையுடன் தொடர்புடைய சிறைக்கூடம் எனவும் அழைக்கின்றனர். ஆனால் கட்டடத்தின் அமைப்பையும், அதன் காலத்தையும் நோக்கும் போது அது முன்பொருகாலத்தில் அங்கு வாழ்ந்த மக்களது வீடாக இருக்கலாம் என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. இவ்வீடு காட்டின் நடுவேயுள்ள பெரியகுளத்திற்கு அருகேயுள்ள உயர்ந்த மேட்டு நிலத்தில் செங்கட்டிகள், களிமண், சுதை என்பன கொண்டு கட்டப்பட்டுள்ளது. இரண்டு அறைகளைக் கொண்ட இக்கட்டடம் ஏறத்தாழ ஒன்பது மீற்றர் நீளமும், நான்கரை மீற்றர் அகலமும் கொண்டது. இவ்வீட்டின் பின்பக்க அறைச் சுவரில் சிறிய ஜன்னல் ஒன்று இருந்ததற்கான அடையாளம் காணப்படுகிறது. கட்டடத்தின் பெரும்பாலான சுவர்கள் அழிவடைந்து விட்டாலும், கட்டடத்தின் மூன்று பக்க அத்திவாரங்களை தெளிவாகப் பார்க்க முடிகிறது. கட்டடத்தின் முன்பக்கம் அடர்ந்த காடாக இருப்பதால் அதன் அத்திபாரத்தை தற்போது அடையாளம் காணமுடியவில்லை. ஏனைய மூன்று அத்திபாரங்களில் இருந்தும் எழுப்பப்பட்ட சுவர்கள் ஒவ்வொன்றும் ஏறத்தாழ ஒருமீற்றர் தடிப்பைக் கொண்டன. அதிலும் இரண்டு அறைகளைப் பிரித்து நிற்கும் நடுச்சுவரின் தடிப்பு ஏனைய அத்திபாரச்சுவர்களை விடச் சற்றுக் கூடுதலாகக் காணப்படுகிறது. பேராசிரியர் பொ.இரகுபதி சுவர்களின் தடிப்பை ஆதாரமாகக் காட்டி இக் கட்டடம் இரு மாடிகளைக் கொண்ட வீடு எனக் குறிப்பிடுகிறார். இவ் வீட்டின் கூரை ஓடுகளைக் கொண்டு வேயப்பட்டதற்கான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. இதனால் இதன் கூரை மரங்கள், பனை ஓலைகள் கொண்டு வேயப்பட்டிருக்கலாம் எனக் கருதலாம்.

இவ்வீட்டை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட செங்கட்டிகளின் அளவும், அவற்றின் தொழில்நுட்பமும் ஐரோப்பியர் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட செங்கட்டிகளின் காலத்திற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாகக் காணப்படுகின்றன. மேலும் இக்கட்டட அழிபாடுகளிடையே இருந்து எடுக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட நீர்ப்பாசனக் குழாய்கள் என்பவற்றின் காலம் ஏறத்தாழ கி.பி. 15 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகக் காணப்படுகிறது. இவற்றை ஆதாரங்களாகக் கொண்டு இவ்வீடு அமைக்கப்பட்ட காலம் யாழ்ப்பாண அரசுகாலம் அல்லது அதற்கு முந்திய காலத்தைச் சேர்ந்ததெனக் கூற முடியும். ஆகவே வட இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட காலதத்தால் முந்திய குடிமனையாக இதைக் கருத முடியும்.

வட இலங்கையில் புராதன குடியிருப்புக்களைக் கொண்ட இடங்களில் வடமராட்சி கிழக்குப் பிரதேசமும் ஒன்றாகும். 1980களில் பேராசிரியர் இரகுபதியும், பின்னர் இக்கட்டுரை ஆசிரியரும் வெற்றிலைகேணி, உடுத்துறை, செம்பியன் பற்று, முள்ளியான், கட்டைக்காடு ஆகிய இடங்களில் மேற்கொண்ட ஆய்வுகளில் இவ்விடங்களில் இற்றைக்கு 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. யாழ்ப்பாண அரசுகாலத்தில் கடல் வழியாகவும், வன்னியில் இருந்து தரைவழியாகவும் கொண்டு வரப்பட்ட பொருட்களுக்கான வரி அறவிடும் கடவைகள் மேற்கூறப்பட்ட இடங்களில் இருந்ததற்கு வரலாற்று இலக்கியங்களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியைத் தொடர்ந்து இவ்விடங்களில் வாழ்ந்த மக்கள் படிப்படியாகப் பிற இடங்களுக்குச் சென்றதாக இவர்களின் ஆட்சிக்கால ஆவணங்கள் கூறுகின்றன. ஆயினும் இவ்விடங்களில் இருந்து கடல்வழியாகவும், தரைவழியாகவும் பொருட்கள் கடத்தப்பட்டதால் அவற்றைத் தடுப்பதற்காகவே ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான கோட்டைகளை இயக்கச்சி, ஆனையிறவு, வெற்றிலைக் கேணி போன்ற இடங்களிலும், கடற்கரையை அண்டிய இடங்களில் காவல் அரண்களையும் அமைத்தனர். இந்நிலையில் முள்ளியான் காட்டுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டட அழிபாடுகள் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் செறிவான தமிழர்குடியிருப்புக்கள் அங்கிருந்ததன் அடையாளமாகக் காணப்படுகிறது. இது போன்ற வீடுகளின் சிதைவுகளும், பாழடைந்த ஆலயங்களின் அழிபாடுகளும் இவ் வட்டாரத்தின் காட்டுப் பகுதிகளில் இருப்பதாக இப்போது தெரியவந்துள்ளது. எதிர்கால ஆய்வுகளால் அவை புதுவெளிச்சம் பெறலாம்.

பேராசிரியர்
ப.புஷ்பரட்ணம்
தொல்லியல் இணைப்பாளர்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

## மூவருக்கு ஒத்திவைக்கப்பட்ட கடூழியச் சிறைத் தண்டனை

அல்வாய் வடமத்தி பகுதியில் 09.08.2015 அன்று பாஸ்கரன் சிவகரன் என்ற சிறுவனுக்கு அல்வாய் விக்ரமன் விளையாட்டு மைதானத்தில் வைத்து அடித்து துன்புறுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு ஐந்து வருடங்களுககு ஒத்தி வைக்கப்பட்ட ஆறுமாத கடூழியச்சிறைத்தண்டனை விதித்து நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார். சிறுவர்களை உடல்ரீதியாகவோ, மனோவியல் ரீதியாகவோ துன்பு றுத்தினால் மேலும் கடுமையான தண்டனை வழங்கப்படும் என நீதிபதி எச்சரித்துள்ளார்.

இதேவேளை 19.02.2015 ஆம் திகதி அன்று குடத்தனை மேற்கைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு சொந்தமான துவிச்சக்கரவண்டியை களவெடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபா ஒருவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட துவிச்சக்கரவண்டியை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறும் நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

03.04.2015 ஆம் திகதி அன்று தும்பளை பருத்தித்துறையில் வசிக்கும் பு.சிவராஜ் என்பவருக்கு படுகாயம் ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட நபருக்கு ஐந்து வருடங்களுககு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாத கால கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடாக 60 ஆயிரம் ரூபா செலுத்துமாறும் நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி நபர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்தே மேற்படி தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று வழக்குகளும் நேற்று முனதினம் திங்கட்கிழமை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5-60)





யாழ்.பெண்கள் சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு நிகழ்வு நேற்று காலை 9.30 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றியிருந்ததோடு துண்டுப்பிரசுரம் ஒன்றினையும் வெளியிட்டு வைத்தார்.

(படங்கள்: உ.சாளின்)

# நல்லூர்க்கந்தன் உற்சவகாலத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆக்கத்திறன் வெளிப்பாட்டு நிகழ்வின் முடிபுகள் வெளியீடு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் நிகழ்வொன்று மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் **பேச்சு, நடனம், கட்டுரை, நாடகம், சித்திரம், பண்ணிசை, வில்லிசை, குழுநடனம்** ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. இதில் பிரதேச மட்டத்தில் நடத் தப்பட்ட நிகழ்வில் முதலாம் இடம் பெற்றவர்களே மாவட்ட மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். இவ் வெளிப்பாட்டு நிகழ்வில் மாவட்ட மட்டங்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களது பெயர் விபரங்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

## பண்ணிசை

முதலாமிடம் - ஏழாலை கருணாகரப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, உடுவில, இரண்டாமிடம் - அமுதசுரபி அறநெறிப்பாடசாலை, வேலணை, மூன்றாமிடம் - கட்டுடை அரசடி விநாயகர் அறநெறிப்பாடசாலை, சண்டிலிப்பாய்.

## குழுநடனம்

**கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் - பழம்பதி அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை, இரண்டாமிடம் - இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, உடுவில்.

**மத்தியபிரிவு**

முதலாமிடம் - ஏழாலை கருணாகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, உடுவல், இரண்டாமிடம் ஸ்ரீகணேசா அறநெறிப்பாடசாலை, நல்லூர், மூன்றாமிடம் கோகுலம் அறநெறிப் பாடசாலை, சங்கானை.

**மேற்பிரிவு**

முதலாமிடம் - கிருஷ்ணா அறநெறிப்பாடசாலை, இரண்மிடம் - காந்திஜீ அறநெறிப் பாடசாலை சண்டிலிப்பாய், மூன்றாமிடம் - மல்லாகம் சாலம்பையன் அறநெறிப் பாடசாலை, உடுவில்.

## வில்லிசை

**கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் - இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, உடுவில், இரண்டாமிடம் - பொலிகைவிநாயகர் அறநெறிப பாடசாலை, பருத்தித்துறை, மூனறாமிடம் -கணேசா அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை.

**மத்தியபிரிவு**

முதலாமிடம் - புற்றளை சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை, பருத்தித்துறை, இரண்டாமிடம் - சிவபூரணி முத்தமிழ்மன்ற அறநெறிப்பாடசாலை, கோப்பாய், மூன்றாமிடம் - துர்க்காதேவி அறநெறிப்பாடசாலை, தெல்லிப்பழை.

**மேற்பிரிவு**

முதலாமிடம் - துர்க்காதேவி அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை, இரண்டாமிடம் - இணுவில் இளந்தொண்டர்சபை அறநெறிப் பாடசாலை, உடுவில், மூன்றாமிடம் - ஸ்ரீகிருஷ்ணா அறநெறிப் பாடசாலை, நல்லூர்.

## நாடகம்

**கீழ்ப்பிரிவு**

முதலாமிடம் - கிழவன்காடு கலாமன்ற அறநெறிப்பாடசாலை, காரைநகர், இரண்டாமிடம் - பன்னாலை கணேசா அறநெறிப்பாடசாலை, தெல்லிப்பழை, மூன்றாமிடம் - இணுவில் இளந் தொண்டர் சபை அறநெறிப்பாடசாலை, உடுவில்.

**மத்தியபிரிவு**

முதலாமிடம் - நெல்லண்டை அம்மன் அறநெறிப்பாடசாலை, பருத்தித்துறை, இரண்டாமிடம் - இணுவில் இளந்தொண்டர் சபை அறநெறிப்பாடசாலை, உடுவில், மூன்றாமிடம் - ஒல்லுடை அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை.

## தனி நடனம்

**முதலாம் வகுப்பு**

முதலாமிடம் - பிரணவராஜா பிரதிகா, சங்கத்தானை இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை, சாவகச்சேரி.

**இரண்டாம் வகுப்பு**

முதலாமிடம் - சிவரூபன் டசினா, வீரமனைகன்னிமார் கௌரி அம்பாள் அறநெறிப்பாடசாலை, உடுவில், இரண்டாமிடம் - சிவானந்தம் அபர்ணா, தென்மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி அறநெறிப் பாடசாலை, சாவகச்சேரி, மூன்றாமிடம் - மதியழகன் யதுர்ஷா, நீலியம்பனை பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, தெல்லிப்பழை.

**மூன்றாம் வகுப்பு**

முதலாமிடம் - நகுலேஸ்வரன் சுவஸ்திகா, ஸ்ரீகணேசா அறநெறிப பாடசாலை, கோப்பாய், இரண்டாமிடம் - முரளிதரன் நிரஞ்சா, நீலியம்பனை பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, தெல்லிப்பழை, மூன்றாமிடம் - குகநேசன் யானுசா, கல்வயல் புலட்டையன் ஆயிலடிப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, சாவகச்சேரி.

**நான்காம் வகுப்பு**

முதலாமிடம் - கிருபாகரன் கயானி, மானிப்பாய் மருதடி விநாயகர் அறநெறிப்பாடசாலை, சண்டிலிப்பாய், இரண்டாமிடம் - அருந்தவராஜா நர்மிலா, பொலிகை விநாயகர் அறநெறிப்பாடசாலை, பருத்தித்துறை, மூன்றாமிடம் - ஜனந்தன் மகிழிசை, சங்கத்தானை இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை, சாவகச்சேரி.

**ஐந்தாம் வகுப்பு**

முதலாமிடம் - விஜயசூரியன் தஸ்மிதா, மல்லாகம் சாலம்பையன் அறநெறிப்பாடசாலை, உடுவில்.

**ஆறாம் வகுப்பு**

முதலாமிடம் - ஜெயசீலன் பபிசாலினி, இணுவில்பரராச சேகரப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, உடுவில், இரண்டாமிடம் - கைலயங்கிரிவாசர் ஓவியரூபி, கணேசா அறநெறிப்பாடசாலை, நல்லூர், மூன்றாமிடம் - லிங்கேஸ்வரன் ருஷிகா, காமாட்சி அறநெறிப்பாடசாலை, நல்லூர்.

**ஏழாம் வகுப்பு**

முதலாமிடம் - வேலாயுதம் லிலானி, ஒல்லுடை அறநெறிப் பாடசாலை, தெல்லிப்பழை, இரண்டாமிடம் - லிங்கேஸ்வரன் கேதிகா, காமாட்சி அறநெறிப்பாடசாலை, நல்லூர், மூன்றாமிடம் - தவராசா அஜந்தா, செல்வக்கதிர்காமம் அறநெறிப் பாடசாலை, வேலணை.

**எட்டாம் வகுப்பு**

முதலாமிடம் - ரஞ்சித்குமார் கமலி, சங்கத்தானை இந்து இளைஞர்மன்ற அறநெறிப்பாடசாலை, சாவகச்சேரி, இரண்டாமிடம் - பாலசுப்பிரமணியம் பானுஷா, கோகுலம் அறநெறிப்பாடசாலை, சங்கானை.

**ஒன்பதாம் வகுப்பு**

முதலாமிடம் - கோபாலபிள்ளை நிசாந்தினி, சங்கத்தானை இந்து இளைஞர்மன்ற அறநெறிப பாடசாலை, சாவகச்சேரி, இரண்டாமிடம் - நடராசா காயத்திரி, கிழவனகாடு கலாமன்ற அறநெறிப்பாடசாலை, காரைநகா, மூன்றாமிடம் - அருந்தவராசா அனுஜா, பொலிகை விநாயகர் அறநெறிப்பாடசாலை, பருத்தித்துறை.

**பத்தாம் வகுப்பு**

முதலாமிடம் - நிரஞ்சன்குமார் நிலோஜி, மல்லாகம் சாலம்பையன் அறநெறிப்பாடசாலை, உடுவில். இரண்டாமிடம் - சிவசோதி சாம்பவி, கைலாசநாத வேதசிவாகம அறநெறிப் பாடசாலை, நல்லூர்.

**பதினொராம் வகுப்பு**

முதலாமிடம் - ரவீந்திரன் ஷண்சிகா, மல்லாகம் சாலம்பையன் அறநெறிப் பாடசாலை, உடுவில்.

## பேச்சு

**முதலாம் வகுப்பு**

முதலாமிடம் - ஐ.மதுமிதா, பழம்பதி அறநெறிப்பாடசாலை, தெல்லிப்பழை, இரண்டாமிடம் - ஜெ.ஜதுர்ஷன், பொலிகை விநாயகர் அறநெறிப்பாடசாலை, பருத்தித துறை, மூன்றாமிடம் - வ.டிக்சனா, ஏழாலை கருணாகரப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, உடுவில்.

**இரண்டாம் வகுப்பு**

முதலாமிடம் - சி.பவித்திரா, பழம்பதி அறநெறிப்பாடசாலை, தெல்லிப்பழை, இரண்டாமிடம் - சி.சுருதி, கைலாசநாதர் வேத சிவாகம அறநெறிப்பாடசாலை, நல்லூர், மூன்றாமிடம் - க.பிரியாஸ், ஏழாலை கருணாகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, உடுவில்.

**மூன்றாம் வகுப்பு**

முதலாமிடம் - ஜெ.ஜெயதுவாரகா, இலக்கண சுவாமிகள் அறநெறிப் பாடசாலை, யாழ்ப்பாணம், இரண்டாமிடம் - கு.ஸ்ரீசுபாங்கன், சிவயோகர் அறநெறிப்பாடசாலை, நல்லூர், மூனறாமிடம் - க.கனிமொழி, கணேசா அறநெறிப்பாடசாலை, தெல்லிப பழை.

**நான்காம் வகுப்பு**

முதலாமிடம் - ம.பஷ்மிதா, சங்கத்தானை இந்துஇளைஞர் மன்ற அறநெறிப்பாடசாலை, சாவகச்சேரி, இரண்டாமிடம் - மா.டிலான், கிருஷ்ணா கணேசா அறநெறிப பாடசாலை, தெல்லிப்பழை, மூன்றாமிடம் - க.சாதுரியா, சங்கரத்தை முருகமூர்த்தி ஆலய அறநெறிப்பாடசாலை, சங்கானை.

**ஐந்தாம் வகுப்பு**

முதலாமிடம் - மோ.பானுஜா, நவாலி முருகானந்தா அறநெறிப பாடசாலை, சண்டிலிப்பாய், இரண்டாமிடம் - க.திரண்மிகா, ஏழாலை கருணாகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, உடுவில், மூன்றாமிடம - கி.அபிநயா, துர்க்கையம்மன் அறநெறிப்பாடசாலை, தெல்லிப்பழை.

**ஆறாம் வகுப்பு**

முதலாமிடம் - சி.வித்தியா, சிவயோகர் அறநெறிப்பாடசாலை, நல்லூர், இரண்டாமிடம் - கி.தர்மிகா, கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, உடுவில், மூன்றாமிடம் - சி.சுலக்ஷினி, மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, சண்டிலிப்பாய்.

**ஏழாம் வகுப்பு**

முதலாமிடம் - இ.தமிழினி, திக்கரை இந்து அறநெறிபபாடசாலை, காரைநகர், இரண்டாமிடம் - விசுமினி, உடுப்பிட்டி அம்பாள் சமேத கல்யாண சுந்தரர் அறநெறிப்பாடசாலை, கரவெட்டி, மூன்றாமிடம் - தோ.துஷ்யந்தினி, துர்க்கையம்மன் அறநெறிப்பாடசாலை, தெல்லிப்பழை.

**எட்டாம் வகுப்பு**

முதலாமிடம் - ஜெ.ரிதுர்ஷிகா, மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, சண்டிலிப்பாய, இரண்டாமிடம் - அ.அபிநயா, அமுதசுரபி அறநெறிப்பாடசாலை, வேலணை, மூன்றாமிடம் - ச.தர்சனா, சங்கரத்தை முருகமூர்த்தி ஆலய அறநெறிப் பாடசாலை, சங்கானை.

**ஒன்பதாம் வகுப்பு**

முதலாமிடம் - க.வாகீசன், ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி அறநெறிப பாடசாலை, நல்லூர், இரண்டாமிடம - யோ.அனுஷா, துர்க்கா தேவி அறநெறிப்பாடசாலை, தெல்லிப்பழை. மூன்றாமிடம் - ச.நிதுர்ஷன், சாமணந்துறை அறநெறிப்பாடசாலை, பருத்தித்துறை.

**பத்தாம் வகுப்பு**

முதலாமிடம் - ஜெ.யதுர்ஷனா, யோகிகார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப்பாடசாலை, சங்கானை, இரண்டாமிடம் - அ.விதுர்ஷா, மாதகல் காந்திஜீ அறநெறிப் பாடசாலை, சண்டிலிப்பாய, மூன்றாமிடம் - ம.அபிராம், உடுப்பிட்டி அம்பாள் சமேத க்ல்யாண சுந்தரர் அறநெறிப் பாடசாலை, கரவெட்டி.

**பதினொராம் வகுப்பு**

, முதலாமிடம் - இ.விஜயராகினி, மாதகல் காந்திஜீ அறநெறிப் பாடசாலை, சண்டிலிப்பாய, இரண்டாமிடம் - வி.யசிந்தா, நெல்லண்டையம்மன் அறநெறிப்பாடசாலை, பருத்தித்துறை, மூன்றாமிடம் - மு.வானதி, நீலியம்பனை பிள்ளையார் அறநெறிப பாடசாலை, தெல்லிப்பழை.

## சித்திரம்

**முதலாம் வகுப்பு**

முதலாமிடம் - நிமலராஜ் சகானா, அமுதசுரபி அறநெறிப்பாடசாலை, வேலணை.

**இரண்டாம் வகுப்பு**

முதலாமிடம் - ரி.ஆருஸ்ணி, இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை, சாவகச்சேரி, இரண்டாமிடம் - க.பிரிந்தன், நவாலி முருகானந்தா அறநெறிப்பாடசாலை, சண்டிலிப்பாய், மூன்றாமிடம் - சி.கஜன், நீலியம்பன்னை பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, தெல்லிப்பழை.

**மூன்றாம் வகுப்பு**

முதலாமிடம் - ப.புருசோத்தமன், நவாலி முருகானந்தா அறநெறிப் பாடசாலை, சண்டிலிப்பாய், இரண்டாமிடம் - கோ.விதுர்சனன், அமுதசுரபி அறநெறிப்பாடசாலை, வேலணை, மூன்றாமிடம் - அ.சமராளன், சிறிமுருகன் அறநெறிப்பாடசாலை, வேலணை.

**நான்காம் வகுப்பு**

முதலாமிடம் - கு. வைஸ்ணவி, கிழவன்காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலை, காரைநகா, இரண்டாமிடம் - ம.சாளினி, கிழவன்காடு கலாமன்ற அறநெறிப்பாடசாலை, காரைநகர்.

**ஐந்தாம் வகுப்பு**

முதலாமிடம் - ப.துவாரகி, நவாலி முருகானந்தா அறநெறிப் பாடசாலை, சண்டிலிப்பாய், இரண்டாமிடம் - இ.சிவகௌரி, பண்டத்தரிப்பு மார்க்கண்டு சுவாமிகள் அறநெறிப்பாடசாலை, சண்டிலிப்பாய், மூன்றாமிடம் - வே.டிலானி, பண்டத்தரிப்பு மார்க்கண்டு சுவாமிகள் அறநெறிப்பாடசாலை, சண்டிலிப்பாய்.

**ஆறாம் வகுப்பு**

முதலாமிடம் - இ.தசிகா, கிருஸ்ணா அறநெறிப்பாடசாலை, நல்லூா, இரண்டாமிடம் - பொ.கிருத்திகா, அண்ணமார் அம்மன் அறநெறிப் பாடசாலை, கோப்பாய், மூன்றாமிடம் - ம.மோவிந்தா, இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, உடுவில்.

**ஏழாம் வகுப்பு**

முதலாமிடம் - கு.தேனுஜா, இணுவில் பரராசசேகரப்பிளளையார் அறநெறிப் பாடசாலை, உடுவில், இரண்டாமிடம் - சு.பவிராஜ், திக்கரை இந்து அறநெறிப்பாடசாலை, காரைநகா, மூன்றாமிடம் - ஸ்ரீ.கோகுலசிறி, வடகோவை சித்திரவேலாயுத சுவாமி அறநெறிப்பாடசாலை, கோப்பாய்.

**எட்டாம் வகுப்பு**

முதல்மிடம் - க.திவீசன், காமாட்சி அறநெறிப்பாடசாலை, நலலூா, இரண்டாமிடம் - எஸ்லதுசிகன், பாலமுருகன் அறநெறிப்பாடசாலை, சாவகச்சேரி, மூன்றாமிடம் - ஜெ.திருமாறன், சிவயோகர் அறநெறிப்பாடசாலை, நல்லூர்.

**ஒன்பதாம் வகுப்பு**

முதலாமிடம் - கு.வரசுதன், இணுவில் இளந்தொண்டர் சபை அறநெறிப்பாடசாலை, உடுவில், இரண்டாமிடம் - இ.சங்கீர்த்தனன், இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, உடுவில், மூன்றாமிடம் - இ.வினோஜன், அருள்முருகன் அறநெறிப் பாடசாலை, கோப்பாய்.

**பத்தாம் வகுப்பு**

முதலாமிடம் - கு.கவீசன், இணுவில் இளந்தொண்டர் சபை அறநெறிப்பாடசாலை, உடுவில். இரண்டாமிடம் - க.வினோஜன், இணுவில் இளந்தொண்டர் சபை அறநெறிப்பாடசாலை, உடுவில், மூன்றாமிடம் - ச.பவித்ரா, திக்கரை அறநெறிப்பாடசாலை, காரைநகர்.

**பதினொராம் வகுப்பு**

முதலாமிடம் - வ.உமாசுதன், கன்னியர் ஞானவைரவர் அறநெறிப பாடசாலை, கோப்பாய், இரண்டாமிடம் - க.அனுசாந், கிழவன்காடு கலாமன்ற அறநெறிப்பாட்சாலை, காரைநகா, மூன்றாமிடம் - ம.சௌமியா, ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி அறநெறிப்பாடசாலை, நல்லூர்.

## கட்டுரை

**ஏழாம் வகுப்பு**

முதலாமிடம் - சோதீஸ்வரன் உமாகௌரி, அம்பாள் சமேத கல்யாண சுந்தரர் அறநெறிப் பாடசாலை, கரவெட்டி, இரண்டாமிடம் - சு.துவாரகன், வீரகத்திப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, கரவெட்டி, மூன்றாமிடம் - த.கவிதரன், வடகோவை சித்திர வேலாயுத சுவாமி அறநெறிப்பாடசாலை, கோப்பாய்.

**எட்டாம் வகுப்பு**

முதலாமிடம் - ச.ஹரிணி, புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப் பாடசாலை, பருத்தித்துறை, இரண்டாமிடம ச.கோபிதா, சொக்கவளவு சோதி விநாயகர் அறநெறிப்பாடசாலை, உடுவில, மூன்றாமிடம் ஸ்ரீ. வேணுசா, நெல்லண்டை அம்மன் அறநெறிப் பாடசாலை, பருத்தித்துறை.

**ஒன்பதாம் வகுப்பு**

முதலாமிடம் - இ.சங்கீர்த்தனன், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, உடுவில், இரண்டாமிடம் - இ.கிருசனன், மருதாம்புலம் பத்திரகாளி அறநெறிப்பாடசாலை, பருத்தித்துறை.

**பத்தாம் வகுப்பு**

முதலாமிடம் - க.கஜவானன், புற்றளை சித்திவிநாயகர் அறநெறிப்பாடசாலை, பருத்தித்துறை, இரண்டாமிடம் - செ.தனுசியா, சொக்கவளவு சோதி விநாயகர் அறநெறிப் பாடசாலை, உடுவில், மூன்றாமிடம் - நா.கலைஅரசி, சங்கத்தானை இந்து இளைஞர் மன்ற அறநெறிப் பாடசாலை, சாவகச்சேரி.

**பதினொராம் வகுப்பு**

முதலாமிடம் - க.அபிராமி, ஸ்ரீ மனோன்மணி அம்பாள் அறநெறிப் பாடசாலை, ஊர்காவற்றுறை, இரண்டாமிடம் - க.சாளினி, கைதடி வீரகத்திப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, சாவகச்சேரி, மூன்றாமிடம் - க.விதுசா, சிவகாமி அம்மன அறநெறிப்பாடசாலை, உடுவில்.

# பன்றிக் காய்ச்சலால் ஈரானில் 33பேர் பலி



(டெஹ்ரான்)

**ஈரானில் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 33 பேர் கடந்த மூனறு வாரத்தில் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

பன்றிக்காயச்சல் 'எச்.என் 1' என்ற வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது. கடந்த 2009ஆம் ஆண்டில் மெக்சிகோவில் தான் இக்காய்ச்சல் முதன் முறையாக உருவானது'. பின்னர் உலகம் முழுவதும் வேகமாக பரவியது.

இந்த நிலையில் தற்போது ஈரானில் இந்த நோய் பரவி வருகிறது. அங்கு கெர்மான் மற்றும் சிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணங்களில் பன்றிக் காய்ச்சல் நோய் பெருமளவில் தாக்கியுள்ளது.

கெர்மான் மாகாணத்தில் 600 பேர் பன்றிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளனர். அவர்களில் 28 பேர் பலியாகியுள்ளனர்.

சிஸ்தான்-பலுசிஸ்தான் மாகாணத்திலும் இந்த நோய் பரவி வருகிறது. அங்கு 5 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 3 வாரத்தில் மொத்தம் 33 பேர்பலியாகிஉள்ளனர். (இ-7)

### வட கிழக்கு சிரியாவில் நடத்தப்பட்ட

## விமான தாக்குதலில் 22 பேர் உயிரிழப்பு

வடகிழக்கு சிரியாவில் நடத்தபபட்ட வான்வழிதாக்குதலில் பொது மக்களில் 22 பேர் உயிரி ழுந்தனர் என்று கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஐ.எஸ். தீவிர வாதிகளுக்கு எதிராக ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட உலக நாடுகளின் படையானது வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது. வட கிழக்கு சிரியாவில் உள்ள அல்-ஹோல் கிராமத்தில் அமெரிக்க ராணுவம் நடத்திய வான்வழி தாக்குதலில் பொதுமக்கள் 26 பேர் உயிரிழந்தனர் என்று சிரியாவின் மனித உரிமைகள் கண்காணிப்பு குழு தெரிவித்து உள்ளது. இறந்தவர்களில் 7 சிறுவர்கள், 4 பெண்க ளும் அடங்குவர். இவர்களின் சடலமானது இடிந்த கட்டடத்தில் இருந்து மீட்கப்பட்டு உள்ளது என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சிரியாவில் ஜிகா திகளுக்கு எதிராக அமெரிக்கா உத வியுடன் குர்திஷ் மற்றும் அரபு கிளர்ச்சிக் குழுக்கள் தாக்குதல் நடத்தி வருகிறது.

கடந்த மாதம் ஐ.எஸ். தீவிர வாதிகளிடம் இருந்து அல்-ஹோல் மீட்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

### பிரிட்டன் நடத்திய

## வான் தாக்குதல்கள் சட்டவிரோதமானது

(சிரியா)

இஸ்லாமிய அரசு என்று தம்மைக் கூறிக் கொள்ளும் அமைப்பின் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது பிரிட்டன் நடத்திய வான் தாக்குதல்கள் சட்டவிரோதமானவை என ஜனாதிபதி பஷார் அல் ஆஸாத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனிலிருந்து வெளியாகும் சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்தசெவ்வியின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் இப்படியான வான் தாக்குதல்கள் "பயங்கரவாதப் புற்று நோய்" வன்முறையை அதிகரிக்கவே வழி செய்யும் எனக் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் அரசு எடுத்துள்ள நிலைப்பாட்டை, ரஷ்யா எடுத்துள்ள நிலைப்பாட்டுடன் ஒப்பிட்டுள்ள அவர் இரண்டிலும் உள்ள மாறுதல்களையும் அச்செவ்வியில் சுட்டிக்காட்டினார்.

ஐ.எஸ் அமைப்பின் மீது கடந்த செப்டெம்பரில் ரஷ்யாவுக்கு சொந்தமாக வான் தாக்குதலை ஆரம்பித்தது. ரஷ்யா எடுத்துவரும் நடவடிக்கை ஐரோப்பாவை காப்பாற்றுகிறது என தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி ஆஸாத் பதவியிலிருந்து நீக்கப்படுவதையே பிரிட்டன் விரும்புகிறது என்பதை தெளிவுபடுத்தியுள்ள நிலையில், சிரியாவில் ரஷ்யாவின் தலையீடு அவருக்கான ஆதரவை மேலும் பலப்படுத்துவது போல பரந்துபட்ட அளவில தெரிவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

## அகதிகளை வரவேற்க தயார் நிலையில் கனடா

(ரொரன்றோ)

கனடாவிற்கு நாளை 10 ஆம் திகதி சிரிய அகதிகளின் முதல் தொகுதியினர் வந்தடைவார்கள் என குடிவரவுத்துறை அமைச்சர் ஜோன் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு போர், தீவிரவாதம் போன்ற காரணங்களினால் சிரியா, ஆப்கானிஸ்தான் உட்பட பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்கள் அகதிகளாக வெளியேறி வருகின்றனர்.

இவர்களுக்கு ஐரோப்பிய நாடுகள் பலவும் புகலிடம் வழங்கி வருகின்றன.

இந்நிலையில் சிரியா அகதிகளின் முதல் தொகுதியினர் நாளை கனடாவிற்கு வருவார்கள் என குடிவரவுத்துறை அமைச்சர் ஜோன் மெக்கல்லம் அறிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், கனடாவை வந்தடைந்த பின் நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும், அவர்களுக்கான தங்குமிட வசதிகள் செய்து தரப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கு உதவிகளை வழங்க மாகாண அரசுகளும், கனேடிய மக்களும் மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

அகதிகள் விவகாரம் உலகளாவிய ரீதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் கனடாவின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (இ-7)

## யானைத்தந்தத்தின் விலை சீனாவில் சடுதியாகச் சரிவு

(பீஜிங்)

சீனாவில் கடந்த ஒன்றரை ஆண்டில் பட்டைதீட்டப்படாத தந்தத்தின் விலை சரிபாதியாக சரிந்திருப்பதாக அந்த துறையின் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சீன பொருளாதாரம் மந்தமடைவது, இந்த தந்த வர்த்தகத்தின் பாதிப்புகள் குறித்து சீனாவில் ஏற்பட்டுவரும் விழிப்புணர்வு மற்றும் சீனாவுக்குள் நடக்கும் தந்த வர்த்தகத்தை நிறுத்தவேண்டும் என்கிற சீன அரசின் நோக்கம் ஆகிய மூன்றும் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேசமயம், ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த அளவுக்கு தந்தத்தின் விலை சரியவில்லை. மேலும் ஆபிரிக்காவில் தந்தத்திற்காக கொல்லப்படும் யானைகளின் எண்ணிக்கை குறைந்ததற்கான அறிகுறியும் தெரியவில்லை என்றும் இந்த ஆய்வாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சீனாவில் யானைத்தந்தம் என்பது அந்தஸ்தின் சின்னமாக பார்க்கப்படுகிறது

ஆபிரிக்க யானைகள் வேட்டையாடப்படுவதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரே வழி என்பது யானை தந்தத்துக்கான சந்தையைக் குறைப்பது என்று யானை பாதுகாவலர்கள் தொடர்ந்து வாதாடி வந்துள்ளனர். குறிப்பாக சீனாவில் யானைத்தந்தம் என்பது சமூக மேல்மட்ட அந்தஸ்துக்கான குறியீடாக, அடையாளமாக பார்க்கப்படுகிறது.

அப்படிப்பட்ட சீனாவில் யானைத்தந்தத்தின் விலை வீழ்ச்சியடைந்திருப்பது யானைப் பாதுகாவலர்களின் பிரசாரம் பயனளிக்கத்தக்கதாக மாறியிருக்கிறது என்பதைக் காட்டுவதாக பார்க்கப்படுகிறது.

சீனாவில் கடந்த ஆண்டு பட்டைத் தீட்டப்படாத யானைத் தந்தத்தின் விலை ஒரு கிலோ 2100 அமெரிக்க டொலர் என்பதில் இருந்து தற்போது 1100 அமெரிக்க டொலர் என்பதாக குறைந்திருக்கிறது.

தற்போதைய இந்த ஆய்வு இரண்டு ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் இருவரும் யானைத்தந்தம் குறித்த ஆய்வை பல ஆண்டுகளாக செய்துவருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை மொரிஷியஸ் நாட்டின் முதலாவது பெண் ஜனாதிபதி மற்றும் புகழ் பெற்ற விஞ்ஞானி அமீனா கியூரிப் பக்கீம் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடிய போது...

# மும்பையில் பாரிய தீவிபத்து 2000 குடிசைகள் எரிந்து நாசம்

## சிறுவன் உள்ளிட்ட இருவர் கருகிப்பலி



**மும்பையில் தாமுநகரிலுள்ள குடிசை வீடு ஒன்றில் நேற்று முன் தினம் ஏற்பட்ட திடீர் தீவிபத்தில் சிக்கிய 2ஆயிரம் குடிசை வீடுகள் முற்றுமுழுதாக எரிந்து நாசமாகியுள்ளதோடு தீயில் கருகிய நிலையில் சிறுவன் உள்ளிட்ட இருவரின் சடலங்களும் மீட்கப் பட்டுள்ளன.**

மும்பை காந்திவிலி கிழக்கு, ஆகூர்லிமார்க் பகுதியில் தாமுநகர் குடிசைப்பகுதியில் நேற்று முன் தினம் பிற்பகல் 12.30 மணியளவில் ஒரு வீட்டில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. அந்த வீட்டில் இருந்த காஸ் சிலிண்டரில் தீ பிடித்து பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இதனால் அந்த இடமே அதிர்ந் தது.

குண்டு தான் வெடித்து விட்டதோ என அடுத்தடுத்து உள்ள வீடுகளில் இருந்த பொதுமக்கள் குழந்தைகளுடன் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடினார்கள். குடிசை வீடுகள் என்பதால் தீ மளமளவென எரிந்து பக்கத்து வீடுகளுக்கும் வேகமாக பரவியது.

இதனால் அந்த வீடுகளில் இருந்த சிலிண்டர்களும் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறின. இதில், வீடுகளில் இருந்த டி.வி. உள்ளிட்ட பொருட்களும் வெடித்து சிதறின. கரும்புகையுடன் தீ கொழுந்து விட்டு எரிந்தது. இதனால் அந்த பகுதி முழுவதும் புகை மண்டலம் சூழ்ந்து போர்க்களம் போல் காட்சி அளித்தது.

இந்த பயங்கர தீ விபத்து குறித்து தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு வாகனங்களில் விரைந்து வந்தனர்.

16 தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன. நாலாபுறமும் சுற்றி நின்றபடி தீயணைப்பு படை வீரர்கள் தண்ணீரை பீய்ச்சி அடித்து தீயை அணைக்க போராடினார்கள். ஆனாலும் தீயை அவர்களால் உடனடியாக கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. இதற்கிடையே அருகருகே இருந்த வீடுகள் அடுத்தடுத்து தீப்பிடித்து எரிந்தன. மேலும் காஸ் சிலிண்டர்களும் வெடித்து சிதறிய வண்ணம் இருந்தன.

இதனால் தீயை அணைக்க முடியாமல் தீயணைப்பு படையினர் திணறினார்கள். இந்தநிலையில், சுமார் நான்கரை மணி நேர போராட்டத்துக்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இந்த கோர தீ விபத்தில் பிரலாத் கராத் (வயது45) என்ப வரும், அடையாளம் தெரியாத சிறுவன் ஒருவனும் உடல் கருகி பலியானார்கள். கரிக்கட்டையாகி கிடந்த இருவரது உடல்களையும் தீயணைப்பு படையினர் மீட்டனர். இதனையடுத்து பொலிஸார் 2 பேரின் உடல்களையும் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் பார்வதி சங்கர்(60), சுமித்ரா பானுதாஸ்(30), ரமா காம்ளே(54), வைஷாலி மஸ்கே(28), ஆஷா உகடே(26), சானியா ராஜேஷ்(8), சோனு குப்தா(24), நஜிர் சேக்(35), ஜைக்கி காக்டா(25), சுரேஷ் தேடிகன்கரி (31) சுரேந்திரா கிஷன்(22) உட்பட 13 பேர் காயம் அடைந்தனர்.


இந்த தீ விபத்தில் தாமுநகரில் உள்ள சுமார் 2 ஆயிரம் குடிசை வீடுகள் முற்றிலும் எரிந்து நாசமாகி உள்ளதாக மாநகராட்சி வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள ளது. இந்த வீடுகளில் இருந்த எந்த பொருளும் மிஞ்சவில்லை. அனைத்து பொருட்களும் எரிந்து தீக்கிரையாகி விட்டன. இதனால் வீடுகளை இழந்தவர்கள் கதறி அழுதபடி இருந்தனர்.

தீ அணைக்கப்பட்ட பின்னர் அந்த பகுதியே மயானம் போல் காட்சி அளித்தது. தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் உடனடியாக தெரியவில்லை.

மாநகராட்சி அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தினர். மேலும் அப்பகுதி பொலிஸார் தீ விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-7)

பனிமலை உருகுகிறது

# வெப்பமயமாகும் எவரெஸ்ட் சிகரம்



உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரம் இமயமலையில் உள்ளது. பனியால் மூடப்பட்ட இந்த எவரெஸ்ட் சிகரம் 8,844 மீற்றர் உயரம் கொண்டது.

எவரெஸ்ட் சிகரத்தை திபெத், பீடபூமியில் குயோ மோலாக்மா என்றழைக்கின்றனர். இதுகுறித்து ஹுனான் பல்கலைக்கழகத்தின் சீன அறிவியல் அகடமியும், குயோ மோ லாக்மா பனிசிறுத்தை சரணாலய மையமும் இணைந்து ஆய்வு நடத்தினார்கள்.

இதில் பருவநிலை மாற்றம் காரணமாக எவரெஸ்ட் சிகரம் வெப்பமயமாகி வருவது தெரிய வந்தது.

இதனால் எவரெஸ்ட் பனிமலை உருகி அதன் அளவு சுருங்கி வருவதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். திபெத்தில் 20ஆம் நூற்றாண்டில் 1990ஆம் ஆண்டுகளில் வெப்பமயம் தொடாங்கியது.

அதில் இருந்து திபெத்தில் உள்ள இமயமலையில் பனி உருக தொடங்கியது. அங்குள்ள கரகோர்ணம், வெஸ்டர்ன் குன்லம் மாகாணங்களில் உருகும் தன்மை அதிக அளவில் ஏற்பட்டது.

இதன் காரணமாக திபெத்தில் ஏரிகள் பல மடங்கு பெருகியுள்ளன. 1970ஆம் ஆண்டுகளில் அது 1081 ஏரிகள் இருந்தன. பின்னர் 2010 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தற்போது 80 சதவீதம் ஏரிகள் அதிகரித்துள்ளன.எனவே திபெத்தில் வனப்பகுதி அதிக அளவில் பரவியுள்ளது. கடந்த 1997ஆம் ஆண்டில 72 இலட்சத்து 90 ஆயிரம் ஹெக்டேயராக இருந்த வனப்பகுதி 2013 ஆம் ஆண்டில் 226 கோடி ஹெக்டேயர் ஆக உயர்ந்துள்ளது. (இ-7)

# ஐ.எஸ்.,அல்-கொய்தாவிற்கு பணம் கிடைக்கும் 6 வழிகள்

ஐ.எஸ்ஐ.எஸ்.மற்றும்அல்கொய்தா உள்ளிட்ட தீவிரவாத இயக்கங்கள் உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளில் ஆதிக்கம் செலுத்துகிறது என்றால் அதன் பண பலமும் அதற்கு ஒரு முக்கிய காரணம். இந்த அமைப்புகளுக்கு எப்படி அளவு கடந்த பணம் கிடைக்கிறது என்ற கேள்வி நீண்ட காலமாகவே உள் ளது.

பொதுவாக இஸ்லாமிய நாடு களில் இருந்து இந்த அமைப்புகளுக்கு நிதி கிடைக்கிறது என்பது மட்டுமே இங்கு கூறப்பட்டு வருகிறது. தற்போது ஐ.எஸ்.ஐ.எஸ் மற்றும் அல் கொய்தா அமைப்புகளுக்கு பணம் கிடைக்கும் 6 முக்கிய வழிகளை இங்கு பார்க்கலாம்.

1. வரி(Taxation)

ஐ.எஸ் (இஸ்லாமிய தேசம்) தன்னுடைய பகுதிக்குட்பட்ட மக்களிடையே பல்வேறு முக்கிய வரிகளின மூலமாக பணம் ஈட்டுகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு 6 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் ஈட்டு கிறது ஐ.எஸ்.

2.எண்ணெய் வளம்(Oil)

எண்ணெய் வளம் ஐ.எஸ் அமைப்பிற்கு வருமானம் கிடைக்கும் முக்கியமான வழி. சிரியா மற்றும் ஈராக்கில் அதன் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதிகளில் கிடைக்கும் எண்ணெய் வளங்களை துருக்கி வழியாக பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. எண்ணெய் ஏற்றுமதி மூலம் ஐ.எஸ் அமைப்பிற்கு 4 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் கிடைக் கிறது.

3. பணய கைதிகள் மூலம் (Ransoms)

ஐ.எஸ் அமைப்பானது பல்வேறு நாடுகளை சேர்ந்த குடிமக்களை பணயக் கைதிகளாக வைத்து கொண்டு மிரட்டி பணம் குவிக்கிறது. செப்டெம்பர் 2013 முதல் செப்டெம்பர் 2014 வரையிலான கால அளவில் பணயக் கைதிகளுக்கு சுமார் 230 கோடியில் இருந்து 300 கோடி ரூபாயாக் தொகையை அதிகரித்துள்ளது.

4. நிதியுதவி(Donations)

பல்வேறு தீவிரவாத குழுக்கள் மற்றும் அமைப்புகள் ஐ.எஸ்-க்கு தொடர்ந்து நிதியுதவி அளித்து வருகிறது. இந்த நிதியுதவி பல்வேறு பெயர்களில் பரிமாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

5.பழம்பொருட்கள் மற்றும் கலைபொருட்கள் விற்பனை மூலம் ஐ.எஸ் உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு பணம் வந்து கொண்டிருக்கிறது.

6. வங்கிகளில் ஊழல் மூலமும் இத்தகைய தீவிர்வாத அமைப்புகளுக்கு தொடர்ந்து பணம் வந்து கொண்டிருக்கிறது என அதிர்ச்சித் தகவல் வெளியடப்பட்டுள்ளது. (இ-7)

## ஏழு குற்றவாளிகள் மீதான இறுதிக்கட்ட வாதம் ஆரம்பம்

மும்பை தொடர் குண்டுவெடிப்பு வழக்கில் 7 குற்றவாளிகள் மீதான இறுதிக்கட்ட வாதம் நேற்று முன்தினம் தொடங்கியது. மும்பையில் கடந்த 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 இடங்களில சக்திவாய்ந்த குண்டுகள் பலத்த சத்தத்துடன் வெடித்து சிதறின. இந்த சம்பவத்தில் 257 அப் பாவி பொது மக்கள் பலியானார்கள். 713 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 100 பேரை குற்றவாளிகள் என்று தடா நீதிமன்றம் அறிவித்தது. இதில் பிரபல தாதா அபுசலீம், முஸ்தபா தோசா, கரிமுல்லா கான், ஃபிரோஷ் அப்துல் ரஷீத்கான், ரியாஸ் சித்திக், தாகிர் மெர்ச்சன்ட் மற்றும் அப்துல் கய்யூம் ஆகிய 7 பேர் விசாரணை நிறைவில கைது செய்யப்பட்டதால், அவர்கள் மீதான விசாரணை மட்டும் தனிமைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மழை வெள்ளத்தில் ஆவணங்களை இழந்தவர்களுக்காக சிறப்பு முகாம்

கனமழை வெள்ளத்தால் முக்கிய ஆவணங்களை இழந்தவர்களுக்கு எதிர்வரும் 14-ம் திகதி முதல் இரு வாரங்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வெள்ளத்தின காரணமாக் பொதுமக்கள் தங்களது நிலம் மற்றும் வீட்டு மனைப் பட்டா, கல்வி சான்றிதழ், எரி வாயு இணைப்பு அட்டை, ஆதார் அடையாள அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, வங்கி கணக்குப் புத்தகம், நிலம் /வீட்டு கிரையப் பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களை இழந்துள்ளனர் என தகவல் கிடைக்க பெற்றுள்ளது.

இம்முகாம்களில், தமிழ்நாடு அரசின் பல்வேறு துறை அதிகாரி களும், மத்திய அரசின் தொடர்புடைய நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டு பொது மக்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று ஒரு வாரத்திற்குள்ளாக நகல் ஆவணங்களை கட்டணமின்றி வழங்குவர்.

சிறப்பு முகாம்களில் மட்டுமன்றி, பொதுமக்கள் விண்ணப்பங்களை பொது சேவை மையங்கள் மூலமாகவும் கொடுத்து நகல் ஆவணங்களைப் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)



# சிறுவர் அரங்கம்

1304

## மூன்று தண்டனை



அத்திப்பட்டி என்னும் ஊரில் மாணிக்கம் என்பவர் நெய் வியாபாரம் செய்து வந்தார். அவருக்கு ஒரு மகன் இருந் தான். அவன் பெயர் சிங்காரம். அவன் மிகவும் பேராசை பிடித்தவன்.

மாணிக்கத்திற்கு வயதாகி விட்டதால், வியாபாரத்தைத் தன் மகன் சிங்காரத்திடம் ஒப் படைத்து விட்டு, ஓய்வெடுத்துக் கொண்டார்.

சிங்காரத்துக்கு அவன் தந்தையின் வியாபார முறை களான நியாயம், நாணயம் முதலியவை சிறிதும் பிடிக்க வில்லை. அவன் வெகு விரைவில் பணக்காரனாக வேண்டும் என்று ஆசைப் பட்டான்.

நீண்ட நாட்கள் சிந்தித்த சிங்காரம், "தான் விற்கும் பொருட்களில் கலப்படம் செய்து, அதிக விலைக்கு விற்று, அதில் அதிக லாபம் பெற்று, விரைவில் தான் வசித்து வந்த ஊரிலேயே பெரிய பணக்காரன் ஆகி விட வேண்டும்" என்று ஆசைப் பட்டான். அவனிடம் கொஞ்சம் நெய் இருந்தது. அதில் அதே நிறத்தில் உள்ள தேங்காய் எண்ணெயையும், சிறிது ரவை யையும் கலந்து விற்றால், மக்களுக்குத் தெரியவா போகிறது என்ற எண்ணம் கொண்டான். முதலில் சிறிய அளவில் தேங்காய் எண் ணெயையும், ரவையையும் நெய்யில் கலந்து விற்ற போது, மக்கள் கலப்படத்தைப் புரிந்து கொள்ளவில்லை. மக்கள் கலப்படத்தைப் புரிந்துக் கொள்ளாததை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சிங்காரம், ஒரு தடவை தேங்காய் எண்ணெயிலும், ரவையிலும் சிறிது அளவு நெய்யைக் கலந்து விற்றான். நெய் வாசனைக்குப் பதில் தேங்காய் எண்ணெய் வாசனை வருவதைப் பார்த்த மக்கள், வியாபாரியைப் பற்றி ஊர்த் தலைவரிடம் முறையிட்டனர்.

ஊர்த் தலைவரும் சிங்காரத்தை அழைத்து விசாரித்தார். ஊர்த் தலைவர் விசாரணையை சிறிதும் பொருட்படுத்தாத சிங்காரம், தான் விற்பது சுத்தமான நெய் என்றும், தன்னைப் போல எந்த வியாபாரியும் சுற்று வட்டாரத்தில் குறைந்த விலைக்கு நெய் விற்க முடியாது என்றும் கூறினான். சிங்காரத்தின் வார்த்தைகளில் திருப்தி அடையாத ஊர்த் தலைவர், சிங்காரம் கடையில் இருந்த இரண்டு கான்கள் நெய்யை ஊர் மக்களை கொண்டு வர சொல்லி, சிங்காரத் தையும் அழைத்துக் கொண்டு, நீதிபதியிடம் சென்றார்.

நீதிபதியிடம் சென்ற ஊர்த்தலைவர் நீதிபதியைப் பார்த்து, "கனம் நீதிபதி அவர்களே! இதோ உங்கள் முன் நிற்கும் சிங்காரம் ஒரு நெய் வியாபாரி. அவன் நெய் என்ற பெயரில், தேங்காய் எண்ணெயையும், ரவையையும் நெய்யில் கலந்து அதிக விலைக்கு விற்று மக்களை ஏமாற்றுகிறான். நீங்கள்தான் விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டும்,"" என்று கூறினார்.

நீதிபதியும் சிங்காரத்தைப் பார்த்து, ""ஊர்த் தலைவர் கூறும் குற்றச்சாட்டுகளுக்கு என்ன பதில்?"" என்று கேட்டார்.

""கனம் நீதிபதி அவர்களே! நான் எந்தத் தவறும் செய்யவில்லை. நான் மக்களுக்கு நன்மைதான் செய்து வருகிறேன். என்னைப் போல் யாராலும் குறைந்த விலைக்கு நெய்யை விற்க முடியாது,"" என்று கூறினான் சிங்காரம்.

நீதிபதியும் கானில் இருந்து கொஞ்சம் நெய்யைத் தன் கையில் எடுத்து அதை மக்கள் மத்தியில் காண்பித்து, ""இது அசல் நெய்யா அல்லது கலப்பட நெய்யா?"" என்று கேட்டார்.

மக்களும் ஒரே குரலில், ""இது நெய் என்ற பெயரில் உள்ள தேங்காய் எண்ணெய்,"" என்று கூறினர்.

நீதிபதியும் சிங்காரத்தைப் பார்த்து, ""நீ நெய் என்று சொல்லுவது வெறும் தேங்காய் எண்ணெய்தான் என்று ஊர் மக்கள் கூறு வதால், நீ விற்பது கலப்படம் செய்த நெய் என்பது உறுதியாகி விட்டது. ஆகவே, நீ செய்த குற்றத்துக்கு மூன்று விதமான தண்டனையை உனக்கு அளிக்கிறேன். மூன்றில் உனக்குப் பிரியமான ஒன்றை நீயே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்,"" என்று கூறினார்.

""முதலாவதாக, உன் கடையில் இருந்து கொண்டு வரப்பட்ட இரண்டு டின்களில் உள்ள நெய்யை நீ ஒருவனே உண்ண வேண்டும் அல்லது ஐம்பது பிரம்படிகள் வாங்க வேண்டும். அதுவும் முடியாது என்றால், ஐநூறு காசுகள் அபராதம் செலுத்த வேண்டும். எது உனக்குச் சரியெனப்படுகிறதோ அதை ஏற்றுக் கொள்,"" என்றார் நீதிபதி.

நீதிபதி கூறியதைக் கேட்ட சிங்காரம் யோசித்தான். பிரம்படியையும், ஐநூறு காசுகளையும் விட கலப்பட நெய்யை உண்பது தான் தனக்கு சுலபமானது என்று முடிவு செய்தான். கலப்பட நெய்யை ஒரு பாத்திரத்தில் எடுத்து சிறிது குடித்த உடன் அவனுக்கு வாய் குமட்டிக் கொண்டு வந்து வாந்தி எடுக்க ஆரம்பித்தான். அவன் உடனே நீதிபதியிடம், ""ஐயா, என்னால் நான் மக்களுக்கு விற்ற நெய்யை உண்ண முடியவில்லை. அதனால் ஐம்பது பிரம்படிகள் வாங்கிக் கொள்கிறேன்,"" என்றான்.

முதல் இரண்டு பிரம்படிகள் வாங்கிய சிங்காரம் வலி பொறுக்க முடியாமல், அலறித் துடித்தான். உடனே அவன் நீதிபதியைப் பார்த்து, ""தண்டனையான ஐநூறு காசுகளை செலுத்தி விடுகிறேன்,"" என்றான்.

சிங்காரத்தின் நடவடிக்கைகளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ஊர் மக்களும், ஊர்த் தலைவர் மற்றும் நீதிபதியும் வாய் விட்டுச் சிரித்தனர்.

முதலிலேயே ஐநூறு காசுகள் அபராதத் தொகையைக் கட்டியிருந்தால், முதல் இரண்டு தண்டனை களை அனுபவிக்காமல் இருந்திருக்கலாம். பேராசை காரணமாக, முட்டாள் தனமாக நடந்து கொண்டதால், ஒரு தண்டனைக்கு மூன்று தண்டனைகளை ஒரே நேரத்தில் அனுபவித்தான் சிங்காரம். அத்துடன் தன்னுடைய கலப்பட தொழிலை நிறுத்தினான்.

## 12.2015 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

1582 (ஜூலியன், ஞாயிற்றுக்கிழமை) - பிரான்ஸ் அடுத்த நாளை திங்கட்கிழமை, டிசம்பர் 20 (கிரெகோரியன்) ஆக்கியது.

1793 - நியூயோர்க் நகரின் முதலாவது நாளிதழ் "தி அமெரிக்கன் மினேர்வா" வெளியிடப்பட்டது.

1856 - ஈரானிய நகரம் புஷேஹர் பிரித்தானிய ஆக்கிரமிப்புப் படைகளிடம் வீழ்ந்தது.

1905 - பிரான்சில் அரசையும் கிறிஸ்தவ தேவா லயஙகளையும் பிரிக்கும் சட்டமூலம் கொண்டு வரப்பட்டது.

1917 - பிரித்தானியர் பாலஸ்தீனத்தின் ஜெருசலேம் நகரைக் கைப்பற்றினர்.

1922 - போலந்தின் முதலாவது அதிபராக "கப்ரியேல் நருட்டோவிச்" தெரிவு செய்யப்பட்டார்.

1937 - ஜப்பானியப் படைகள் சீன நகரான நாஞ் சிங்கைத் தாக்கின.

1940 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய, மற்றும் இந்தியப் படைகள் இத்தாலியப் படையினரை எகிப்தில் தாக்கினர்.

1941 - இரண்டாம் உலகப் போர்: சீனக் குடியரசு, கியூபா, குவாத்தமாலா, பிலிப்பீன்ஸ் ஆகியன ஜெர்மனி மற்றும் ஜப்பான் மீது போரை அறிவித்தன.

1946 - இந்திய சட்டசபை ராஜேந்திர பிரசாத் தலைமையில் அமைக்கப்பட்டது.

1953 - ஜெனரல் எலெக்ட்றிக் நிறுவனம் தனது நிறுவனத்தில் பணியாற்றிய கம்யூனிஸ்ட்கள் அனைவரையும் பணிநீக்கம் செய்தது.

1961 - பிரித்தானியாவிடம் இருந்து தங்கனீக்கா விடுதலை பெற்றது.

1979 - பெரியம்மை நோய் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக உலக சுகாதார அமைப்பு அறி வித்தது. மனித உயிர் கொல்லி நோயொன்று முற்றாக அழிக்கப்பட்டது இதுவே முதலா வதாகும்.

1986 - இந்தியைத் திணிக்கும் அரசியல் சட்ட நகலை எரித்ததற்காக தி.மு.க. தலைவர் மு. கருணா நிதி உள்ளிட்ட 10 தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப் பட்டனர்.

1990 - லெக் வலேசா போலந்தின் முதலாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அதிபரானார்.

1992 - வேல்ஸ் இளவரசர் சார்ல்ஸ், இளவரசி டயானா இருவரினதும் பிரிவினை அறிவிக்கப்பட்டது.

1995 - உலகின் முதலாவது 24 மணி முழு நேர தமிழ் வானொலி ஒலிபரப்பு, "கனேடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்" என்னும் பெயரில் கனடாவின் டொராண்டோ நகரில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப் பட்டது.

2003 - மாஸ்கோ நகர மத்தியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 6 பேர் கொல்லப்பட்டனர்.

2006 - மாஸ்கோவின் மருத்துவமனை ஒன்றில் இடம்பெற்ற தீவிபத்தில் சிக்கி 45 பேர் உயிரிழந்தனர்.

பிறப்புக்கள்

1946 - சோனியா காந்தி, இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர்

இறப்புகள்

2006 - சு. வில்வரத்தினம் (சு.வி.) ஈழத்துக் கவிஞர் (பி. 1950)

சிறப்பு நாள்

தான்சானியா - விடுதலை நாள் (1961)

# முன்னிலை சோஷலிசக் கட்சி ஆணைக்குழுவில் முறைப்பாடு

முன்னிலை சோஷலிச கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிய முறையில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த கட்சியின் செயற்குழு உறுப்பினர் புபுது ஜாகொட இந்த முறைப்பாட்டை நேற்று முன்தினம் பதிவு செய்துள்ளார்.

2012 ஆம் ஆண்டு அந்த கட்சியின் உறுப்பினர்களான குமார் குணரட்னம் மற்றும் திமுது ஆட்டிகல ஆகியோர் கடத்தப்பட்டமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஸ பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியிருந்த செவ்வியை அடிப்படையாக வைத்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கடந்த காலங்களில் காணாமல் போனோர் தொடர்பிலும் அவர்களின் நிலைமை குறித்தும் ஆராய வேண்டும் என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக புபுது ஜாகொட மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கிரேக்கத்திற்கு ஏற்பட்ட நிலை இலங்கைக்கு ஏற்படக் கூடும்

## திஸ்ஸ விதாரண எச்சரிக்கை

(கொழும்பு)

**கிரேக்கத்திற்கு ஏற்பட்ட நிலைமை இலங்கைக்கும் ஏற்படக்கூடுமென முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

கிரேக்கத்தில் ஏற்பட்ட பாரிய பொருளாதார பின்னடைவு இலங்கையிலும் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.


வரவு செலவுத் திட்ட விவாதங்கள் பூர்த்தியாவதற்கு முன்னதாகவே தொழிற் சங்கங்கள் வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கியுள்ளன.

வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பது இதன் ஊடாகவே தெரிகின்றது. மக்கள் எதிர்ப்பார்த்த எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

உரிய முறையில் இந்த வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை.

நாடு இன்று பாரியளவு சவால்களை எதிர்நோக்கி வருகின்றது, கிரேக்கத்தில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி நிலைமை இலங்கையிலும் ஏற்படக்கூடிய ஆபத்து காணப்படுகின்றது என திஸ்ஸ விதாரண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)



# எம்.பிக்கள் லக்ஷ்மன் செனவிரட்னவுக்கும் மனுஷ்யவுக்கும் பிரதியமைச்சுப் பதவிகள்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ்ய நாணயக்கார மற்றும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன செனவிரட்ன ஆகியோருக்கு அரசாங்கத்தின் பிரதியமைச்சுப் பதவிகள் கிடைக்கவுள்ளதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அந்தவகையில் இன்னும் சில தினங்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் இவர்கள் இருவரும் பிரதியமைச்சர்களாக நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் லக்ஷ்மன் செனவிரட்ன ஆதரவாக வாக்களித்திருந்தார். அத்துடன் மனுஷ்ய நாணயக்கார அன்றையதினம் பாராளுமன்றத்தில் சமூகமளித்திருக்கவில்லை: பாராளுமன்றஉறுப்பினர்களானமனுஷ்ய நாணயக்கார மற்றும் லக்ஷ்மன் செனவிரட்ன ஆகியோர் கடந்த ஜனாதிபதித்தேர்தலிலும் அதன்பின்னர் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலிலும் தீவிர மகிந்த ஆதரவாளராக செயற்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாளக கொடஹேவா பொலிஸாரால் கைது

பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் நாளாக கொடஹேவா நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்டார். வாக்குமூலம் பெறுவதற்காக நிதிமோசடி விசாரணைப் பிரிவுக்கு நேற்று முன்தினம் அழைக்கப்பட்டிருந்த இவர் விசாரணையின் பின்னர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்தது.

இதேவேளை சந்தேக நபர்கள் மூவரும் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் இம் மாதம் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

50 இலட்சம் ரூபா நிதி மோசடி சம்பவம் தொடர்பில் இவர் கைதானதோடு இரு தினங்களுக்கு முன்னர் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் தம்மிக பெரேரா மற்றும் கால்டன் ஸ்போர்ட்ஸ் பணிப்பாளர் றொனி இப்ராஹீம் ஆகியோர் நிதி மோசடி பிரிவினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

2013ஆம்ஆண்டு இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க பங்குச் சந்தை குறித்து இளைஞர்களை அறிவூட்டுவதற்காக முறைகேடாக 50 இலட்சம் ரூபா வழங்கிய சம்பவம் தொடர்பிலே இவர்கள் கைதாகியுள்ளனர். இதற்காக வழங்கப்பட்ட காசோலை அரசியல் செயற்பாடுகளுக்காக கால்டன் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருப்பது விசாரணை மூலம் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் தம் மிக பெரேரா கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டிருந்தமை தெரிந்ததே.

நாளக கொடஹேவா கடந்த ஆட்சியில் பல முக்கிய அரச நிறுவனங்களில் உயர் பதவிகள் வகித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இவர் இலங்கை இன்சுரன்ஸ் கூட்டுத்தாபன முகாமைத்துவப் பணிப்பாளராக பணிபுரிந்துள்ளதோடு அதன் பின்னர் சுற்றுலா சபை தலைவராக 2 வருடங்கள் கடமை புரிந்தார். 2012 ஆம் ஆண்டு பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு தலைவராக நியமிக்கப்பட்ட இவர் கடந்த ஜனவரி வரை இந்தப் பதவி வகித்தார்.

இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் தலைவராக நாமல் ராஜபக்ஷ எம்.பி. செயற்பட்டதோடு கால்டன்ஸ்போர்ட்ஸ்நிறுவனம்யோசித ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே. இந்நிலையில் இவர்களும் நிதி மோசடி பிரிவினால் விசாரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## வாதத்துக்கு மருந்து!

ஒரு ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அவர் பார்வையிழந்தவர். வாதாடுவதிலே சாலச் சிறந்தவர். தர்க்கத்திலே மேதை.

அவரிடம் சில பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது ஒருவர் சொன்னார்,

சூரியன் வெளிச்சத்தைக் கொடுக்கிறது. சந்திரன் வெளிச்சத்தைக் கொடுக்கின்றது. விண்மீன்கள் வெளிச்சத்தைக் கொடுக்கின்றது. வெளிச்சம் ஒன்று இருப்பதால்த்தான் நமக்கு எவ்வளவோ உபயேகமாக இருக்கிறது. என்றார்.

உடனே பார்வையிழந்த அந்தப் பெரியவர், வெளிச்சம் என்ற ஒன்று உண்மையிலேயே இருக்கிறதா? என்றார்.

உண்மையிலேயே ஒளி இருக்கிறது! என்றார் மற்றவர்.

நான் அதை நம்ப மாட்டேன். என்று கூறினார்.

சூரியன்... சந்திரன்... நட்சத்திரம்... இவையெல்லாம் இருக்கிறதாகச் சொன்னார்கள்!

அதை எல்லாம் ஒப்புக்கொள்கிறேன். ஆனால்... அதை எல்லாம் என்னைக் கொஞ்சம் தொட்டுப்பார்க்க விடுங்கள்! என்றார்.

அதை எல்லாம் தொட்டுப் பார்க்க முடியாது! என்றார்.

அப்படியென்றால்... முகர்ந்து அறிகிறேன். முகர்ந்து பார்க்க விடுங்கள்... ஏதாவது வாசனை வருகிறதா... என்று பார்க்கிறேன் என்று சொன்னார்.

அதுவும் முடியாது என்றார்.

சரி.... அதுவும் முடியவில்லை என்றால் அந்த வெளிச்சத்திலே சிறிதளவு எடுத்து என் கைளில் கொடுங்கள். வாயிலே போட்டு விழுங்கி ருசித்துக் கொள்கிறேன். என்றார்.

எந்த வகையிலேயும் அவரை ஒப்புக் கொள்ள வைக்க முடிவியவில்லை.

அவரை சுற்றியிருந்தவர்கள் எல்லோரும் குழப்பமடைந்தார்கள்.

என்ன நாங்கள் சொல்வதை நீங்கள் நம்பவில்லையா? என்றார். என்னுடைய நான்கு புலன்களுக்கும் புலப்படாத ஒன்றை நான் மாயை என்கிறேன். நீங்கள் என்னை அவமானப்படுத்துவதற்காக இப்படிச் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன்.

எதோ உங்களுக்கு எல்லாம் பார்வை இருப்பதாகவும்... அது எனக்கு இல்லை என்கிறதாகவும் சொல்லி என்னை நீங்கள் அவமதிக்கிறீர்கள். அப்படியென்றார் தர்க்க சாஸ்த்திரத்லேயே மேதையான அந்தப் பெரியவர்.

சுற்றியிருந்தவர்கள் பார்த்தார்கள்.... வெளிச்சம் இருக்கிறதை இவர் நம்பவேண்டும். இவரை நம்ப வைக்க வேண்டும் என்றால்... அது புத்தராலே தான் முடியும் என்று கூறினார்கள்.

சரி அவரிடம் போவோம் என்று எல்லோரும் முடிவெடுத்து போய்ச் சேர்ந்தார்கள்.

புத்தரிடம் விபரத்தை எடுத்துரைத்தார்கள்.

புத்தர் சிரித்தார். உண்மை எப்படிப்பட்டது என்று நான் நினைக்கின்றேனோ அப்படித்தான் அவரும் நினைக்கிறார். எதையும் அனுபவ பூர்வமாக உணர்ந்தால் தான் நம்ப முடியும். ஒளியை அனுபவித்து அறியாத வரையில்தான் நம்பமுடியும்.

ஒளியை அனுபவித்து அறியாத வரையில் அது இருக்கிறதா? இல்லையா? என்ற கேள்விக்கே இடமில்லை. அதனாலே இவர் அதை நம்பாததும் சரிதான்! என்று கூறினார்.

அதன்பின் சொன்னார்; உங்களை குணப்படுத்தி விடலாம்... உங்களுக்கு தேவை ஞானி அல்ல... மருத்துவம் தான் என்றார். ஒரு வைத்தியரிடம் அழைத்துக் கொண்டு சென்றார்கள். பார்வை கிடைக்கப் பெற்றது... வெளிச்சத்தை கண்டதும் அவர் மகிழ்ச்சியடைந்தார். புத்தரை வணங்கினார்.

நான் வாதம் செய்தேன்... நீங்கள் எதிர் வாதம் செய்வில்லை! என்னுடைய பிரச்சினை மருத்துவரால் தான் தீரும் என்று சொல்லி எனக்குப் பார்வை கிடைக்கச் செய்தீர்கள் என்றார்.

மனித குலத்தின் மிகப் பெரும்பாலானவர்களின் நிலமை இது தான்– அப்படியென்கிறார் ஓஷோ!

இந்தக் காலத்திலே சில பேர்; கண்களைத் திறந்து கொண்டு சில காரியங்கள் செய்வார்கள். அது பிழையென்பது அவர்களுக்குப் பின்பு தான் புரியும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

74

## இந்தி "சந்திரலேகா" மகத்தான வெற்றி! கோடி கோடியாக வசூல்!

30 இலட்சம் ரூபா செலவில் மிக பிரமாண்டமாகத் தயாரிக்கப்பட்ட தமிழ் "சந்திரலேகா" வெற்றிகரமாக ஓடிய போதிலும் செலவு அதிகமாகி விட்டதால் இலாபம் கிடைக்குமா என்பது கேள்விக் குறியாக இருந்தது.

**விநியோகஸ்தர் சொன்ன யோசனை**

வடநாட்டைச் சேர்ந்த திரைப்பட விநியோகஸ்தர் தாராசந்த் என்பவர் ஜெமினி படங்களை வட நாட்டில் விநியோகித்து வந்தார்.

அவர் சந்திரலேகாவைப் பார்த்து விட்டு வானளாவப் புகழ்ந்தார். இது போன்ற பிரமாண்டமான படம் இது வரை இந்தியில் எடுக்கப்படவில்லை. இதை இந்தியில் டப் செய்து வெளியிடுங்கள். பிரமாதமாக வசூலாகும். விநியோக உரிமையை நான் வாங்கிக் கொள்கிறேன் என்று வாசனிடம் கூறினார்.

தமிழ் சந்திரலேகா வசூல் பற்றி சற்று சோர்வாக இருந்த வாசன் தாராசந்த் சொன்ன யோசனையைக் கேட்டு உற்சாகமடைந்தார். சந்திரலேகாவின் இந்திப் பதிப்பை உருவாக்குவது குறித்து உடனடியாக ஆலோசனைகள் தொடங்கினார்.

**மாற்றங்கள்**

சந்திரலேகாவில் வசனங்கள் குறைவு. எனவே சந்திரலேகாவை டப் செய்வது எளிது தவிரவும் ஒரிஜினல் இந்திப் படம் போலவே தோன்றும் என்று தெரிந்து கொண்டார்.

தமிழ் சந்திரலேகாவின் முக்கால் வாசியை அப்படியே வைத்துக் கொண்டார்.

என். எஸ்.கிருஷ்ணன் சம்பந்தப்பட்ட நகைச்சுவைக்காட்சிகளை இந்தி நகைச்சுவை நடிகர் ஆகாவை வைத்து படமாக்கினார்.

மற்றப்படி முரசாட்டம், சர்க்கஸ், கத்திச்சண்டை முதலிய காட்சிகளை அப்படியே இடம்பெற்றன.



எம்.கே. ராதா-ரஞ்சன் கத்திச்சண்டை

ரசிகர்களைக் கவருவது எப்படி? கதாநாயகன் எம்.கே.ராதா, வில்லன் ரஞ்சன், கதாநாயகி டி.ஆர்.ராஜகுமாரி இவர்கள் அனைவரும் வடநாட்டு ரசிகர்களுக்கு அறிமுமில்லாதவர்கள். எனவே இந்தி ரசிகர்களை முதலில் தியேட்டருக்கு வரச்செய்ய வேண்டும். அவர்கள் வந்து படத்தைப் பார்த்து விட்டால் படம் நிச்சயம் அவர்களைக் கவர்ந்து விடும் அவர்களைத் தியேட்டருக்கு வரச் செய்வது எப்படி? என்று யோசித்தார் வாசன்.

அதுவரை இந்திப்படங்களுக்கு மிகக் குறைவாகவே விளம்பரம் செய்து வந்தார்கள். சின்ன சின்ன போஸ்டர்களை மட்டுமே சுவரில் ஒட்டுவார்கள். பெரிய பனர்களை வைக்கும் பழக்கம் அப்போது கிடையாது.

இந்தி சந்திரலேகாவுக்கு பெரிய பெரிய பனர்களை வைத்து வடநாட்டையே திகைப்படையச் செய்தார் வாசன். பத்திரிகைகளில் செய்யப்பட்ட விளம்பரங்கள் சந்திரலேகா பற்றி பெரிய எதிர்பார்ப்பை மக்களிடம் ஏற்படச் செய்தன. இந்தி சந்திரலேகாவுக்கு ஆன விளம்பரச் செலவு பல இலட்சங்கள்.

**மகத்தான வெற்றி**

சந்திரலேகாவைப் பார்க்க வடநாடே ஆவலோடு காத்திருந்தது.

வடநாட்டின் முக்கிய நகரங்களில் எல்லாம் ஒரே நேரத்தில் இந்தி சந்திரலேகா ரிலீஸ் ஆகியது. படத்தைப் பார்த்தவர்கள் "பகூத் அச்சா" என்றார்கள். அனைத்து பத்திரிகைகளும் பாராட்டி விமர்சனம் எழுதின.

இந்தி சந்திரலேகா கோடி கோடியாக வசூலித்து கொடுத்தது. படம் எடுப் பதில் தமிழர்கள் திறமைசாலிகள் என்று வடநாட்டார் உணரும் படி செய்தது.

*(தொடரும்)*

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 343

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

ஒரு பெண்மணி நீண்ட தூர விமானப் பயணம் செய்துகொண்டிருந்தாள். விமானப் பணிப்பெண் அனைவருக்கும் உணவு பரிமாறிக் கொண்டு வந்து கொண்டிருந்தாள். அவள் அந்தப் பெண்மணி ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைக் கண்டு அடுத்தவரை நோக்கி நகர்ந்து சென்று விட்டாள்.

சிறிது நேரத்தில் அந்தப் பெண்மணி விழித்துக் கொண்டு அவளது உணவைக் கேட்டாள். விமானப் பணிப்பெண் அவளுக்கு உணவைக் கொண்டு வந்தாள். உணவைத் தொட்டுப் பார்த்த அந்தப் பெண்மணிக்கு சுரீர் என்று கோபம் வந்தது.

நீங்கள் என்ன விமானக் கம்பனி நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்? உணவு சூடாக இல்லை. நான் இந்த விமானத்துக்கு மூக்கு முட்டப் பணம் கொடுத்திருக்கிறேன். எனக்கு சூடான உணவு கூடக் கொடுக்க முடியாதா? விமானப் பணிப்பெண் மன்னிப்புக் கேட்டாள்.

மடம் தயவு செய்து எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள் சூடு செய்யும் அடுப்பு வேலை செய்யவில்லை. மற்ற அனைவரும் இப்படித்தான் சாப்பிட்டார்கள். அந்தப் பெண்மணி சொன்னாள் அப்படியா? அப்படி என்றால் சரி! (சிரிப்பு)

பாருங்கள் உணவு இப்பொழுதும் குளிர்ந்து தான் இருக்கிறது. ஆனால் அந்தப் பெண்மணிக்கு இப்பொழுது வருத்தமில்லை. ஏனெனில் எல்லோரும் அப்படித்தான் சாப்பிட்டனர் என்பது அவளுக்குத் தெரியும். எல்லாம் மனதின் விளையாட்டு என்று நான் சொல்வது இதைத்தான். எல்லாம் மனதின் சரி செய்து கொள்ளுதல். மனது அதன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டே இருக்கிறது. நீங்கள் அதை ஆக்கிரமிக்க அனுமதித்து விட்டதால் உங்களிடம் விளையாடுகிறது. நீங்கள் திருப்தியில் மையம் கொள்ளவில்லை. அதனால் உங்கள் மனதிற்கேற்றவாறு அலை பாய்ந்து கொண்டிருக்கிறீர்கள்.



அதனால் நான் சொன்னது போல இறுதியில் உங்களால் சிரிக்க முடியவில்லை என்றால் நீங்கள் அனைத்தையும் பற்றி இன்னும் கடுமையாகத் தான் இருக்கிறீர்கள் என்று அர்த்தம். நீங்கள் தான் மொத்த உலகத்தையும் உங்கள் தோள்களில் தாங்கிக் கொண்டு இருக்கறீர்கள் என்றும் உங்களால் தான் எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்.

பாருங்கள் ஆழ்ந்து பார்க்கும் பொழுது உண்மை என்ன வென்றால். நாம் பிரபஞ்ச இருப்புத் தன்மையைச் சேர்ந்தவர்கள். அதுவே இறுதியான எங்கும் பரவியிருக்கும் சக்தியாகும் அதுவே அனைத்தையும் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறது. நமது உள்ளார்ந்த இயல்பும் கூட பிரபஞ்ச இருப்புத் தன்மையுடனான தொடர்பை திரும்பப் பெறுவது தான்.

அதனால் நாம் எந்தப் பிரச்சினையும் இன்றி இசைந்து செல்ல முடியும். ஆனால் எங்கோ நாம் புரிந்து கொள்ளு தலை தவற விட்டு விட்டு நம் மைப் பிரபஞ்ச இருப்புத் தன்மை யில் இருந்து துண்டித்துக் கொண்டு லோகாயதமான விடயங்களின் பின்னால் அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம் என்ற எண்ணத்தில் ஓடிக் கொண்டிருக்கிறோம்.

*(தொடரும்)*

பரமஹம்ஸ சுவாமி

# கூட்டமைப்பு வஞ்சனை!

## அமைச்சர் றிசாத் குற்றச்சாட்டு



முஸ்லிம்கள் விடயத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வஞ்சனை செய்வதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் அடுத்த இரு வருடங்களுக்குள் முஸ்லிம்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும் எனவும் இல்லையேல் அமைச்சுப் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு அரசுக்கு எதிராகப் போராடுவேன் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள சிலர் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதம் பேசுவதாகக் குறிப்பிட்ட அவர்,

அடுத்த இரண்டு வருடங்களுக்குள் வடக்கில் முஸ்லிம்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும் என தான் அரசுக்கு எச்சரிக்கை விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியும், பிரதமரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு பயந்து இதனை செய்யத் தவறுவார்களேயானால் தனது அமைச்சுப் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டுதானும் தனது கட்சியும் அரசுக்கு எதிராகப் போராடுவோம்.

தனக்கு அமைச்சுப்பதவி கொடுக்க வேண்டாம் எனவும் வன்னி அபிவிருத்தியில் தன்னை இணைக்க வேண்டாம் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் கூறியுள்ளனர்.


அவ்வாறு தான் அமைச்சராக வன்னி அபிவிருத்திக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டால் முஸ்லிம்களுக்கு ஏதாவது கொடுத்துவிடுவேன் என்பதற்காகவே இவ்வாறு கூறியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-281)

## மனைவியால் கணவன் கைது

(கொழும்பு)

ஏற்கனவே திருமண மான இரண்டு பிள்ளைகளின் தந்தையான தனியார் நிறுவனம் ஒன்றின் அதிகாரி, தாம் திருமணம் செய்யவில்லை என்று தெரிவித்து 24 வயதான பெண் ஒருவரை திருமணம் முடித்துள்ளார். இந்நிலையில் அவரது முதல் மனைவியால் பிடிக்கப் பட்டார்.

கொழும்பு ஹோட்டல் ஒன்றில் கணவன் இருந்த போது, முதல்மனைவி ஹோட்டலுக்குள் புகுந்து இருவரையும் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளார். (இ-7)




# வெள்ள நீரால் ஆக்கிரமிக்கப்பட்டன வல்வெட்டித்துறை வேவில் வீதிகள்




வல்வெட்டித்துறை வேவில் வீதிகள் எங்கும் வெள்ளம் நிரம்பிக் காணப்படுகின்றது. இதில் குறிப்பாக வல்வெட்டித்துறை சேகண்டியில் இருந்து வல்வெட்டி வேவில் வீதிகள் மற்றும் நெஷன் பொஸ் வீதி வெள்ளக்கடலாக உள்ளது.

கடந்த வருடம் கொங்கிறீட் வீதிபோடும் போது வீதி மட்டம் கவனத்தில் எடுக்கப்பட்டது. வீதிகள் அமைக்கப்பட்டதே இதற்கு காரணம் என குற்றஞ்சாட்டியுள்ளனர். (இ-5-60)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 569

Search for people, places and things — Nagendram Home

சர்மா சுதன்





நதிபன் நதி




சந்திரன் சிந்து



கீர்த்தனா கருணாகரன்




நிலா




அபிரேக்கா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தேசிய வைத்தியசாலைக்கு முன் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தேசிய வைத்தியசாலைக்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அகில இலங்கை சுவசேவை சங்கம் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளது.

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக சுகாதார சேவை ஊழியர்களினது சலுகைகள் பல இரத்து செய்யப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டகாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்த வகையில் தமக்கான ஓய்வூதியம் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும், தமக்கான மேலதிக கொடுப்பனவுகளை ஊதியத்துடன் இணைத்து வழங்க வேண்டும் மற்றும் தாம் வைத்திய துறையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க வேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, சுகாதார அமைச்சர் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் புதிய சில அம்சங்களை உள்வாங்கி தமது சலுகைகளை இல்லாமல் செய்துள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த நிலையில் இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 200 இற்கும் அதிகமான அகில இலங்கை சுவசேவை சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 08.12.2015

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 141.04 | 145.27 |
| பவுண்ட் | பிரிட்டன் | 211.46 | 219.31 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 151.99 | 158.34 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 140.03 | 146.15 |
| டொலர் | கனடா | 103.69 | 108.17 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 101.39 | 106.36 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.88 | 103.90 |
| ரூபா | இந்தியா | 2.1452 | ------ |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 379.9337 |
| குவைத் | டினார் | 471.1928 |
| ஓமான் | ரியால் | 372.0539 |
| கட்டார் | ரியால் | 39.3421 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.1828 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.0020- |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சுன்னாகம் | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 140 | 120 | 120-150 | 120 | 130 |
| உருளைக்கிழங்கு | 60 | 55 | 70 | 70-80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 800 | 600 | 800 | 550-650 | 600 | 1000 |
| தக்காளி | 200 | 160 | 180 | 190-230 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40. | 20-30 | 50 | 30 | 40 | 40 |
| கோவா | 160 | 140 | 140 | 200 | 200 | 180 |
| கரட் | 140 | 120 | 180-350 | 200 | 300 | 160 |
| பூசணி | 60 | 35 | 60 | 40 | 60 | 40 |
| புடோல் | 120 | 90 | 100 | 100 | 120 | 140 |
| வாழைக்காய் | 80 | 50 | 40 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 80-120 | 120 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 90 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 300 | 220 | 300 | 250 | 400 | 250 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 130 | 150 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 250 | 200-240 | 220 | 180-240 | 240 | 250 |
| லீக்ஸ் | 180 | 140 | 170-280 | 160 | 200 | 200 |
| பீற்றூட் | 100 | — | — | — | 200 | — |
| கறிமிளகாய் | 400 | — | 400 | — | 320 | 400 |
| முருங்கைக்காய் | 450 | 300 | — | — | — | — |
| போஞ்சி | 300 | — | — | 240 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | — | 100 | 100 | — |
| கீரை - 1 பிடி | 70 | — | 50 | 50 | — | 60 |
| தேசிக்காய் | 150 | 90 | 150 | 150-180 | 150 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-35 | 50 | 30-50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | 250 | — | 250 | 160-250 | — | 300 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | — | 100 | 100 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | — | 40 | 60 | 30 | 60 |
| வல்லாரை | 15 | — | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | 50 | 50 | — | 40 |


# இலங்கைத் தமிழர் வரலாறு

## ஊர்மிளாவுடன் உமா மகேஸ்வரன் காதல் 47

அரசாங்கம் யார் என்று அடையாளம் காண்பதற்கு முன்பு விமானத் தாக்குதலுக்கு நாங்கள் தான் காரணம் - இப்படிக்கு உமா மகேஸ்வரன் தலைவர் எல்.ரி.ரி.ஈ. என்ற அதிகாரபூர்வமான கடிதம் பத்திரிகைகளில் பிரசுரமானது.

**வங்கிக் கொள்ளை**

விமானத் தகர்ப்புக்குப் பிறகு மிகப் பெரிய அளவில் வங்கிக் கொள்ளை நடத்த பிரபாகரன் திட்டமிட்டார். ஒரு மாதத்திற்கு மேலாக தீவிரமாகத்திட்டம் தீட்டினார்கள். இலங்கையில் உள்ள திருநெல்வேலி வங்கிக் கிளையில் காசாளராக பணியாற்றிய சபாரத்தினம் என்பவரைச் செல்லக்கிளி நண்பராக்கிக் கொண்டார். அவர் மூலம் வங்கியின் தகவல்களைத் தெரிந்து கொண்டார்.



வாரம் முழுவதும் சேரும் பணத்தை வெள்ளிக்கிழமை அன்று யாழ்ப்பாணம் கிளைக்குக் கொண்டு சென்று வைப்புச் செய்வது வழக்கம். இதற்காக வாரம் தோறும் பிற்பகலில் பணப் பெட்டிகள் யாழ்ப்பாணம் செல்ல தயார் நிலையில் இருக்கும். இந்தத் தகவல்களைத் திரட்டிய செல்லக்கிளி ஒரிரு முறை வங்கிக்கும் நேரடியாகச் சென்று நோட்டமிட்டு வந்தார்.

1978 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வங்கிக்குச் சென்றார்கள். பொலிஸ்காரர் கிங்ஸ்லி பரேரா வைத்திருந்த இயந்திரத் துப்பாக்கியைச் செல்லக்கிளி பறித்து பொலிஸ்காரரைச் சுட்டுக் கொன்றார்.

அதேவேகத்தில் இன்னொரு பொலிஸ்காரரையும் சுட்டுக் கொன்றார். பிரபாகரன் மற்றும் 4 பேர் வங்கிக்குள் நுழைந்தனர். ஏற்கெனவே பெட்டிக்குள் அடிக்கி வைக்கப்பட்டிருந்த பணப் பெட்டியைச் சாக்குப் பையில் போட்டுக் கொண்டு வெளியே வந்தனர். அப்போது வங்கி வாசலில் ஒரு பொலிஸ் ஜீப் வந்து நின்றது. கோப்பாய் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தனது செக்கை (காசோலையை) மாற்றுவதற்காக ஒரு பொலிஸ்காரரை அனுப்பி இருந்தார். ஜீப்பில் இருந்து கீழே இறங்கிய பொலிஸ்காரர் ஜெயரத்தினத்தையும் செல்லக்கிளி சுட்டுக்கொன்றார்.

கொள்ளையடித்த 12 இலட்சம் ரூபாயுடனும் இயந்திரத் துப்பாக்கியுடனும் பொலிஸ் ஜீப்பில் அவர்கள் தப்பிச் சென்றனர். அப்போது 12 இலட்சம் ரூபா என்பது பெருந்தொகையாகும்.

**இயக்கத்தில் கிட்டு**

விமானத் தகர்ப்புக்கு பிறகு கிட்டு என்கிற கிருஷ்ணகுமார், மாத்தையா என்கிற மகேந்திர



ராஜா, ரகு மற்றும் பலர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தனர்.

கிட்டு வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர். பிரபாகரனின் உறவினர் மாத்தையா பருத்தித்துறைக்காரர். ரகு பொலிஸ் துறையில் சேர முயன்றார். தமிழர் என்ற காரணத்திற்காக அனுமதி மறுக்கப்பட்டதால், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்தார். அவருக்கும் வல்வெட்டித்துறைதான் சொந்த ஊர்.

மேலும் வங்கிக் கொள்ளையில் உதவிய காசாளர் சபாரத்தினமும் விடுதலைப்புலிகள் அமைப்பில் சேர்ந்தார். பின்னர் இவரைத் தமிழேந்தி என்று அழைக்கத் தொடங்கினார்கள்.

**பாலஸ்தீன விடுதலை இயக்கம்**

புதிதாகச் சேர்ந்தவர்களைப் பூந்தோட்டம் முகாமுக்கு அழைத்துச் சென்று ஆயுதப் பயிற்சி அளிப்பதில் மும்முரமாக ஈடுபட்டார் பிரபாகரன்.

ஏற்கெனவே பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த அருளரும் சங்கர் ராஜியும் பயிற்சி பெற்று இருந்தனர். அவர்கள் இருவரும் அடிக்கடி பூந்தோட்டம் முகாமுக்கு வந்து சென்றனர். அவர்களின் வற்புறுத்தலின் பேரில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் பயிற்சி பெற 2 பேரை அனுப்ப விடுதலை புலிகள் முடிவு செய்தனர்.

இதன்படி உமா மகேஸ்வரனையும் விஜயேந்திராவையும் ஆளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவில் பிரபாகரன் அனுப்பி வைத்தார். 3 மாதங்களுக்கு பிறகு திரும்பி வந்த அவர்கள் பயிற்சியில் தங்களுக்கு திருப்தி ஏற்படவில்லை என்று பிரபாகரனிடம் முறையிட்டனர். ஆயுதங்களைக் கையாளவிடவில்லை என்றும் பெரும்பாலான நேரம் முகாமிலேயே இருக்க நேரிட்டதாக புகார் கூறினார்கள்.


ஈரோஸ் இயக்கத்தினர் தன்னை ஏமாற்றி விட்டதாக பிரபாகரன் கருதினார். இதனால் கொடுத்த பணத்தைத் திருப்பித் தருமாறு வற்புறுத்தினார். அந்தப் பணத்தை அவர்கள் ஏற்கெனவே செலவழித்து விட்டதால் பூந்தோட்டத்திற்கு வருவதையே நிறுத்தி விட்டனர்.



(தொடரும்)

# வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்துங்கள்

வாசபபு ஒரு மனதனைப பூரணமாக்குகின்றது என்றார் பிரான்சிஸ் பேகன் எனும் அறிஞர். இப்பொன்மொழியானது வெறும் வார்த்தையோடும் வரிகளோடும் இருந்துவிடுமோ? எனும் அச்சமும் ஐயமும் நம்மிடையே எழுந்துள்ளது. ஏனெனில் வாசிப்பு என்றால் ஓர் அலுத்துக்கொள்ளும் விடயமாகவே அனைவரும் எதிர்கொள்கின்றதான நிலைமையே இன்றுள்ளது.



பெருகிவிட்ட தகவல் தொடர்பு சாதனங்களால் வாசிப்பு அதிலும்நூல்வாசிப்புஅருகிவருகின்றமையை அறிவுப்புலன் வாய்ந்தோர் ஏற்றுக்கொண்டுள்ளனர். நூல் வாசிப்பினை விட இன்றைய இணைய வாசிப்பு அதிகரித்துள்ளது. அதாவது தனது தேவையை மட்டும் தேடுவதும் பெறுவது மான வாசிப்பு நிலையே இன்று காணப்படுகின்றமை எவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றாகும்.

ஆனால் நூல்களில் விடயங்களைத் தேடும் வாசகன் ஒவ்வொரு பக்கங்களைப் புரட்டித் தேடும் போது தேவைக்கு மேலதிகமாக அவனது தேடல் விருத்தி செய்யப்படுகின்றது. பல விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. நூல் வாசிப்பின் தேவை மற்றும் திருப்தி என்பதை வாசகனால் பெற முடிகின்றது.

இதனால்தான் வாசிப்பின் பெறுமதியை உணரும் பொருட்டு தேசிய நூலக ஆவண வாக்கல் சபையானது ஐப்பசி மாதம் முழுவதும் வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தி பாடசாலைகள், பொதுநூலகங்கள், ஏனைய நிறுவனங்கள் மூலமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. எத்தனையோ சர்வதேச தினங்களை ஒரேயொரு நாள் மட்டும் கொண்டாடிக்கொண்டு இந்த வாசிப்பிற்கு மட்டும் ஒரு மாதம் அதாவது 31 நாட்கள் ஒதுக்கப்பட்டிருப்பதிலிருந்து வாசிப்பின் தேவையும் பெறுமதியும் வாழ்நாள் முழுவதும் வாசித்துக் கொண்டேயிருக்க வேண்டியதற்கான பயிற்சியும் முயற்சியும் என்று தான் சொல்ல வேண்டும்.

வாசிக்கக் கற்றுக்கொள்கின்றவன்- வாழவும் கற்றுக் கொள்கின்றான். நூல்களே சிறந்த நண்பர்கள். நூல்களை வாசித்து எத்தனையோ அறிஞர் பெருமக்கள் தங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொண்ட சரித்திரங்களும் இன்று வரை பேசப்படும் விடயமாகவேயுள்ளது. அரிச்சந்திரனின் வரலாற்றை வாசித்ததனால் வாழ்நாள் பூராகவும் சத்தியம் தவறாமல் வாழ்ந்ததாக மகாத்மாகாந்தி குறிப்பிடுகின்றார். மார்ட்டின் லூதரின் சுய சரிதை நூலை வாசித்தே போராளியாக மாறினேன் என்று நெல்சன் மண்டேலா கூறினார். மாக்சீம் கார்கியின் தாய் என்ற நாவல் என்னைச் சிறுவனாய் இருக்கும்போதே சமூகவியல் போராளியாக்கியது என பிடல் காஸ்ட்ரோ குறிப்பிடுகின்றார். வாசிப்பு வாழ்க்கையின் திசையையும் எண்ணங்களையும் மாற்றக் கூடியதென்பது பல அறிஞர்கள் பெரியார்களின் வாழ்க்கை எமக்கு ஒரு பாடமாக அமைகின்றது.

வாசிப்பினால் ஒவ்வொருவரதும் அறிவு கூர்மையாக்கப்படுகின்றது மட்டுமன்றி கற்பனை வளமும் அதிகரிக்கப்படுகின்றது. ஆக்கத்திறன் மேம்படுகின்றது. உதாரணமாக மகாபாரதக் கதையினை இறுவெட்டுக்களில் பார்க்க முடியும். அவை காட்சிகளாக காட்டப்படும்போது காட்சிகள் மட்டுமே எம் மனக்கண்ணில் பதியும். ஆனால் அதே கதையினை நூலில் வாசிக்கும் போது கதையின் களம் எம்மால் கற்பனை செய்யக்கூடியதாக இருக்கும். நேரடி காட்சிக்கும் வாசித்தறியும் காட்சிக்கும் உள்ள வேறுபாட்டினை உணர முடியும்.

நூல்களால் கற்பனைத் திறன் அதிகரிப்பதோடு படைப்பாக்கத்திறனும் விருத்தியடைகின்றது. பற்பல நூல்களைத் தேடித்தேடி வாசிக்கும் ஒருவனால் சுயமாகவே தனது எழுத்தாற்றலை வளர்க்கமுடியும். நூறு நூல்களை வாசிக்கும் ஒருவனால் நிச்சயம் ஒரு நூலை எழுதவும் முடியும். ஒரு நூலை எழுதுபவன் நாளை பல நூல்களை எழுதும் திறன் கொண்டவனாக, சிறந்த எழுத்தாற்றல், பேச்சாற்றல் கொண்டவனாக மிளிர்வான். எனவே வாசிப்பானதுவாழ்க்கையையே மாற்றக்கூடியது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

நவீன கல்விச் சிந்தனைகளில் பிரதான விடயம் யாதெனில் கல்வி ஒரு குறிப்பிட்ட வயதுடனோ அல்லது குறிப்பிட்ட நிறுவனத்துடனோ முடிந்து விடுவதில்லை என்பதே. அறிவு வெள்ளம் பல்கிப் பெருகும் இந்நாட்களில் புதிய அறிவுத் தளங்களுடன் எம்மைத் தொடர்பு கொள்ள கல்வி அறிவைப் பெறும் முயற்சி வாழ்நாள்முழுவதும் நீடிக்க வேண்டும்என்ற குறிக்கோளை அடையச் சிறந்த வழி வாசிப்பாகும்.

**மனிதனின் கண்டுபிடிப்புக்களில் மிகச் சிறந்த கண்டு** பிடிப்பு நூல்களே என்றார் விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீன். இப்புத்தகங்களுடனான உறவானது அனைவர்க்கும் சிறுவயது பாடசாலைப் பருவத்தோடு ஆரம்பமாகின்றது. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் எனும் பழமொழிக்கேற்ப சிறுவயது வாசிப்புப் பழக்கம் நிச்சயம் நாளை இறுதிக் காலம் வரையிலும் கூட நிலைத்திருக்கும் என்பதே உண்மையாகும். பாடை ஏறினும் ஏடது கைவிடேல் என்றார் ஔவையார்.

சிறுவயதில் சுய வாசிப்பில் ஈடுபடும் பிள்ளை எதிர்காலத்தில் சிறந்த மேதையாக விளங்கும் என்பதே நிதர்சனம். வாசிப்பு இல்லாத மனிதனின் வாழ்க்கை கிணற்றுத்தவளை போன்றது. வாசிக்காதவர்கள் வாழ்க்கையின் பாதி சுகத்தை இழந்து விடுகிறார்கள். ஓர் நல்ல விடயத்தை வாசிப்பதன்மூலம் நாம் பெறும் அன்பும் ஆதரவும் அனுபவமும் மிக மிக அவசியமானதாகும்.

வாசிப்பு எங்கிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும்? ஆம். அது வீட்டிலிருந்தே ஆரம்பிக்கப்படவேண்டும். நாம் வீட்டிலும் ஓர் நூலகத்தை அமைக்கவேண்டும். வீட்டிலே சுவாமியறை, சமையலறை, படுக்கையறை, சாப்பாட்டறை, வரவேற்பறை எனப் பார்த்துப் பார்த்து பல அறைகளைக் கட்டுகின்றோம். ஆனால் நூலகத்திற்கென அறை அமைக்கின்றோமா? சிந்தித்துப் பாருங்கள். வீட்டை அலங்கரிக்க புத்தகங்களை விட அழகான பொருட்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றார் ஹென்றி வார்ட் பீச்சர் எனும் அறிஞர். எனவே நூலகத்தின் அவசியமும் நூல்களின் அருமையும் வாசிப்பின் மேன்மையும் வீட்டிலிருந்தே உருவாக்கவும் உணரவும் செய்யப்படல் வேண்டும்.

பிள்ளைகளின்பிறந்தநாள் பரிசாக நூல்களை வழங்கி அவர்களின் வாசிப்பு விருப்பினைத் தூண்டலாம். பெற்றோர்கள் திருமண நினைவுப் பரிசாக நூல்களை வாங்கலாம், வழங்கலாம். தொலைக்காட்சியில் தொடர் நாடகங்களைப் பார்ப்பதை பெற்றோர் தவிர்த்து பிள்ளைகளுக்கு முன்னமாதிரியாக நடந்து கொள்ள வேண்டும்.

தொலைக்காட்சி, கணனி என்பவற்றால் மாணவர்களுக்குப் பயனும் உண்டு. பாதிப்பும் உண்டு. மாணவர்களின் ஓய்வு நேரத்தை ஆக்கிரமிக்கும் சாதனங்களாக இவை உள்ளன. அறிவியல் வளர்ச்சிக்காக மட்டும் மாணவர்கள் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

வயிற்றுப்பசி ஏற்படுவது போல மாணவர்களிடம் அறிவுப்பசியும் ஏற்படல் வேண்டும். அறிவுப் பசி ஏற்பட்டுவிட்டால் பல நூல்களைத் தேடிப் படிக்கும் ஆர்வம் தோன்றிவிடும். அறிவுப் பசி மிகுந்தவர்கள் வாழ்நாள் முழுவதும் வாசித்துக் கொண்டேயிருப்பார்கள். வாசிப்பிற்கு வரம்புமில்லை, எல்லையுமில்லை.

அறிவுப்பசிக்குத் தீனி போட பாடசாலை நூலகங்கள், பொது நூலகங்கள் பல்வேறுபட்ட நூல்களைத் தம்மகத்தே கொண்டிருக்கவேண்டும். வாசகர்கள் அமைதியாக இருந்து வாசிக்கக்கூடிய சூழ்நிலைகள் அமைந்திருக்க வேண்டும். நூலகங்களில் இரவல் வழங்கும் சேவையூடாக நூல்களை இரவலாக எடுத்துச் சென்று வீடுகளில் வாசிக்கும் திறனைப் பெருக்கிக்கொள்ளும் வாய்ப்புகள் வசதிகள் நம் அருகில் இருந்தும் இந் நூலகங்கள் பற்றி அறியாமலும் தெரியாமலும் அநேகர் தம் வாழ்நாளை வீணடிக்கிறார்கள்.

எனவே ஒவ்வொருவரும் உங்களுக்கு அருகில் உள்ள பொது நூலகங்களையும் பாடசாலை நூலகங்களையும் பூரணமாகப் பயன்படுத்தி உங்களிடம் உள்ள அறிவினை ஒளிவிட்டுப் பிரகாசிக்கச் செய்ய வேண்டுகின்றோம்.

திருமதி. பங்கஜமலர் பஞ்சலிங்கம்
பொதுநூலகம், கோண்டாவில்

## செய்தித் துளிகள்

### சில ஊடகவியலாளர்கள் இலஞ்சம் பெற்றுள்ளனர்

"அவன் காா்ட்" நிறுவனத்திடமிருந்து சில ஊடகவியலாளர்கள் இலஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளதாக ஜே.வி.பி.யின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார். தமது தொழில்ஒழுக்க விதிகளை மீறி இந்த ஊடகவியலாளர்கள் பணம் பெற்றுக் கொண்டு, "அவன் கார்ட்" நிறுவனத்திற்காக குரல் கொடுத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இணைய மற்றும் அச்சு ஊடகங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பணம் பெற்றுக் கொண்டுள்ளதாகவும், சில பத்திரிகைகளும் இணைய ஊடகங்களும் "அவன்கார்ட்" நிறுவனத்திற்கு சார்பாக தகவல்களை வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

### இன்று முதல் கறுப்புக்கொடி

வாகனங்களின் புகைப் பரிசோதனைச் சான்றிதழ் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று முதல் பயணிகள் பேருந்துகளில் கறுப்பு கொடி கட்டி எதிர்ப்பு நடவடிக்கைளை முன்னெடுக்கவுள்ளனர்.

குறித்த எதிர்ப்பு நடவடிக்கைகளின் பின்னர் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்துகளுக்கு குறித்த சான்றிதழ் கட்டணத்திற்காக நிவாரணம் வழங்கப்படவில்லையெனில், எதிர்வரும் 15ஆம் திகதி வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கப் போவதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (இ-7)

### பொலிஸாரின் சம்பளம் 40 வீதமாக அதிகரிப்பு!

பொலிஸ் சேவையிலுள்ள சாதாரண தர ஊழியர் முதல பொலிஸ்மா அதிபர் வரையிலுள்ள சகலரினதும் அடிப்படைச் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த அதிகரிப்பு இரு கட்டங்களில் இடம்பெறவுள்ளதாகவும், அடிப்படை சம்பளத்தில் 40 வீதம் இவ்வாறு அதிகரிக்கப்படவுள்ளதாகவும் சட்டம், பொது அமைதி மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகர ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

முதலாவது கட்டத்தில் 2016 ஜனவரி முதல் 20 வதமும், இரண்டாம் கட்டத்தில் 2017 ஜனவரி முதல் 20 வீதமும் இந்த அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### அதிவேக வீதியில் விபத்து பெண் அரச அதிகாரி பலி!

தெற்கு அதிவேக வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதோடு மேலும் ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

விவசாய காப்புறுதி சபை வாகனம் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதோடு, இதில் பயணித்த 28 வயதான அதிகாரி ஒருவரே பலியாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

நேற்றுக் காலை 7 மணியளவில் எல்பிடிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 73 ஆம் கட்டைப் பகுதியில் கொட்டாவையில் இருந்து காலி நோக்கி பயணித்த பேருந்து ஒன்றே பாதுகாப்பு வேலியில் மோதி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

மேலும் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இதன்போது உயிரிழந்த பெண் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை விபத்துடன் தொடர்புடைய வாகன சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

### கைவிடப்பட்ட நிலையில் ஒன்றரை வயது சிசு மீட்பு

ஒன்றரை வயதான ஆண் குழந்தையொன்று கோட்டை பகுதியின் வீதியோரத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம்மாலை அந்தக் குழந்தை சிறுவர் இல்லமொன்றுக்கு அருகில் கைவிடப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர கூறினார.

மிரிஹான பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்ட குழந்தை பொரளை சீமாட்டி சிறுவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# தேசியம் பேசும் தேசிய ஊடகங்களின் முகமூடியைக் கிழித்த ராஜ் சார்தேசாய்



தொடர்ச்சி...

தமிழக திருநெல்வேலி பொது மகனின் வார்த்தைகளின் உள்ளார்ந்த அர்த்தத்தை 2009 முள்ளிவாய்க்கால் போர் இலங்கைத் தமிழ் மக்களுக்கு நன்றாகவே உணர்த்தியது.

டில்லி அரசாங்கம் போலவே இந்திய தேசிய ஊடகங்களும் வன்னி அவலத்தைக் கண்டும் காணாதவையாக இருந்ததை வரலாறு பதிவு செய்துள்ளது.

அதே ஆண்டு கார்த்மண்டுவில் நடைபெற்ற ஊடக சுதந்திர மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்றபோது டில்லியில் தரித்து நிற்க வேண்டி இருந்தது.



அவ்வேளையில் தமிழகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்களைச் சந்திக்கக் கிடைத்தது. டில்லி மத்திய அரசாங்கம் பற்றிக் குறிப்படுகையில், டில்லி இலங்கை அரசாங்கத்தின் பேச்சாளர் போன்று செயற்படுகின்றது என்று பதிவு செய்தனர்.

டில்லியில் நடைபெற்ற சார்க் நாடுகளின் பத்திரிகை ஆசிரியர்களின் மாநாட்டில் கூட பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், போன்ற நாடுகளைச் சேர்ந்த பத்திரிகை ஆசிரியர்கள் டில்லி மத்திய அரசாங்கத்தினதும் இந்திய தேசிய ஊடகங்களினதும் போக்கினை கடும் விமர்சனத்திற்குள்ளாக்கினர்.

நேபாளம் கார்த்மண்டு நகரம் பூகம்பத்தால் தகர்ந்து கிடந்தபோது இந்திய தேசிய ஊடகங்கள் நடந்து கொண்ட விதம் குறித்து நேபாளச் சமூகத்தின் சமூக வலைத்தளங்களும் பத்திரிகைகளும் பெரும் கண்டனக் குரலை எழுப்பியதையும் இங்கு குறப்பிடுவது பொருந் தும்.

இதன் ஒரு அம்சமாகவே பேரிடருக்குள் மூழ்கிக்கிடக்கின்ற சென்னை குறித்து இந்திய தேசிய ஊடகங்கள் காட்டுகின்ற அலட்சியப் போக்காக அமைந்துள்ளது.

டில்லி பாராளுமன்றத்திலும் வெளியிலும் நடைபெறும் உப்புச்சப்பற்ற சகிக்க முடியாக சம்பவங்களை எல்லாம் பெரிதுபடுத்தும் இந்திய தேசிய ஊடகங்களுக்கு செனனையின் அவலத்தைக் கண்டு கொள்ள முடியாதிருப்பதை சுயதனநறி சுட்டிக் காட்டியுள்ளார்.

உண்மையில் இத்தகைய போக்கானது வட இந்திய மக்களை



பொய்மை மாயைக்குள் தள்ளி தென்னிந்திய மக்களில் இருந்து பிரித்து முரண்பாடுகளையும் பிளவையும் ஆழப்படுத்துவதற்கும் கூர்மையடைவதற்குமே காரணமாக அமைந்துவிடும்.

இந்திய தேசிய ஊடகங்களின் இத்தகைய போக்கு காரணமாக வடஇந்திய மாநில அரசுகளோ மக்களோ சென்னை குறித்த அவலத்தில் இருந்து தூரவிலகி நிற்கின்றனர்.

இதே நிலைமையையே இலங்கை அரசாங்கமும் தேசிய ஊடகங்களும் தமிழ் மக்கள் குறித்து கடைப்பிடித்ததன் விளைவு இன முரண்பாடு இலங்கை மண்ணில் மிக ஆழமாக வேரூன்றி விட்டது.

இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட துன்ப துயரங்கள் தென்னிலங்கை மக்களை சென்றடையாத வண்ணம் சிங்களத் தலைமைகளும் தேசிய ஊடகங்களும் மிக வெற்றிகரமாக தடுத்தும், மறைத்தும் உள்ளன.



மன்னாரில் ஒரு குடும்பம் கணவன், மனைவி, 13 வயது சிறுமி ஆகியோர் கடும் சித்திரவதைக்குப் பின் கட்டித்தொங்க விடப்பட்டதை எனது சிங்கள நண்பர் ஒருவருக்குக் காட்டியபோது இது எங்கு நடந்தது? அநியாயமாக இருக்கின்றதே என்று குறிப்பிட்டார்.

மன்னார் சம்பவம் நடைபெற்று



ஆறு மாதங்களுக்குப் பிறகு எனது நண்பரின் வாயில் இருந்து இந்த வார்த்தை வருமாயின் எந்தளவுக்கு சிங்கள மக்கள் தமிழ் மக்களுக்கு நடைபெற்ற அநியாயங்கள், அட்டூழியங்களைத் தெரியாதிருந்தனர் என்பதற்கு நல்ல உதாரணமாகும்.

இந்தச் சம்பவம் மன்னாரில் இடம்பெற்றதென நான் அவருக்குக் கூறியபோது ஆச்சரியமடைந்த நணபர் சிங்கள ஆங்கில பத்திரிகைகளில் இந்தச் சம்பவம் வெளிவரவில்லையே என வேதனைப் பட்டார்.

மொத்தத்தில் தேசிய ஊடகங்களுக்கு நாடு, நாட்டு மக்கள், சுமூகமான வெளிநாட்டு உறவுகள் வெளிநாட்டு மக்களுடனான புரிந்துணர்வு என்பனவோ குறிப்பாக உள்நாட்டில் மக்களிடையேயான பரஸ்பர புரிந்துணர்வு ஒற்றுமை என்பன முக்கியமாகத் தெரிவதில்லை போலும்.

இதனை எழுதப்படாத ஒரு சட்டமாக அல்லது மரபாக பொதுவாகவே நாடுகளின் தேசிய ஊடகங்கள் கொள்கையாகக் கொண்டிருப்பதில் மாற்றம் காண வேண்டும் இது மனதளவிலான அறிவுபூர்வமான, மனிதாபிமானமான அணுகுமுறைகளுடன் இணைந்ததாக இருக்க வேண்டும்.

இதனையே புகழ்பெற்ற ஊடகவியலாளரான சுயதனநறி தேசிய ஊடகங்களிடம் கோரிக கையாக முன்வைக்கிறார். இது இந்திய தேசிய ஊடகங்களுக்கு மாத்திரமல்ல இலங்கையில் வெளி வருகின்ற தேசிய ஊடகங்களுக்கும் பொருந்தும்.

தேசிய ஊடகங்கள் மாத்திரமல்ல அனைத்து ஊடகங்களும் அரசாங்கங்களின் அரசியல்வாதிகளின நிகழ்ச்சி நிரல்களுக்குத்துணை போவதாக அன்றி குரல் அற்ற மக்களின் குரலாக ஒலிக்க முன்வர வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்கள் இலங்கைத் தேசியத்துக்குள் தாங்கள் இல்லையா என்று தொடர்ச்சியாக தென்னிலங்கையை நோக்கி வினா எழுப்பியதை இன்று தமிழகம் டில்லி நோக்கியும் வடஇந்திய ஊடகங்களை நோக்கியும் இந்தியத் தேசியத்துக்குள் சென்னை இல்லையா என்ற கேள்வியை எழுப்பி நிற்கின்றனர்.

இது இந்திய மத்திய ஆட்சியாளர்களுக்கும் இந்திய தேசிய ஊடகங்களுக்கும் விடுக்கப்படும் எச்சரிக்கை செய்தியாக அமைந்துள்ளது.

தேசிய ஊடகங்களின் போக்கில் மாற்றத்தைக் காண விளையும் ராஜ்தீப் சாா்தேசாய்க்கு ஒட்டுமொத்த ஊடகத்துறையினரின் சார்பில் தலை வணங்குகின்றேன்.

வி.தேவராஜ்



உயர்ந்த எண்ணங்களுடையோர் ஒரு நாளும் தனித்தவராகார்.
- சர் ஃபிலிப் சிட்னி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# சம்பந்தருக்கு நல்ல துணை வடக்கின் முதல்வர் மட்டுமே!

மூத்த தலைவர் இரா.சம்பந்தர் ஒரு சில தினங்களுக்கு முன் மட்டக்களப்பில் ஆற்றிய உரை தமிழ் மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கின் முதலமைச்சர் தொடர்பில் அவர் கூறிய கருத்துக்கள் அடிப்படை நியாயமற்றவை. உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இரா.சம்பந்தரை விசுவாசமாக ஆதரிக்கின்ற ஒருவர் என்றால் அவர் வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனாக மட்டுமே இருக்க முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இரா.சம்பந்தர் இருக்கவேண்டும் என்பதிலும் வடக்கின் முதல்வர் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார். சுருங்கக்கூறின், இரா.சம்பந்தரின் பக்கம் நின்று அவருக்காகக் கதைக்கின்ற - அவரை உசார்ப்படுத்துகின்ற அரசியல்வாதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறினால் - சம்பந்தரை பகைத்தால், தங்களின் அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும் என்பதாலேயே சம்பந்தருடன் சேர்ந்து நிற்கின்றனர்.

ஆனால், வடக்கின் முதல்வர் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் அரசியலில் எந்த எதிர்பார்ப்பும் இல்லாதவர். எந்தக் கட்டத்திலும் சம்பந்தருக்கு தன்னால் பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் மிகவும் தெளிவாக இருப்பவர்.

வடக்கின் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் நினைத்தால் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தமிழ் அரசியல் தலைமையை ஒருகணப் பொழுதில் பெற்றுக் கொள்ளமுடியும்.

புதிய அரசியல் கட்சியை உருவாக்கி, வாருங்கள் நான் தலைமை தாங்குகிறேன் என்று விக்னேஸ்வரன் அவர்கள் ஒரு வார்த்தை கூறினால், அத்தனை தமிழ் அரசியல் தலைமைகளும் முதல்வர் விக்னேஸ்வரனுக்குப் பின்னால் அணி வகுத்துக் கொள்ளும்.

இன்று தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய ஒரே தலைவராக இருப்பவர் வடக்கின் முதல்வர் என்பது மறுக்கமுடியாத உண்மை.

அவரிடம் இருக்கின்ற வெளிப்படைத்தன்மை, நேர்மை, தமிழினத்தின் உரிமைக்காகக் குரல் கொடுக்கவேண்டும் என்ற உறுதிப்பாடு, அவர் ஆற்றுகின்ற உரைகளின் ஆழமான கருத்துக்கள் என்பன காரணமாக வடக்கின் முதல்வரை தமிழ் மக்கள் தங்கள் நம்பிக்கைக்குரிய தலைவராக ஏற்றுள்ளனர்.

இது தவிர புதிய கட்சி ஒன்றை அமைத்து தன்னை தமிழ் மக்களின் தலைவனாக்கக்கூடிய மக்கள் செல்வாக்கிருந்தும் முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள் ஒருபோதும் அதைச்செய்யப் போவதில்லை.

அப்பேற்பட்ட ஒரு முதல்வரை இரா.சம்பந்தர் தனக்குத் துணையாக்கிக் கொள்வதே புத்திசாலித்தனம். இருந்தும் அவர் உண்மை நிலைமைகளை மறந்து பேசுகின்றார். இதுதவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் உரை கள் அவரின் கருத்துக்கள் தொடர்பில் தமிழ் மக்கள் அவதானம் காட்டுவது அதிகம்.

இருந்தும் தனது அரசியல் அனுபவம், நிதானம் என்பவற்றையெல்லாம் ஒரு கணப்பொழுதில் இழந்து சம்பந்தர் ஆற்றிய உரை அதிர்ச்சிக்குரியதே.

எதுவாயினும் தமிழ் மக்களின் உரிமைகள், நலன்கள் தொடர்பில் நூறுவீத கவனம் செலுத்த வேண்டிய காலகட்டம் இது.

இந்நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமக்குள் முரண்பட்டுக் கொள்வதைத் தவிர்த்து தமிழ் மக்களுக்காக தங்களை அர்ப்பணிக்க வேண்டும். இதுவே இன்றைய அவசர தேவையாகும்.

## காணாமற்போனவர்கள் குறித்து

# நம்பகமான பொறிமுறை அமைப்பது மிகஅவசியம்

## உறவினர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு காணாமற்போனோர் தொடர்பாக நம்பகத்தன்மை உடையதாகவும் நீதியை பெற்றுத்தர கூடியதுமான ஒரு புதிய பொறிமுறை தேவையென வடகிழக்கில் காணாமற்போனோரின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும்ஜனாதிபதிஆணைக்குழுவின் விசாரணைகள் எதிர்வரும் 11 ஆம்திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

குறித்த ஆணைக்குழுவின் விசாரணைகளை புறக்கணிக்க வேண்டுமென கோரி வடகிழக்கில் காணாமற்போனோரின்உறவினர்கள்இணைந்து நேற்றையதினம் கலந்துரையாடலை மேற்கொண்டு அறிக்கை ஒன்றினை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து வெளியிட்டனர்.

அந்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தவர்களான நாங்கள் எமது உறவுகளை தேடியும் நீதி கேட்டும் நீண்ட நாட்களாக குரல் கொடுத்து வருகின்றோம். இலங்கை அரசாங்கம் இது பற்றி விசாரணை செய்ய பல ஆணைக் குழுக்களை உருவாக்கி இருந்தது. இருந்தும் எமது தேடுதலுக்கு இது வரை எந்தப்பதிலும் இல்லை.

2013 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறிவதற்கான ஒரு ஆணைக்குழுவை மக்ஸ்வெல் பரணகம தலைமையில் உருவாக்கி இருந்தார்.

வேறுவழி இன்றியும் எங்கள் உறவுகளை கண்டு பிடிக்க வேண்டும் என்ற ஆதங்கத்திலும் இக்குழுவின் முன் நாங்கள் சாட்சியமளித்தோம் 2015 ஆம் ஆண்டு முடிவடைகின்ற நிலையில் இந்த ஆணைக் குழு உண்மையை தேடி நீதி வழங்க ஒரு அங்குலமாவது முன்னகர்ந்திருப்பதாக தெரியவில்லை.

பாதிக்கப்பட்டவர்கள், சிவில் அமைப்புக்கள், நலன் விரும்பிகள் எனப் பல தரப் பினரும் இந்த ஆணைக் குழு சீரமைக்கப்பட வேண்டும் என்று பல பரிந்துரைகள் வழங்கியிருந்தும் இலங்கை அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

தை மாதம் 2015 (இந்த வருடம்) நாம் அனைவரும் ஒரு அரச மாற்றத்திற்காக வாக்களித்தோம்.

இதன் பின்னணியில் நல்லாட்சிக்கான ஒரு அரசு உருவாகும் என எதிர்பார்த்தோம்.

இந்த அரசு எங்களுடைய தேடல்கள், வேதனைகள், ஆதங்கங்களை புரிந்து கொள்ளும் என எதிர் பார்த்தோம்.

ஆனால் இந்த அரசும் எங்கள் குரலுக்கு செவி மடுக்க வில்லை. நாங்கள் கவனயீர்ப்பு பேரணிகள் செய்தோம்.

ஆணைக்கு முவிற்கு எங்கள் பரிந்துரைகளை வழங்கினோம். மாற்றங்களைக் கோரினோம். ஆனால் எதுவும் நடைமுறைக்கு வரவில்லை.

அர்த்தமற்றதும் பயனற்றதுமான இந்த ஆணைக் குழுவின் செயலமர்வுகளை பகிஷ்கரிப்பதை தவிர வேறு வழியில்லை. இதனூடாக ஐ.நாவும் சர்வதேச சமூகமும் எங்களுடைய வேண்டுகோளை ஏற்று இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தக் கோருகின்றோம்.

அர்த்தமுள்ள நம்பிக்கையான புதிய பொறிமுறை ஒன்றை உருவாக்கி தாருங்கள். அதில் நாங்கள் பங்களிக்க ஆயத்தமாக இருக்கிறோம் என்பதே எமது வேண்டுகோளாகும்.

எனவே இந்த ஆணைக் குழுவின் செயலமர்வுகளை புறக்கணித்து பகிஷ்கரிப்பதாக பகிரங்கமாக அறிவிக்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வாலிப கிறிஸ்தவ சங்கம் நடத்தும் இரத்ததான நிகழ்வு இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் கண்டி வீதியில் அமைந்துள்ள மேற்படி வாலிப கிறிஸ்தவ சங்கத்தில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது. (இ-5)

## இளைஞர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு "சுதந்திர பயணம் - 2015" எனும் தொனிப்பொருளில் இளைஞர் மாநாடு ஒன்றினை அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பானது (AFRIEL) நாளை காலை 9 மணிக்கு யாழ்.முற்ற வெளி பகுதியில் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தநிகழ்வு இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வை நோக்கி சிந்திக்கும் வகையில் சிவில் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கிய ஓர் அரசியல் தீர்வுமாதிரி வரைபு ஒன்றினை வெளியிட்டு நிரந்தரமான அரசியல் தீர்வினை வலியுறுத்தி இளைஞர்களால் முன்னெடுக்கப்படும். ஒருநிகழ்வாக இது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

தேசிய அளவிலான சிவில் சமூகத்தின் பங்குபற்றுதலுடன் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அனைவரும் மானுடப் பண்புள்ள சமூகமொன்றை கட்டியெழுப்ப வேண்டும் எனும் சிந்தனையுடன் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)

# கொழும்பு - சென்னை விமான சேவைகள் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

சென்னைக்கும், கொழும்புக்கும் இடையிலான விமான சேவைகள் ஒரு வாரத்துக்குப் பின்னர் நேற்று செவ்வாயக் கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

சென்னையில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளத்தினால் சென்னை விமான நிலையம் கடந்த 2ஆம் திகதி மூடப்பட்டிருந்த நிலையில், அது கடந்த 6 ஆம் திகதி திறக்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் மட்டுமே இடம்பெற்று வந்தன.

இந்நிலையில் சென்னைக்கும், கொழும்புக்கும் இடையிலான விமான சேவைகளை சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் நேற்று மீண்டும் ஆரம்பித்துள்ளது.

கொழும்பில் இருந்து நேற்று பிற்பகல் 1.45 மணிக்கு சென்னைக்குச் சென்ற யுஎல் - 127 விமானம், அங்கிருந்து மாலை 4.05 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

சென்னைக்கும், கொழும்புக்கும் இடையே சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் நாளாந்தம் நான்கு வமான சேவைகளை நடத்தி வந்த நிலையில், நேற்று ஒரு சேவை மட்டுமே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## டாக்ஸி சாரதியின் சடலமே மீட்பு

(திருகோணமலை)

அண்மையில் நிலாவெளிக் கடற்பரப்பில் மிதந்த சடலமானது, சென்னையைச்சேர்நத டாக்ஸி சாரதி ஒருவரது என அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்திய ஊடகமொன்று இது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

என்.பூமணிதுரை என்ற நபரின் சடலமே இலங்கையில் மீட்கப்பட்டுள்ளது. இந்த சடலம் மீட்கப்பட்ட விடயங்கள் சென்னைக்கு அறிவிக்கப்பட்டள்ளதாகவும், சடலம் திருகோணமலை வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை மீனவர்கள் குறித்த சடலம் மிதப்பதனை அவதானித்து இலங்கை அதிகாரிகளுக்கு அறிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

**பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்**
**யாழ்.சமூக செயற்பாட்டு மையம்**
**(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)**

குடும்பத்தில் பாரபட்சம். துவண்டு போகும் பெண் பிள்ளைகள் சமூக வன்முறைகளில் சிக்கித் தவிக்கின்றனர். சமத்துவம் பேணுவோம் குடும்பம் தன்னில்

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் உண்டு



✦ பலவருடங்களாக பூட்டிக் கிடக்கும அறை இருண்டு கிடக்கும். ஆனால், அந்த அறைக்குள் விளக்கினைக் கொண்டு வந்த உடனேயே இருள் மறைந்து ஒளி பரவும். அதுபோல, இறைவனின் கருணைப்பார்வை பட்டவுடனேயே பல பிறவிகளில் செய்த பாவங்களும் உடனேயே நீங்கிவிடும்.


✦ இறைவனின் அருள் என்னும் காற்று இடையறாது வீசிக் கொண்டுதான் இருக்கிறது. வாழ்க்கை என்னும் கடலில் முன்னேற விரும்பினால் உனது மனமாகிய படகின் பாயை விரித்தால் கடலைக் கடந்து கரை சேரலாம்.

✦ இறைவனின் திருப்புகழைப் பாடும் போது, கைகளை அசைத்துக் கொண்டும், இசைத்துக் கொண்டும் பாடுவாயாக. அப்போது பாவம் என்னும் பறவைகள் பறந்தோடிப் போகும்.

✦ சேற்றில் புரள்வதுதான் குழந்தையின் இயல்பு. ஆனால், தாய் குழந்தையை அப்படியே விடாமல் குளிக்கச் செய்து சோறூட்டுவாள். அதுபோல பாவம் செய்வது மனித இயல்பு என்று கடவுள் விட்டுவிடுவதில்லை. கடைத்தேற்றும் வழிமுறைகளை அருள்செய்கிறார்.

✦ நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாமே உண்டு. நம்பிக்கை இல்லாதவனுக்கோ ஒன்றுமே இல்லை. நம்பிக்கை தான் வாழ்வு. வேண்டாத சந்தேகமோ, மனிதனை அழிவுப்பாதையில் கொண்டு சென்று விடும்.

# டில்லி டேர்டெவில்ஸ் அணியின் பயிற்சியாளர் கிர்ஸ்டன் நீக்கம்



ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இடம் பெற்றுள்ள டில்லி டேர்டெவில்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக, இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளரான தென் ஆபிரிக்காவின் கேரி கிர்ஸ்டன் 2013 ஆம் ஆண்டு முதல் இருந்து வந்தார். கிர்ஸ்டன் பயிற்சியில் டில்லி டேர்டெவில்ஸ் அணி கடந்த போட்டியில் 7ஆவது இடம் பெற்றது. குறிப்பிடத்தக்க வெற்றி எதுவும் பெறவில்லை. 2016ஆம் ஆண்டு வரை ஒப்பந்தம் இருக்கும் நிலையில் கிர்ஸ்டன் தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக புதிய பயிற்சியாளராக யாரை நியமிப்பது என்று டில்லி டேர்டெவில்ஸ் அணி இன்னும் முடிவு செய்யவில்லை எனறு தெரிவிக்கப்பட்டுள்ளது.(க)

# சர்வதேச போட்டியில் மீண்டும் ஸ்மித்



டெஸ்ட் கிரிக்கெட்டில் நம்பர் வன் அணியாக இருக்கும் தென்னாபிரிக்கா இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரை 0-3 என இழந்தது. முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளும் மூன்று நாட்களுக்குள் முடிந்தது.

இது தென் ஆபிரிக்காவின் முன்னாள் கப்டனும், தொடக்க பட்ஸ்மேனும் ஆன ஸிமித்தை பெரிதும் பாதித்துள்ளது. இந்த தோல்வியால் நான் மீண்டும் சர்வதேச போட்டிக்கு திரும்ப சிந்தித்து வருகிறேன் என்று கூறியுள்ளார்.

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்வதற்கு முன் தென் ஆபிரிக்கா அணி வெளிநாட்டு மண்ணில் 9 ஆண்டுகளாக எந்த தொடரையும் இழந்ததில்லை. இந்த பெருமைக்கு முன்னாள் கப்டன் ஸ்மித்து தான் முக்கிய காரணம். இவரது காலத்தில்தான் டெஸ்ட் தர வரிசையில் தென்ஆபிரிக்கா முதல் இடம் பிடித்து அசைக்க முடியாத அணியாக இருந்தது.

அதற்கு ஸ்மித், கல்லிஸ் ஆகியோரின் பட்டிங்கும், ஸ்டெயினின் அபார பந்து வீச்சும்தான் காரணம். 9 ஆண்டு சாதனையை இந்த அணி சிதைத்ததால்தான் ஸ்மித் ஆதங்கத்தில் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

விரைவில் மாஸ்டர்ஸ் சம்பியன்ஸ் லீக் தொடர் நடைபெற இருக்கிறது. இதில் விர்கோ சுப்பர் கிங்ஸ் அணிக்காக ஸ்மித் விளையாட உள்ளார். இந்தியாவிற்கு எதிராக தென்னாபிரிக்கா படுதோல்வி அடைந்ததுள்ளது. இதனால் நான் மீண்டும் அணிக்கு திரும்ப சிந்தித்து வருகிறேன் என்று 34 வயதாகும் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஸ்மித் கூறுகையில்,

"மாஸ்டர் சம்பியன் லீக் தொடர் சர்வதேச போட்டிக்கு திரும்புவதற்கு முக்கிய அடித்தளமாக இருக்கும். தற்போது எனக்கு 34 வயதாகிறது. 33 வயதில் நான் ஓய்வு பெற்றேன்.

நான் இன்னும் 3 அல்லது நான்கு ஆண்டுகள் விளையாட முடியும் என்ற கேள்விகள் வெளிப்படுகிறது. என்னால் முடியும் என்று எனக்குத் தெரியும். சர்வதேச போட்டிக்கு திரும்ப இந்த லீக் தொடரை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார்.(க)

# ஆஸ்கார் பிஸ்டோரியஸ் விடுதலை தென்னாபிரிக்க நீதிமன்றம் உத்தரவு



காதலியை கொலை செய்த வழக்கில் சிறை தண்டனை விதிக்கப்பட்ட தென் ஆபிரிக்க மாற்றுத் திறனாளி ஓட்டப்பந்தய வீரர் ஆஸ்கர் பிஸ்டோரியஸ்(28) நேற்று ஜாமினில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தென் ஆபிரிக்க தலைநகர் ஜோகனஸ்பர்க்கில் ஆஸ்கர் பிஸ்டோரியஸ் வசித்து வந்தார். பிஸ்டோரியஸின் வீட்டில் கடந்த ஆண்டு பெப்ரவரி 14 ஆம் திகதி அவரது காதலி ரீவா ஸ்டீன்கேம்ப் (29) இறந்து கிடந்தார். இதுதொடர்பாக பிஸ்டோரியஸ் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

விசாரணையின்போது அவர் கூறுகையில், வீட்டிற்குள் திருடன் புகுந்து விட்டதாக நினைத்து சுட்டதாகவும், அதில் ரீவா சிக்கிக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

பிரட்டோரியா உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இவ்வழக்கின் விசாரணை முடிந்ததையடுத்து, கடந்த ஆண்டு, ஒக்டோபர் 21-ஆம் திகதி தீர்ப்பு வழங்கிய நீதிபதி, தன் காதலியை ஆஸ்கர் திட்டமிட்டு கொலை செய்யவில்லை என்று அறிவித்தார்.

ஆனால், அஜாக்கிரதையாக செயற்பட்டுள்ளார் என்று கூறி அவருக்கு 5 வருட சிறை தண்டனை விதித்தார். இதையடுத்து, அவர் சிறையில் அடைக்கப்பட்டு தண்டனை அனுபவித்து வந்தார்.

அந்நாட்டு சட்டப்படி ஆபத்தான குற்றவாளி அல்லாத ஒருவர் 6-இல் ஒரு பங்கு தண்டனையை அனுபவித்தால் போதும். கடந்த ஜூன் மாதமே பிஸ்டோரியஸ் பரோலில் விடுதலை செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும் அவர் விடுதலை செய்யப்படுவதில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வந்தது.

இந்நிலையில், அவர்மீதான பிறருக்கு மரணம் விளைவித்த குற்றச்சாட்டை கொலைக்குற்றச்சாட்டாக உயர்த்தி தென்னாபிரிக்க உயர் நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை அறிவித்தது.

இதற்கிடையில், தன்னை ஜாமினில் விடுவிக்க வேண்டும் என அவர் தாக்கல் செய்த மனுவின் மீது நடைபெற்றுவந்த விசாரணையில் ஆஸ்கார் பிஸ்டோரியஸை ஜாமினில் விடுதலை செய்யுமாறு நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (க)

# தமிழக மக்களுக்கு தீபிகா நிதியுதவி



தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, ஸ்குவாஷ் வீராங்கனை தீபிகா பல்லிக்கல் ரூ.2 லட்சத்தை வழங்கியுள்ளார்.

தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பலரும் தங்களால் இயன்ற உதவிகளை செய்து வருகின்றனர். இந்நிலையில் ஸ்குவாஷ் வீராங்கனையான தீபிகா பல்லிகல் ரூ.2 இலட்சத்தை வழங்கியு ள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், மழை வெள்ளத்தால் சென்னை நகரம் ஒரு தீவாக மாறியிருப்பது வருத்தமளிப்பதாக உள்ளது.

சென்னை மக்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன். முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ரூ.2 லட்சத்தை வழங்க விரும்புகிறேன் என்று கூறியுள்ளார். (க)



**முதலமைச்சர் வெற்றிக்கிண்ண சதுரங்க சுற்றுப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சதுரங்க சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்ற 94 மாணவர்களும் மாகாண மட்டத்தில் நடைபெற்ற பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று சம்பியன்களான 41 மாணவர்களுமாக மொத்தம் 135 மாணவர்கள் பதக்கம், சான்றிதழ் மற்றும் கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். அத்துடன் இவர்களைப் பயிற்றுவித்த சதுரங்க பயிற்றுநர் தினகராசா இராஜசிங்கம் விசேட உடற்கல்வி ஆசிரியர் கந்தையா முதலிக்குட்டி ஆகியோரும் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்து தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் கு.கிருஸ்ணகுமாரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். (க-29)**

# படையினரின் அனுசரணையில்...

உங்கள் முன் சமர்ப்பிக்க ஆசைப்படுகின்றேன். வன்மம் என்பது எமது மனங்களிலேயே உறைந்து கிடக்கின்றது. மனதில் இருக்கும் வன்மந்தான் மறைவாகவும் மன்றிலும் அரங்கேறுகின்றன. இதை நாங்கள் உணர்ந்து கொள்ளல் அவசியம். சிறு வயதில் இருந்தே எமது மனங்களில் வெறுப்பும், வன்மமான தப்பெண்ணங்களும் விதைக்கப்படுகின்றன. சாதி வழியில், சமய வழியில், பால் வழியில், இனவழியில் பிழையான எண்ணங்கள் எம் மனதில் விதைக்கப்படுகின்றன.

1980களில் நான் மல்லாகம் மாவட்ட நீதிபதியாக இருந்தபோது எனது நண்பர் ஒருவரின் மகன் எனக்குக் கூறியது ஞாபகத்திற்கு வருகின்றது. ஒரு இயக்க இளைஞர் தனது கல்லூரி நண்பர்களைக் காண அவர் படித்த பழைய கல்லூரிக்குச் சென்றிருக்கின்றார். அவர்கள் கல்லூரிக்கு வெளியில் பேசிக் கொண்டிருக்கும் போது சில மாணவியர் அவ்வழியாகச் சென்றுள்ளார்கள்.

அவர்களைப் பற்றி இழிவாகவும் பால் ரீதியாகவும் பேசிப் பழித்திருக்கின்றார்கள் அம்மாணவர்கள். அடுத்த சில நாட்களுக்குப் பின்னர் இயக்க இளைஞர் அங்கு வந்த போது உடலில் காயக்கட்டுக்களுடன் வந்திருந்தார். ஏன் என்று கேட்ட போது தனக்குச் செமையடி கிடைத்ததாகவும் பெண்களைப் பழித்தால் இதுதான் தண்டனை என்று கூறப்பட்டதாகவும் அறிவித்தார். ஆகவே அக்கால கட்டத்தில் வன்சொற்களும் வன்முறைகளும் வன்மையாகவே கண்டிக்கப்பட்டன.

அதனால்தான் நீண்ட காலமாகப் பெண்கள் எதுவித அச்சமோ அல்லது பயமோ இன்றி பகல் நேரத்திலும் சரி, இரவு நேரங்களிலும் சரி தனியாகவோ அன்றி கூட்டாகவோ தாம் விரும்பிய இடங்களுக்கு விரும்பிய நேரத்தில் எதுவித பிரச்சினைகளும் இன்றி சென்றுவரக் கூடிய ஒரு சூழ்நிலை மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இப்பகுதியில் காணப்பட்டது.

அதே போன்று வீட்டிலும் ஆணாதிக்கம், பெண் அடிமைத்தனம் போன்ற சச்சரவுகள் எழாதிருக்க வன்தண்டனைகள் காரணமாக அமைந்தன. வன்முறைக்கு எதிராகப் பயத்தையே ஏற்படுத்தி அதைக் கட்டுப்படுத்தினார்கள் நம் இளைஞர்கள். அதைச் சரியோ பிழையோ என்று நான் கூற வரவில்லை. வன்சிந்தனைகள், வெறுப்பெண்ணங்கள், தப்பெண்ணங்கள எழாது வாழக்கூடிய ஒரு சூழலையும் நாங்கள் ஏற்படுத்தலாம் என்றுதான் நான் கூறவருகின்றேன்.

ஆனால் இப்பொழுது பெண்களுக்கெதிரான நடவடிக்கைகள் சம்பந்தமான வன்தடுப்புமுறை போய் தேக ரீதியாகவும் மனோ ரீதியாகவும் வன்செயல்களில் ஈடுபடக்கூடிய ஒரு சூழலை யாரோ வேண்டுமென்றே உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்களோ என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

நீண்ட கால யுத்தம் முடிவுக்குக் கொண்டு வந்து ஓரிரு வருடங்களுக்கு உள்ளேயே நிலைமைகள் மிகக் கேவலமாக மாற்றம் பெற்று விட்டன. இதற்குப் பல உதாரணங்களை உங்கள் முன் வைக்கலாம். புங்குடுதீவு வித்தியாவின் கொலையிலிருந்து உடுவில் மூதாட்டியின் கொலை வரை பல்வேறு கொலைகள் வயது வித்தியாசங்கள் இன்றி நடைபெற்றுள்ளன. நான்கு வயதே நிரம்பிய சிறு குழந்தை கூட காமுகர்களின் ஈனச் செயலுக்குப் பலியானதை பத்திரிகைகள் வாயிலாகவும் ஏனைய ஊடகங்கள் மூலமாகவும் அறியக் கூடியதாக இருந்தது. அது மட்டுமல்ல. வீட்டிலே பெண்களுக்குக் கணவர்களினால் துன்புறுத்தல், பெண்களுக்குப் பெண்களாலேயே துன்புறுத்தல், பால் ரீதியான பாதிப்புக்கள், வன்புணர்வுகள் எனப் பல்வேறு வகையான துன்புறுத்தல்கள் இடம்பெற்று வருவதை அறியக் கூடியதாக உள்ளது.இந்தியா போன்று சீதனக் கொடுமை இங்கு பெரியளவில் இலலாத போதும் பெண்கள் மீதான வன்முறை வலுப்பெற்றிருப்பது மனதிற்குக் கவலை தருகின்ற ஒரு விடயமாக உள்ளது.

இவற்றை நாம் ஆழமாக ஆராய முற்படுகின்ற போது எம்மிடையே பல தீய செயல்கள் நன்கு திட்டமிடப்பட்டு வேண்டுமென்றே எமது இனத்தை அழிப்பதற்காக அரங்கேற்றப்படுகின்றனவோ என்று கேட்க வேண்டியுள்ளது. இப்போது தினசரி பத்திரிகைகளைப் பார்க்கும் போது மாதகலில் 100 கிலோ கஞ்சா கைப்பற்றல், மன்னாரில் போதைப்பொருளுடன் கைது, காக்கைதீவில் கஞ்சா கைப்பற்றல் எனச் செய்திகள் குவிந்த வண்ணம் உள்ளன. மாதகலில் உள்ள மக்கள் கஞ்சாத் தோட்டம் வளர்க்கின்றார்களா? மன்னார் எவ்வாறு போதைப் பொருள் விநியோகத் தலைமையகம் ஆகியது? எவ்வாறு இப் போதைப் பொருட்கள் இங்கு கொண்டுவரப்படுகின்றன? வடமாகாணத்தைச் சுற்றி ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இராணுவத்தினர் இரவு பகலாகக் கடமையில் உள்ளனர். அதற்கும் மேலாக பொலிஸார் பொது மக்கள் பாதுகாப்புத் தொடர்பாகச் சேவைகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் அனைவரதும் கண்களில் மண்ணைத் தூவி விட்டா இப் போதைப் பொருட்கள் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பிற நாடுகளில் இருந்து இங்கு எடுத்து வரப்படுகின்றன? அல்லது இவர்களின் அனுசரணையுடன்தான் இவை இங்கு எடுத்து வரப்படுகின்றதா என்ற ஐயப்பாடு எம்முள் எழுகினறன.

கடந்த சில மாதங்களாக எமக்கு கிடைக்கப்பெற்ற உறுதிப்படுத்தப் படாத செய்திகளின் படி இங்கு கடத்தி வரப்படுகின்ற போதைப் பொருட்கள் அனைத்தும் பிற இடங்களில் இருந்து இங்கு வந்து காவற் கடமைகளில் ஈடுபட்டிருப்போரின் அனுசரணை உடனேயே மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரியவருகின்றது. அதுமட்டுமல்ல அவற்றை பாடசாலைகளில் கல்விகற்கின்ற மாணவர்கள் மத்தியில் விநியோகம் செய்வதில் அதிக அக்கறை காட்டப்படுகின்றது. ஒரு சில மாணவர்கள் முதலில் இப் போதைப் பொருட்கள் பாவனைக்குப் பயிற்றப்பட்டு பின்னர் அவர்களின் உதவியுடன் பாடசாலை மட்டங்களில் இந்தப் பாவிப்பானது பெரியளவில் அரங்கேற்றப்படுகின்றன என்று அறியவருகின்றது.

இவற்றிற்கு என்ன காரணம் என நாம் ஆராய்வோமானால் தமிழ் மக்கள் ஒழுக்க சீலர்களாகவும் பண்பாடு உடையவர்களாகவும் கல்வியில் சிறந்து விளங்குபவர்களாகவும உலகம் முழுவதிலும் வியாபித்திருப்பவர்களாகவும் இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாத அல்லது ஏற்றுக் கொள்ள விரும்பாத சிலர் போதைப் பொருள் பாவனையை எம்மிடையே அறிமுகப் படுத்தி வருகின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

# இராணுவத்திடம் ஒப்படைத்த...

இன்னமும் காணவில்லை என அவர்களது தாய்மார் மற்றும் மனைவிமார் அழுது புலம்பியுள்ளனர்.

நேற்றையதினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர்கள் கண்ணீருடன் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு மே மாதம் பதினேழாம் திகதியன்று அதிகாலை 5.30 மணியளவில் ஓமந்தையில் வைத்து எனது கணவனான முத்துலிங்கம் ஞானசெல்வம் என்பவரை இராணுவம் பிடித்துச் சென்றது.

ஆனால் இதுவரை எனது கணவனை காணவில்லை என கிளிநொச்சியை சேர்ந்தவரும் தற்போது அம்பாறையில் வசித்து வருபவருமான ஞானசெல்வம் செல்வராணி தெரிவித்துள்ளார்.

எனது பிள்ளைகள் மூன்று பேரில் இருவர் சுனாமியில் இறந்து விட்டனர் கடைசி மகன் தற்போது புலமைப்பரிசில் பரட்சையில் தோற்றியுள்ளார்.

எனது மகனின் படிப்பு செலவுகள் மற்றும் குடும்ப செலவுகளுக்காக கோழி வளர்ப்பில் ஈடுபட்டேன். ஆனால் அது தோல்வியில் முடிய தற்போது கூலி வேலைக்கு சென்று வருகின்றேன் என்கிறார் அந்த தாய்.

இதேபோல் தெய்வேந்திரம் விஜயராஜ் என்பவரை முள்ளிவாய்க்கால் ஆனந்தபுரத்தில் வைத்து 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இராணுவம் தமது கண்முன்னால் பிடித்து சென்றதாகவும் இதுவரை தனது கணவனை காணவில்லை என அவருடைய மனைவி தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு இரண்டு பிள்ளைகளின் தந்தையாரான கதிர்காமத்தம்பி செல்வரத்தினம் எனும் பெயருடைய நபரை இராணுவம் பிடித்து சென்றது. ஆனால் இதுவரை எனது கணவர் எங்கு உள்ளார்? என்ன செய்கிறார்? என்பது தெரியவில்லை. நானும் பிள்ளைகளும் 'அவர் இல்லாமல் பெரிதும் கஷ்டப்படுகின்றோம் என இன்னொரு தாய் கூறினார்.

2008 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி அம்பாறையில் உள்ள எமது வீட்டிற்கு வந்த முன்னாள் ஜனாதிபதியின் இணைப்பாளர்களில் ஒருவரான இனிய பாரதி என்பவர் எனது மகனை விசாரணைக்காக பிடித்து சென்றார்.

ஆனால் இதுவரை எனது மகன் எங்கே என்று கூறப்படவில்லை. கேட்க சென்றபோது நானும் தாக்குதலுக்குள்ளானதாக அம்பாறையை சேர்ந்த தாயொருவர் கூறினார்.

தனது மகனான திருமால் திருச்செல்வம் இருபத்து மூன்று வயதின் போது பிடித்து செல்லப்பட்டதாகவும் ஆனால் இது வரை எனது மகனுக்கு என்ன நடந்தது என்று யாராலும் கூறப்படவில்லை எனவும் அந்த தாய் மேலும் கூறினார். (செ-4)

# நாடு முழுவதும்...

மணிக்கு 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசியதாகவும் காலநிலை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர் மழை காரணமாக பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பல இடங்களில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை காரணமாக நாட்டில் உள்ள பெரிய நீர்த்தேக்கங்களும் குளங்களும் திறந்துவிடப்பட்டுள்ளது. எனவே அவற்றிற்கு அருகாமையில் வாழும் மக்கள் கவனத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். நீர்த்தேக்கங்களும் குளங்களும் திறந்து விடப்பட்டுள்ள நிலையில் பல இடங்களில் வீதிகளும் நீரில் மூழ்கி காணப்படுகின்றன.

மேலும் மட்டகளப்பு, அம்பாறை, கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் கன மழை தொடர்ச்சியாக பெய்து வருகிறது.

கொழும்பின் வீதிகள் பல நீரில் மூழ்கியுள்ளமையால் பிரதான வீதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

வடக்கு, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதேவேளை, மழைப்பொழிவு 150 மில்லிமீட்டருக்கும் அதிகமாக இருக்கும் எனவும் இன்றைய தினம் 100 மில்லிமீட்டருக்கும் அதிக மழைப் பொழிவை எதிர்பார்க்க முடியும் எனவும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (செ-12)

# யாழில் எச்.ஐ.வி...

கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்பட்ட எயிட்ஸ் நோய் இன்று எமது நாட்டிலும் அதிகரித்து காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் வெளிநாடுகளிலிருந்து நாட்டிற்கு வருபவர்கள் எயிட்ஸ் நோய் பரவக் காரணமாக இருந்த நிலையில், தற்போது எமது நாட்டிலேயே ஒரு பிரதேசத்தில் இருந்து இன்னோர் பிரதேசத்திற்கு எயிட்ஸ் பரவும் நிலை உருவாகியுள்ளது.

மேலும் யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் வடக்கில் எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இந்த எண்ணிக்கை அதிகமாக உள்ளதுடன் அதற்கு அடுத்ததாக கிழக்கு மாகாணத்திலும் அதிகமாக காணப்படுகின்றது.

இந்நிலையில் எயிட்ஸ் நோய்க்கான பரிசோதனைகளை மேற்கொள்ள பலர் தயங்கும் நிலையில், வடமாகாண சுகாதார அமைச்சினால் யாழ்ப்பாணத்தில் புதிய அணுகும் வசதிகளை கொண்ட நூலகம், உணவகங்கள் மற்றும் மக்களின் தேவைகள் காணக் கூடிய அமைப்புகளை கொண்ட கட்டடத்தொகுதிகளுடன் தமது இரத்த மாதிரிகளை கொடுத்து எச்.ஐ.வி. தொடர்பான பரிசோதனையை செய்யக்கூடிய பரிசோதனை நிலையத்தினை அமைக்க திட்டமிட்டுள்ளோம்.

அது சிறப்பாக இயங்கக் கூடிய நிலையில் அதற்கு அடுத்ததாக வடமாகாணத்தில் வவுனியாவில் அமைக்கலாம் என நான் கருதுகின்றேன்.

இது தொடர்பில் இங்குள்ள வைத்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார். (செ-12)

# அதிகாரத்தை...

இதன்மூலம் பெரும்பாலானவர்கள் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத்திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்பத்தில் 23 வீதமான சிங்களவர்களே அரசியல் தீர்வுத்திட்டத திற்கு ஆதரவாக இருந்ததாகவும் பின்னர் அந்த எண்ணிக்கை 68 வீதமாக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

வெண்தாமரை அமைப்பு பின தங்கிய கிராமங்களுக்குச் சென்று அதிகாரப் பகிர்வின் அவசியத்தை வலியுறுத்தியதாகவும் இதனால் சிங்கள மக்கள் அதனைப் புரிந்து கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுக்கு பொறுப்பு கூறுதல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகியன மிகவும் சவால் மிக்கது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கருத்துச் சுதந்திரம், மதச் சுதந்திரம், மத வழிபாட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய வகையில் மேற்படி அரசியல் தீர்வுத்திட்டம் அமைய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

# ஜனாதிபதி...

ம்பமாகி சுதந்திர சதுக்கம் வரை சென்று, அங்கு சர்வதேச ஊழல் எதிர்ப்பு தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதன் பின்னர் ஊழல் அற்ற கலாசாரத்தினைக் கட்டியெழுப்புவது தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து பல வேலைத்திட்டங்களை மேற்கொள்ள தீர்மானித்துள்ளன.

'Zero Tolerance for Corruption' என்பதே இந்த வேலைத்திட்டத்தின் பெயர். இதன் போது இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்ப்பது குறித்து மக்களுக்கு தெளிவூட்டுதல் குறித்து அதிக அவதானம் செலுத்தப்படவுள்ளது.

மேலும் இது குறித்த வேலைத் திட்டங்கள் சில அடுத்த வருடம் முழுவதும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

# ஜெயக்குமாரி...

ந்தனைகளுடன் கடந்த பங்குனி மாதம் பிணையில் விடுவிக்கப்பட்ட பாலேந்திரன் ஜெயக்குமாரி உள்ளிட்ட 11 சந்தேக நபர்களின் வழக்கு நேற்றையதினம் கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்ற நீதிபதி அருனி ஆட்டிகல முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

குறித்தவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேக நபர்கள் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி எம்.கணேஸ்வரன்,

சந்தேக நபர்களின் தேசிய அடையாளஅட்டை, தொலைபேசி, வங்கிக் கணக்கு புத்தகம் உள்ளிட்ட பலதரப்பட்ட ஆவணங்களை பயங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவினர் இதுவரை மீளஒப்படைக்கவில்லை எனவும் அவற்றை வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

அதற்கிணங்க விசாரணைக்கு தேவைப்படாத சான்றுப் பொருட்களை சந்தேகநபர்களிடம் மீள ஒப்படைக்குமாறு பயங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்குகளில் 9 சந்தேக நபர்களின் வழக்கினை எதிர்வரும் ஜனவரி மாதம் 27 ஆம் திகதிக்கும் ஏனைய 2 சந்தேக நபர்களுடைய வழக்கினை மார்ச் மாதம் 16 ஆம் திகதிவரைக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் கைதுசெய்யப்பட்ட மேலும் 3 சந்தேகநபர்கள் இதுவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

## சிறுநீரகம் தேவை

B- (நெக்கற்றிவ்) அல்லது O- (நெக்கற்றிவ்) கொண்ட நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவரிடம் இருந்து சிறுநீரகம் தேவைப் படுகின்றது.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
(C-2915)

தொடர்புகளுக்கு:
0777278677
0772508568
0776000076
0769111682

## Architectural CAD Center

Prsonal and Group Classes
Jaffna - Vavuniya - Colombo

**Auto CAD**
2D-drawing & 3D Modeling

Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)
Cert. in Auto CAD [Software (2D &3D)]
University of Peratheniya
Cert. in Auto CAD [Advance 3D - Modeling]
University of Moratuwa
Cert. in Auto CAD [2D-Drawing & 3D-Modeling]
Open University of Sri Lanka
Cert. in Auto CAD(1st Class)[2D&3D]
University of Colombo
Link:0775116320-0718617972

## English language G.C.E (O/L) 2016

New Batch
Commences on
9th of Dec 2015 At 5.00pm
No. 886, Hospital road, Jaffna.
Further details
Contact : 077 9352 999
(2698)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி நீர்வேலியில் அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள; பழைய தபாற்கந்தோர் ஒழுங்கையில் இருந்து 50M தூரம் அளவில் நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட வீட்டுடன் கூடிய 21/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-0776618790
(2705)


# இல.அகதிகளு...

முகாமில் சுமார் 350 குடும்பங்களைச் சேர்ந்த இலங்கை அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.இந்த நிலையில், ஏற்பட்ட வெள்ளம குறித்த பகுதியை வெள்ளக்காடாக மாற்றிய நிலையில், அங்குள்ள அகதிகளுக்கு உணவு வழங்குவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

சிறு குழந்தைகளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள இங்குள்ள அகதிகள் உணவிற்கு என்ன செய்வதென்று தவிக்கின்றனர்.

எனவே உதவும் மனப்பான்மை உள்ளவர்கள் யாராக இருந்தாலும், அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப்பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்கான பால்மா போன்றவற்றை கொடுக்க தயாராக இருப்பின் நேரில் வந்து அதனைக் கையளிக்கவேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (செ-12)

# தொலைபேசி...

ணியில் உள்ள விதவைப் பெண்களின் பாதுகாப்புக்காகக் கொடுக்கப்படுவதாகக்கூறி வழக்கப்பட்டு வருகின்றது. அவற்றை இயக்கவும் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகக் கேள்வி.

பயிற்றப்பட்ட பின் சந்திப்பிடங்களுக்குச் சரசமாட தொலைபேசி மூலம் அழைக்கப்படுகின்றார்கள். போகாதிருக்க முடியாது. போய வந்து பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ய முடியாது. முறைப்பாடுகளும் ஏற்கப்படாதாம்.

இன்றைய நிலைஇது. நாங்கள் எங்கள் இளைய சமுதாயத்தினரையும் பெண்களையும் காப்பாற்ற வேண்டிய ஒரு காலகட்டமாக இன்றைய காலம் பரிணமித்துள்ளது.

எனவே தான் நான் செல்லும் இடங்களிலெல்லாம் இவ் விடயங்கள் பற்றியும் மாணவ சமுதாயம் எதிர்நோக்கும் சவால்கள் பற்றியும அவர்கள் மீது ஆசிரியர்களும் பெற்றோரும் காட்ட வேண்டிய அன்பையும் அனுசரணையையும் பற்றிப் பேசி வருகின்றேன்.

எம்முன் விரிந்து கிடப்பதோ பூதாகாரமான ஒரு பிரச்சினை. இதனை நாம் விரைந்து முடிவுக்கு கொண்டுவராவிடின் எமது இளைய சமுதாயமும் பெண் வர்க்கத்தினரும் இங்கு பாதுகாப்புடன் வாழ முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படக் கூடும். ஏற்பட்டுள்ளது என்று கூடக் கூறலாம்.

எனவே அன்பார்ந்த பெற்றோர்களே, மதிபார்ந்த பெண் சகோதரிகளே! பாடசாலை மாணவ மாணவியர்களே, குழந்தைகளே நீங்கள் யாவரும் மிகவும் விழிப்புடன் இருங்கள். குழந்தைகளின் நடவடிக்கைகள் தொடர்பில் எல்லோரும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

அவர்களின் செயல்களில் மாற்றங்கள் தெரிகின்ற போது விரைந்து செயற்பட்டு அவர்களை அழிவுப் பாதையில் இருந்து மீட்டெடுங்கள். அன்பார்ந்த குழந்தைகளே! நீங்கள் இனந்தெரியாதவர்கள், அந்நியர்களுடன் பழகுவதை இயலக்கூடியளவு தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உங்களுடன் இனிக்க இனிக்க பலர் பேச முற்படுவர். புதிய பதார்த்தங்களை உண்ணத் தருவார்கள்.தேவையற்ற ஆபாசக் காட்சிகளை உங்கள் முன் வைக்க முற்படுவார்கள். இவை எல்லாவற்றிலுமிருந்து தப்பிக் கொண்டு கல்வியையே கண்ணாகக் கொண்டு முன்னேற வேண்டியது உங்கள் பொறுப்பு. கல்வியில் கூடிய சிரத்தை எடுத்தீர்களானால் இவ்வாறு அறிமுகப்படுத்தப்படுகின்ற இந்த மாயைகள் அனைத்தும் கானல் நீர் போல மறைந்துவிடுவன.

எம்மனங்களில் மாண்பானது மலர்ந்தால மாதர் தம்மை இழிவு படுத்தும் மடமையை நாம் மட்டித்து விடலாம். ஆகவே வன் எண்ணங்களை நாம் நம் மனதில் இருந்து முதலில் விரட்டியடிப்போம். வலோத்காரத்திற்கு வித்திடும் வக்கிர வஸ்துக்களைப் புறந்தள்ளுவோம். வளமான எதிர்காலத்தை நாம் அமைக்க வேண்டுமானால் அதில் பெண்கள் கண்ணியமான ஒரு இடத்தைப் பெற வேண்டும்.

கண்ணியமாகப் பெண்கள் நடத்தப்பட வேண்டும். நடைமுறையில் பெண்களுக்கெதிராக நடந்து கொள்வதானது வன்புணர்வு, வன்செயல், பாலியல் தொல்லைகள், பெண சிறுமிகளைத் தவறாகப் பயன்படுத்தல் போன்ற பலதையும் உள்ளடக்கிய செயல்களாக அமைந்துள்ளன. இவற்றை நீக்கி பெண்களைப் பெருமையுடனும் பெறுமதியுடனும் நடத்தலாம் என்ற எண்ணத்தை நாங்கள் எம் மக்களிடையே பரப்புவது அவசியம்.

பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிக்க முடியும் என்பதை நாம் ஏற்க வேண்டும். மனதில் இருந்து முதலில் தவறான எண்ணங்கள் களையப்பட வேண்டும்.

எம்மைப் பெற்ற தாய்மார்களைப் போன்றவர்களே பெண்கள் என்ற எண்ணம் எம்மிடையே தலைதூக்க வேண்டும். பெண்களைக்கண்ணியமாக நடத்தினால் வாழ்வு வளம்பெறும், வருங்காலம் சிறப்பாக அமையும் என ம்தலமைச்சர் தெரிவிததார். (செ-4)

# கிளிநொச்சி...

ளுக்குள் நுழைந்தது. இதனால் கிளிநொச்சியில் பல கிராமங்களில் மக்கள் பெரும் அசௌகரியத்திற்கு ஆளாகியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன், சிவபுரம், ஆனந்தபுரம், கனகாம்பிகைகுளம், இரத்தினபுரம், திருவையாறு உள்ளிட்ட பகுதிகளில் கடும் மழையினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த நவம்பர் மாதத்திலிருந்து மாத்திரம் ஐந்தாவது முறையாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

எனினும் இம்முறை உயர்வான இடங்களில் உள்ள பல வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்துள்ளது. இதனால் நள்ளிரவு வேளையில் மக்கள் செய்வதறியாது தவித்ததாக குறிப்பிடுகின்றனர். தமது ஆவணங்கள், பொருட்களை வெள்ளத்தில் பாதுகாக்க பெரும் அசௌகரியப்பட்டதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆனந்தபுரம் கிழக்கிலும் ஆனந்தபுரம் மேற்கிலும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆனந்தபுரம் மேற்கில் உள்ள சில வீடுகளுக்குள் இடுப்பளவில் வெள்ளநீர் நுழைந்துள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருகின்றது. இதனால் மேலும் பாதிப்புக்கள் ஏற்படலாம் என மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி கனகாம்பிகை குளம் உடைப்பெடுக்கும் அபாயம் உள்ளமையால் திருவையாறு மற்றும் கனகாம்பிகை குள மக்களை இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுமாறு நீர்பாசன அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (செ-12)

# மாகாண சபை...

றும் மேல் மாகாண அபிவிருத்தி, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் நேற்றையத் தினம் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நாடாளுமன்றத்தைப் பலப்படுத்தியதைப் போன்று மாகாண சபைகளுக்கும உரிய அதிகாரங்களை வழங்கி மாகாண சபைகளையும் பலப்படுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் வட மாகாண சபையின் கடற்றொழில் அமைச்சிற்கு நன்னீர் மீன்பிடி தொடர்பில் மாத்திரமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், வட மாகாணத்தில் காணப்படும் பல குளங்கள் மத்திய அரசாங்கத்தின் கீழ் காணப்படுவதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை, வடக்கில் இடம்பெறுகின்ற மண் மற்றும் கிரவல் அகழ்வுகளைத் தடுக்கும பொறுப்பை பிரதேச செயலகங்களுக்கு வழங்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தல்களுக்கு முன்னர் எல்லை நிர்ணயத்தை சரியான முறையில் மேற்கொள்ள வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மக்களின் குடிப்பரம்பலை அடிப்படையாகக் கொண்டு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் எல்லை நிர்ணயத்தினை முன்னெடுக்க வேண்டும் என செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)


## கோசலா புடவை மாளிகை

தண்ணீரூற்று முள்ளியவளை



மாணவர்களுக்கான இலவச சீருடை வவுச்சர்களுக்கு இங்கு சீருடைகள் வழங்கப்படுகின்றன.
(சி-2912)

கோசலா புடவை மாளிகை
தண்ணீரூற்று
முள்ளியவளை
0778371266

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



(C-2916)

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

## என்றுமில்லாதவாறு ஆங்கில, தமிழ் மொழிமூலத்தில்

**Group Classes**

**Maths**

Gr.6- Gr.11

ஆங்கில மொழிமூலத்தில் விசேட பயிற்சி பெற்று, ஆங்கில மொழிமூல கற்பித்தலில் நியமனம் பெற்ற ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டல்

திரு.P.R.கயூரன் (யாழ். இந்து மகளிர் கல்லூரி)
திரு.A.S.ரஜீவ் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி)
திரு.R.S.மயூரன் (யாழ். இந்துக் கல்லூரி)

ஆரம்பம் : 10-12-2015
நேரம் : மு.ப 11.00 மணி
இடம் : கே.கே.எஸ் வீதி, யாழ். இந்துக் கல்லூரி அருகாமை

- ஒரு குழுவில் 15 மாணவர்கள் மட்டுமே
- மாதாந்த தவணைப் பரீட்சைகளும், தரப்படுத்தலும்
- அலகு ரீதியான விசேட கையேடுகள்
- ஒலிம்பியாட், கணித புதிர்ப் போட்டிகளுக்கான விசேட செயலமர்வு...
- சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட நேரசூசி...
- ஒவ்வொரு குழுவிற்கும் 02 ஆசிரியர்கள்.. (2718)

தொடர்புகளுக்கு : 0779000982 - 0774914332

## ஜீவக வாத தைலம்

Jeewaka Vata Thailaya

முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25ml-150ரூபா | 50ml-280ரூபா | 100ml-450ரூபா

Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara'Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567
(C-2910)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.